
நீலகிரி மாவட்டத்தில் கல்கி – II

கல்கி



நீலகிரிக்கும் அபாயம்!



Marvel
மார்வல்-இதம் தரும் தன்மை
காஞ்சிப்பட்டுப் போன்ற மென்மை.
Mudra:B:G:4417:1

தளபதி திடமதி பேசுகிறார்!



''நான் சொல்றேன் கேளுங்க... கோடிக்கணக்கான ரூபாய்கள் இங்கிருந்து ஸ்விஸ் வங்கிக்குச் செல்வதைத் தடுக்க ஒரே வழி நம் நாட்டிலேயே ஸ்விஸ் வங்கியின் பல கிளைகளைத் திறந்து விடுவதுதான்!''

— மு. கா. நெடுமாறன், காவேரிப்பட்டணம்.



''அரசாங்கத்தின் கோப்புகள் தேங்கிக் கிடக்கின்றன; மேஜையிலிருந்து நகர்வதேயில்லை என்கிறார்கள்! நான் சொல்கிறேன்... கன்வேயர் சிஸ்டம் கொண்டு வந்தால் எல்லாக் கோப்புகளும் தாமாகவே நகரத் துவங்கிவிடும்; யாரும் அப்போது குறை சொல்ல முடியாது!''

— ஹெச். எஸ். மணி, திருச்சி — 5..



''இறைவனால் காலணிகளைத்தான் படைக்க முடியும். அதற்கு இலவசச் செருப்புக் கொடுக்க முடியுமா? பற்களைத் தான் படைக்க முடியும். அதற்கான இலவசப் பற்பொடியை எங்கள் தலைவனால் தான் கொடுக்க முடியும்! மழை பொழியத்தான் கடவுளால் முடியும். ஆனால் இலவசப் பக்கெட்டை எங்கள் தலைவனால்தான் தர முடியும். எனவே, எங்கள் தலைவன் கடவுளுக்கும் கடவுளானவர் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்...''

— எஸ். டி. பாலசுப்ரமணியன், கமுதி.



''இந்தியக் கிரிக்கெட் அணி செமிஃபைனலில் தோற்றதற்கு முக்கியக் காரணம், பி. டி. உஷாவை டீமில் சேர்க்காததுதான். அவரைச் சேர்த்திருந்தால், விரைவாக ஓடிப் பல ரன்கள் எடுத்து இந்தியக் கிரிக்கெட் அணிக்கு வெற்றி தேடித் தந்திருப்பார் என்று கூறிக் கொள்கிறேன்....

— டி. சாலமன் சத்தியராஜ், ராணிப்பேட்டை.



''நாங்கள் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கி விட்டதாக மாற்றுக் கட்சியினர் சொல்கிறார்களாம்... பொருளாதாரத்தில் பின் தங்கியிருப்பது நாடு தானே தவிர, நாங்கள் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்!''

— வாசி ஜான், புது பம்பாய்.

நீலகிரிக்கும் அபாயம்!



* ராட்க்ளிஃப்



* கிருஷ்ணன்




* தென்னிந்தியாவிலேயே பெரிய பள்ளத்தாக்கு — கேத்தி.

'இதே வேகத்தில் காடுகள் அழிக்கப்பட்டு வருமானால், 2020 - ஆம் ஆண்டில் இமயமலைக் காடுகள் அனைத்தும் அழிந்து போய் இருக்கும்...' என்று அண்மையில் தாம் செய்த ஆய்வில் குறிப்பிட்டிருக்கிறார், ஜம்மு — காஷ்மீர் மாநிலச் சுற்றுப்புறச் சூழல் மையத்தின் இயக்குனரான எம். ஏ. கோவ்சா.

இமயமலைக் காடுகளுக்கே இந்தக் கதி தான் என்கிற போது, இங்கிருக்கும் மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள நீலகிரிக் காடுகளைப் பற்றிச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. "கடந்த பத்தாண்டு காலமாகத்தான் இங்குள்ள காடுகள் அதிவேகமாக அழிக்கப்பட்டு வருகின்றன...' என்று ரொம்பவும் வருத்தத்தோடு சொல்கிறார்கள், ஊட்டியில் நாம் சந்தித்த 'நீலகிரியைக் காப்பாற்றுங்கள்' என்ற அமைப்பின் தலைவரான கிருஷ்ணன் என்பவரும் வன விலங்குப் பாதுகாப்பு, மற்றும் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு அமைப்பின் துணைத் தலைவரான ராட்க்ளிஃப் (Radcliffe) என்பவரும். கடந்த ஆண்டு டிசம்பரில் நீலகிரிக்கு வந்திருந்த 'சிப்கோ' இயக்கத்தின் தலைவர் சுந்தர்லால் பகுகுணாவும் நீலகிரிக் காடுகளின் அழிவைக் கண்டு மனம் நொந்து போயிருக்கிறார்!

ஆம்; நீலகிரிக் காடுகள் எந்த அளவுக்கு அழிக்கப்பட்டிருக்கின்றன என்பது கடந்த மூன்றாண்டுகளாக நீலகிரியில் பெய்த சராசரி மழையளவைப் பார்த்தாலே பளிச் சென்று புரியும். கடந்த 85 - லிருந்து 87 — வரை நீல கிரியில் பெய்திருக்க வேண்டிய தென்மேற்குப் பருவ மழையின் சராசரி அளவு 353.77 மி. மீ. ஆனால், பெய்துள்ளதோ, 234.14 மி. மீ.தான். இதே நிலை தான் வடகிழக்குப் பருவ மழைக்கும். கடந்த 85 - லிருந்து சென்ற மாதம் வரை பெய்திருக்க வேண்டிய சராசரி அளவு 199.38 மி.மீ. ஆனால் பெய்துள்ளதோ, 157.93 மி.மீ.தான்!

இதன் காரணமாகத்தான் கடந்த எந்த ஆண்டிலும் பாதிக்கப்படாத அளவுக்கு இந்த ஆண்டின் ஆரம்பத்தில் நீலகிரி மாவட்டம் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டது. குறிப்பாகக் குந்தா பகுதியிலுள்ள சுமார் இருபதாயிரம் ஏக்கர் தேயிலையில்



• குந்தா பகுதி: தேயிலை பறிக்கப்பட்டு, பதப்படுத்த எடுத்துச் செல்லப்படுகிறது.

சுமார் பத்தாயிரம் ஏக்கருக்கு மேல் செடிகள் கருகிப் போயின! அதை நம்பி வாழ்க்கை நடத்திய சுமார் எட்டாயிரம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டார்கள்.

இப்படி ஆண்டுதோறும் நீலகிரி மாவட்டம் வறண்டு வருவதற்கு மரங்கள் வெட்டப்பட்டு வருவது மட்டும்தான் காரணமா என்றால், ''அது மட்டுமே காரணமில்லை...'' என்று அடித்துச் சொல்லுகிறார் முன்பு நீலகிரி எம். எல். ஏ. வாக (சுதந்திராக் கட்சி) இருந்த கே. போஜன்.

''நீலகிரி மாவட்ட வறட்சிக்கு இங்கு பயிரிடப்பட்டுள்ள யூகலிப்டஸ் மரங்களும் முக்கியக் காரணம். ஒரு பெரிய யூகலிப்டஸ் மரம், நாளொன்றுக்குப் பூமியிலிருந்து சுமார் ஐந்து டன் எடையுள்ள நீரை உறிஞ்சும் சக்தி படைத்தது. அதனால்தான் நீலகிரிக்கு வந்த ஆங்கிலேயர்கள், அப்போது நீலகிரி மாவட்டம் முழுமையும் வெறும் சதுப்புநிலக் காடுகளாகத் தண்ணீர்க் கசிவு நிறைந்து இருந்ததைக் கண்டு — பயிரிடுவதற்கு ஏற்ற நிலமாக மாற்ற ஆஸ்திரேலியாவிலிருந்து இந்த யூகலிப்டஸ் மரங்களைக் கொண்டு வந்து ஆங்காங்கே பயிரிட்டார்கள். அவை நீரை உறிஞ்சிச் சதுப்பு நிலங்களையெல்லாம் பயிரிட ஏதுவான நிலங்களாக மாற்றின.

''ஆனால் நம்மவர்களோ இந்த யூகலிப்டஸ் மரங்கள் பல வகைகளிலும் வியாபார ரீதியாக விலைபோவதைக் கண்டு, ஏராளமாகப் பயிரிட்டு, வளர்த்து, விற்பனை செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இந்த மரங்களின் அபாயம் பற்றிச் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பே, நான் அங்கம் வகித்த சட்ட மன்ற மதிப்பீட்டுக் குழு, டேராடூனிலுள்ள நமது வனத்துறை ஆய்வக விஞ்ஞானிகளோடு கலந்து பேசித் தனது ஆய்வறிக்கையில் எச்சரிக்கை செய்தது.

''ஆயினும் நம்மவர்கள் — அரசும் சரி, வனத்துறையும் சரி — எங்கள் ஆய்வறிக்கையைப் பற்றிக் கவலையே படாமல் யூகலிப்டஸ் மரங்களை நட்டுத் தள்ளிக் கொண்டே வந்தார்கள். அதனாலும் நிலத்திலுள்ள நீரெல்லாம் உறிஞ்சப்பட்டு — வறண்டு மழை மேகங்களையெல்லாம் உடனடியாக ஆகர்ஷித்து மழை பெய்யச் செய்யும் சக்தியை நீலகிரி மாவட்டம் சிறிது சிறிதாக இழந்து கொண்டே வந்துவிட்டது. இங்கு நல்ல மழை பெய்யாததால்தான் லோயர் பவானியிலும் நீர்வரத்துக் குறைந்துபோய், அதன் மூலம் கோவை, பெரியார் மாவட்டங்களில் பாசனம் பெறும் நிலங்களும் பாதிப்புக்குள்ளாக நேர்ந்துவிட்டது...

''அப்போது எங்கள் ஆய்வறிக்கையைக் கண்டு கொள்ளாத அரசு, இப்போது, இனி புதிதாக யூகலிப்டஸ் மரங்களை நடக் கூடாது என்று தடை விதித்து, அதற்குப் பதிலாகப் பைன் மரங்களைச் சிபாரிசு செய்திருக்கிறது. இந்தப் பைன் மரங்களும் யூகலிப்டஸ் மரங்களின் அளவுக்கு இல்லாவிட்டாலும் ஏராளமான அளவுக்கு நீரை உறிஞ்சக் கூடியவை என்பதுதான் இதில் வேடிக்கை...'' என்றார் போஜன்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, நீலகிரியை உள்ளடக்கிய மேற்குத் தொடர்ச்சி மலைக் காடுகளுக்கு, இமயமலைக் காடுகளைப் போன்றதொரு மிகமிகத் தொன்மையான பூமி வள இயல் (Geology) சிறப்பும் உண்டு. இந்தியாவிலுள்ள பதினைந்து வகைக் காடுகளில், எட்டு வகைக் காடுகள் நமது மேற்குத் தொடர்ச்சி மலையில்தான் இருக்கின்றன. பிரசித்தி பெற்ற ஸ்வீடன் நாட்டுக் காடுகளில் கூட மொத்தம் ஐம்பத்தாறு வகைத் தாவரங்கள்தான் இருக்கின்றன. ஆனால் நமது மேற்குத் தொடர்ச்சி மலைக் காடுகளிலோ மொத்தம் மூவாயிரம் வகைத் தாவரங்கள் இருக்கலாம் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அவற்றில் வெறும் ஐந்து சதவிகிதத் தாவர வகைகளின் பயன்களைத் தாம் நாம் இதுவரை கண்டுபிடித்திருக்கிறோம். மீதமுள்ளவற்றில் புற்று நோய்க்குக் கூட மருந்தாகும் தாவரங்கள் இருக்கக் கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகிறார்கள். மேலும், தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் நீர்மின் சக்தியில், முப்பத்தொன்பது சதம் நீலகிரியில் பெய்யும் மழையை நம்பித்தான் இருக்கிறது என்பது முக்கியமானது.

இந்தச் சூழ்நிலையில் காடுகளை அழிப்பதென்பது சுந்தர்லால் பகுகுணா சொல்வது போல, தற்கொலைக்குச் சமமானதுதான் என்பதில் சந்தேகமேயில்லை. ஆனால் காடுகளை அழிக்கும் சமூக விரோதிகள் ஆட்சியாளர்களின் — அதிகாரிகளின் ஆசி பெற்றவர்களாகவே இருந்தால் நாம் என்ன செய்வது? நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சுந்தர்லால் பகுகுணாவாக மாறி, மரங்களை நேசித்தாக வேண்டும். அவை சார்பில் போராட வேண்டும். வேறு வழி இல்லை!

— பிரின்ஸ்

அட்டையில்: ஊட்டியிலுள்ள (சாக்கடை நீர் கலந்து — சாக்கடைக் குளமாகவே நாற்றமடிக்கும்) ஏரி. வண்ணப்படமும் நீலகிரி மாவட்டம் தொடர்பான மற்ற படங்களும்: கே. வி. ஆனந்த்

“சினிமா என்பது வெறும் சப்தங்கள் அல்ல!!”



‘முள்ளும் மலரும், உதிரிப் பூக்கள், நெஞ்சத்தைக் கிள்ளாதே,’ போன்ற வெற்றிப் படங்களைத் தந்த டைரக்டர் மகேந்திரன், இடையில் ஏற்பட்ட தமது தோல்விக்கான காரணங்களை மனம் திறந்து பேசுகிறார்......

கேள்வி: சினிமா உலகுக்கு வரவேண்டும் என்ற ஆசை உங்களுக்கு எப்படி வந்தது?

மகேந்திரன்: கடந்த 60—களில் நான் காரைக்குடி அழகப்பா கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த சமயம், பொதுவாகவே நமது தமிழ் சினிமாக்களின் மேல் ஒரு வெறுப்பு இருந்தது. சினிமா என்பது இவை அல்ல. இவற்றைக் கண்ணை மூடிக் கொண்டு கூடப் பார்க்கலாம். அதாவது: வெறும் சப்தங்களைக் கொண்ட ரேடியோ நாடகங்கள் தான் இவை என்ற கணிப்புக்கு வந்திருந்தேன். எனது இந்தக் கருத்தை அப்போது எங்கள் கல்லூரி விழா ஒன்றுக்கு வந்திருந்த எம். ஜி. ஆர். அவர்கள் முன்னிலையிலும் பேசினேன். அவரும் அதை வரவேற்றுப் பேசினார். ஆக, எனது கருத்துக்கு ஓர் அங்கீகாரம் கிடைத்தால் ஒரு நல்ல சினிமாவை நானே எடுத்தால் என்ன என்ற எண்ணம் வளர ஆரம்பித்தது. சென்னைக்கு வந்து விட்டேன்!

கேள்வி: உங்கள் பெற்றோர் உங்களுக்கு உறுதுணையாக இருந்தார்களா?

மகே: அவர்களிடம் நான் சினிமா எடுப்பதற்காகச் சென்னை வருகிறேன் என்று சொல்லவில்லை. அதற்கு எங்களிடம் வசதி இல்லை. அதனால் சட்டக் கல்லூரியில் சேர்ந்து படிப்பதாகச் சொல்லி விட்டுத் தான் வந்தேன். பொருளாதார நிலை சட்டம் படிக்கவும் விடவில்லை. அதனால் 'இன முழக்கம்' என்ற பத்திரிகையில் சேர்ந்தேன். அந்தச் சமயத்தில்தான் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் மீண்டும் எம். ஜி. ஆர். அவர்களைச் சந்திக்க நேர்ந்தது. அவர் எனது ஆசையைப் புரிந்து கொண்டு, அப்போதுமுடியும்தருவாயில்இருந்தஅவருடைய 'ராஜா தேசிங்கு' பட ஷூட்டிங்கைக் கொண்டு போய்க் காண்பித்தார். அதைப் பார்த்தபோதும் 'இதுவா சினிமா? நிச்சயமாக இல்லை' என்ற எண்ணம் மேலும் உறுதிப் பட்டது. சினிமாக்காரர்களின் பழக்க வழக்கங்கள் கூட ஓர் அந்நியத் தன்மையையே தோற்றுவித்தன.

அதே சமயம் எம். ஜி. ஆர். அவர்கள் எனது நிலையைப் புரிந்து கொண்டு, தம்முடைய லாயிட்ஸ் ரோடு வீட்டிலேயே என்னைத் தங்கிக் கொள்ளச் சொன்னார். அப்போது அமரர் கல்கியின் பொன்னியின் செல்வனைக் கொடுத்து என்னை ட்ரீட்மெண்ட் எழுது என்று பணித்தார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. என்ன எழுதுவது? எப்படி எழுதுவது? இருந்தாலும் என் மனம் போன போக்கில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தேன்!

இந்நிலையில் எம். ஜி. ஆர். அவர்கள் என்னை அழைத்து, 'சாப்பாட்டுக்கெல்லாம் என்ன செய்கிறாய்?' என்று கேட்டார். நான், 'நண்பர்களின் உதவியால்தான் ஏதோ காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறேன்' என்று சொன்னேன். உடனே அவர் பதைத்துப் போய், மாதம் ஐந்நூறு ரூபாய் சம்பளம் என்று பணம் தர ஆரம்பித்தார்.

பிறகு பொன்னியின் செல்வனைப் பற்றி அவர் கேட்கவே இல்லை. அது எனக்குச் சந்தோஷமாக இருந்தாலும் உழைக்காமலேயேபணம்பெற்றுக்கொண்டிருக்கிறோமே என்ற குற்ற உணர்வு என்னை உறுத்தியது. அதனால் 'அடிமைகள்' என்ற நாடகத்தை எழுதினேன். அதை எம். ஜி. ஆர். நாடக மன்றம் திருச்சியில் அரங்கேற்றுவதாக இருந்தது. வெள்ளத்தால் தடைப்படவே, மனம் சோர்ந்து போனது. அதன் பிறகு ஜி. சகுந்தலா, தயாரிப்பாளர் கே. ஆர். பாலுவிடம் என்னை அறிமுகப்படுத்தி வைத்தார். 'நாம் மூவர்' கதையைச் சொன்னேன். மாதவன் அதை டைரக்ட் செய்வதாக இருந்தது. கதையைக் கேட்ட மாதவன், 'ஐயய்யோ இதுமாதிரியான சப்ஜெக்டுகளையெல்லாம் நான் ஹேண்டில் செய்ய மாட்டேன்' என்று சொல்லி விட்டார். இதற்கிடையில் 'காஞ்சித் தலைவன்' படத்தை டைரக்ட் செய்து கொண்டிருந்த காசிலிங்கம் அவர்களிடம் எம். ஜி. ஆர். அவர்கள் என்னை ஓர் உதவி டைரக்டராகச் சேர்த்துவிட்டார். அந்தப் படமும் எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. எனவே எல்லாமாகச் சேர்ந்து மனமுடைந்து எம். ஜி. ஆர். அவர்களிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் சொந்த ஊருக்கே மூட்டை கட்டிவிட்டேன்.

பிறகு தயாரிப்பாளர் பாலு என்னை மறுபடியும் சென்னைக்கு வரச் சொன்னதால் வந்தேன். சபாஷ் தம்பி, பணக்காரப் பிள்ளை, பாவம் வேண்டாம் போன்ற படங்களுக்குக் கதை — வசனம் எழுதினேன். இருந்தாலும் எனக்குப் பிடிக்கவில்லை. தயாரிப்பாளர் வேணுசெட்டியார் மூலம் சோ அறிமுகமானார். பழக்கமாக அது மலர்ந்தது. அச்சமயத்தில்தான் அவர் துக்ளக் பத்திரிகையை ஆரம்பித்தார். என்னையும் அதில் பணியாற்ற அழைத்தார். சுமார் மூன்றரை ஆண்டு காலம் துக்ளக்கில் பணியாற்றினேன். அது எனக்கு மிகப் பெரிய அனுபவங்களைக் கொடுத்தது.

நான் துக்ளக்கில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது ஆசிரியர் சோவைப் பார்க்க செந்தாமரை, எஸ். ஏ. கண்ணன் ஆகிய இருவரும் வந்திருந்தார்கள். அப்போது சோ இல்லை. அதனால் நான் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். பேச்சுவாக்கில் என்னை ஒரு கதை சொல்லச் சொல்ல, நான் 'இரண்டில் ஒன்று' என்ற தலைப்பில் ஒரு போலீஸ் ஆபீஸர் பற்றிய கதையைச் சொன்னேன். அவர்களுக்குப் பிடித்துப் போனது. நாடகமாகப் போட்டார்கள். அந்த நாடகத்தை சிவாஜி அவர்கள் பார்த்து விட்டு, அதில் தாமே நடிக்க ஆரம்பித்தார். அதுதான் 'தங்கப் பதக்கம்'! அதன் வெற்றியைக் கண்டு அதைச் சினிமாவாக எடுக்க என்னைத் திரைக் கதை வசனம் எழுதச் சொன்னார்கள். துக்ளக் வேலையை விட்டு விட்டுக் கதை வசனம் எழுதினேன். வெற்றிப் படமாகவே அது ஓடியது. எனினும் அது என்னுள் கருக் கொண்டிருக்கும் சினிமா.



அல்ல என்பதில் மிகவும் உறுதியாக இருந்தேன். அதனால் வெளியில் அது வெற்றி பெற்றாலும் என்னைப் பொறுத்தவரை, தங்கப் பதக்கம் ஒரு தோல்விதான் என்பதில் சந்தேகமே இல்லை.

இப்படிப் பேசும் எனக்கு எப்படி வாய்ப்புக் கொடுப்பார்கள்? அதனால் மனைவி, குழந்தைகளைச் சென்னையில் வைத்துக் கொள்ள இயலாமல் அவர்களை ஊருக்கே அனுப்ப நேர்ந்தது. மறுபடியும் துக்ளக்கில் போய் வேலை கேட்கவும் வெட்கம். 'மறுபடியும் உனக்குச் சினிமாச் சான்ஸ் கிடைத்தால் போக மாட்டாய் என்பதற்கு என்ன உத்தரவாதம்?' என்று சோ கேட்டால், என்ன பதில் சொல்ல முடியும் என்ற குற்ற உணர்வு. அதனால் தேவரிடம் போனேன். அவர் ஒரே வரியில் ஒரு கதை சொல்லச் சொன்னார். ஒரே வரியில் எப்படிச் சொல்வது? ஏதோ சொன்னேன். 'குப்பையப்பா' என்றார். பிறகு என் படிப்பு பற்றிக் கேட்க, நான் பி. ஏ. படித்திருப்பதாகச் சொன்னேன். 'அப்போ சுத்தமா லாயக்கில்லை' என்றார். 'படிப்புக்கும் கலைக்கும் சம்பந்தம் இல்லை' என்றேன். 'அப்படியானால் இரு' என்றார்.

தேவரிடம் கதை சொல்லுவது ஓர் இயந்திரத்தனமான செயல்தான் என்றாலும் அது ஒரு நல்ல பயிற்சியைக் கொடுத்தது. மற்றபடி அவருக்கு ஏற்ற கதை சொல்லித் திருப்திப்படுத்தும் மனநிலையில் நான் இல்லை. எனவே அங்கிருந்தும் வெளியேற வேண்டியதாயிற்று. பிறகு 'வாழ்ந்து காட்டுகிறேன்' படத்திற்கு வசனமெழுதினேன். அந்த வசனம் பற்றி மக்களிடையே பேசப்பட்டது. எனினும் கூட எனக்குத் திருப்தி தரவில்லை.

இந்நிலையில்தான் உமாசந்திரனின் 'முள்ளும் மலரும்' கதையைப் படித்தேன். அது எனக்கு மிகவும் பிடித்துப் போனது. மனத்திற்குள்ளாகவே அதை விஷுவலாக எப்படிக் காட்டுவது என்று படம் பிடித்துப் படம் பிடித்து ட்ரீட்மெண்ட் எழுதினேன். அதை டைரக்டர் எஸ். பி. முத்துராமன், ஜி. என். ரங்கராஜன் ஆகியோரிடம் முதலில் சொன்னபோது, 'இது மாதிரியான எண்ணங்களையே மூட்டை கட்டி வைத்துவிடு' என்று சொல்லி விட்டார்கள். ஆனாலும் நான் மூட்டை கட்டத் தயாராய் இல்லை.

இந்த நேரத்தில்தான் தயாரிப்பாளர் வேணுசெட்டியார் என்னைப் பார்க்க வந்தார். 'எனது அடுத்த படத்திற்கு நீதான் டைரக்டர். கதை வைத்திருக்கிறாயா?' என்று கேட்டார். நான் தயங்கியபடியே முள்ளும் மலரும் கதையைச் சொன்னேன். அவர் ஏதோவோர் மூடில் 'சரி' என்று சொல்லிவிட்டார். படமும் எடுத்து முடிக்கப் பட்டுப் போட்டுப் பார்க்கப்பட்டது. படத்தைப் பார்த்ததும் வேணுசெட்டியாரின் முகத்தில் ஈ ஆடவில்லை. 'என்னப்பா படத்தில் சப்தத்தையே காணோம்? போச்சு; எல்லாம் போச்சு!' என்றார். ஒருவழியாக அவரைச் சமாதானப் படுத்தி ரிலீஸ் செய்யப்பட்ட போது, அது மிகப் பெரிய வெற்றிப்படமாக அமைந்தது. தமிழ் சினிமாவில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது என்று கூடச் சொல்லலாம்.

கேள்வி: ஆக, உங்களுள் இருந்த 'சினிமா' முழுமையும் அப்படத்தில் வெளிப்பட்டது.

மகே: நிச்சயமாக. அதோடு அப்படிப்பட்ட சப்தக் குறைச்சலான — விஷுவலான படத்திற்கு மக்கள் ஆதரவு தரத் தயாராய் இருக்கிறார்கள். நாம்தான் அவர்களுக்கு நல்ல படங்களைத் தருவதில்லை என்பதும் வெட்ட வெளிச்சமாகப் புரிந்தது. அதன் பிறகு வந்த உதிரிப் பூக்களும் நல்ல வரவேற்பைப் பெற்றது எனக்கு மேலும் உற்சாகமாக இருந்தது. அந்த உற்சாகத்தில்தான் பூட்டாத பூட்டுக்களை எடுத்தேன். ஆனால் அது ஒரு துக்ககரமான தோல்வியாகிவிட்டது.

கேள்வி: அந்தத் தோல்விக்கு என்ன காரணம்?

மகே: நிச்சயமாக மக்கள் இல்லை. நானே தான் காரணம். நான்தான் தவறு செய்து விட்டேன்.

கேள்வி: என்ன தவறு?

மகே: மக்களின் மனோபாவத்தைப் புரிந்து கொள்வதில் நேர்ந்த தவறு. மனைவி என்பவள் சில சந்தர்ப்ப சூழ்நிலையால் வழி மாறக் கூடியவளே என்ற கசப்பான உண்மையை மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராய் இல்லை. இத்தனைக்கும் அது நிஜத்தில் நடந்த கதை. நடந்த ஊரிலேயேதான் அதைப் படமாகவும் எடுத்திருந்தேன். மற்றவர்களைப் போல் அல்லாமல், கிராமங்களை மட்டுமே மெய்யாகக் காட்டிக் கதையைப் பொய்யாகப் புனைந்துரைக்காமல் கதையையும் மெய்யாகவேதான் காட்டினேன். இருந்தாலும் அதுவோர் கசப்பான உண்மை என்பதால் மக்கள் நிராகரித்து விட்டார்கள். அதன் பிறகுதான் 'நெஞ்சத்தைக் கிள்ளாதே' எடுத்தேன். அதன் வெற்றி பற்றி நான் சொல்லவே தேவையில்லை.

கேள்வி: அது அவார்டு கூட வாங்கியது.

மகே: எனக்கு இந்த ஜனாதிபதி அவார்டு போன்றவற்றிலெல்லாம் நம்பிக்கை கிடையாது. அப்படிப்பட்ட எண்ணத்தோடும் நான் படம் எடுப்பதில்லை. காரணம், ஜனாதிபதி அவார்டு என்பது சிறந்த படங்களுக்குத் தரப்படுகிறது என்பதைவிட, எல்லா மாநில மக்களை

யும் திருப்திப்படுத்துவதற்காகத் தரப்படுகிறது. நாமும் அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக மறுக்காமல் வாங்கிக் கொள்கிறோம் என்பதுதான் உண்மை. இந்நிலையில் அது வாங்கியதால் பெருமையோ, வாங்காததால் பெருமையின்மையோ வந்து விடுவதில்லை.

கேள்வி: 'நண்டு' படத்தின் தோல்விக்கு என்ன காரணம்?

மகே: உண்மையில் அது ஒரு சிறந்த படம். இருந்தாலும் தோல்வி. காரணம் அதன் தயாரிப்பாளர் ஒரு புதுமுகம். அதனால் அதைச் சரியான முறையில் விநியோகிக்கவும், விளம்பரப்படுத்தவும் தெரியாமல் அதைத் தோல்வியடையச் செய்து விட்டார். அதுபோல்தான் 'மெட்டி' படமும் தோல்வியானது. உண்மையில் மெட்டி தோல்விப் படம் என்றால் அது தெலுங்கில் இருநூறு நாட்கள் ஓடியது எப்படி? எனவே, அவை எனது தோல்விகள் அல்ல; தயாரிப்பாளர்களின் தோல்வியே.

கேள்வி: அதன் பிறகு வந்த 'அழகிய கண்ணே,' 'கை கொடுக்கும் கை' படங்களும் தோல்விதானே?

மகே: அடியாரோடு சேர்ந்து நான் 'அழகிய கண்ணே' எடுத்தது ஒரு சறுக்கல் என்பதை ஒப்புக்கொள்கிறேன். அதேபோல் தான் 'கை கொடுக்கும் கை' தயாரிப்பாளர் விஜயகுமாரும் படத்தில் நிறையத் தலையீடுகள் செய்தார். எனக்காக ரஜினிகாந்த் தமது கால் ஷீட்டுகளை அட்ஜஸ்ட் செய்து கொடுத்தும் விஜயகுமாரின் தலையீட்டால் படம் தோல்வியானது. ஆக, வெளிப்படையாகச் சொன்னால் அந்த இரண்டு படங்களைப் பொறுத்தவரை நான் உறுதியாக இராமல் விட்டுக் கொடுத்ததால் விபசாரம் செய்த நிலைக்குத் தாழ்ந்து போய் விட்டேன் என்பதை மனப்பூர்வமாக ஒப்புக் கொள்கிறேன். இனி அத்தவறுகளைச் செய்ய மாட்டேன் என்றும் உறுதி கூறுகிறேன்.

கேள்வி: கடைசியாக வந்த 'கண்ணுக்கு மை எழுது' படமும் தோல்விதானே?

மகே: அது என் தோல்வி அல்ல. தயாரிப்பாளரின் தோல்வியே. புதுப் படங்களைப் பார்த்து வாங்க வரும் விநியோகஸ்தர்களின் முகம் எப்போதுமே படம் பார்த்து முடிந்ததும் ஏதோ இழவு வீட்டுக்குச் சென்றது போல்தான், எந்தவிதமான உணர்ச்சிகளையும் காட்டாமல் இருக்கும். ஆனால் அந்தப் படத்தைப் பார்த்த விநியோகஸ்தர்கள் வெளிப்படையாகவே பாராட்டினார்கள். அதனால் தயாரிப்பாளர் அதற்கு ஏகப்பட்ட விலை கேட்டு, அவர்களின் ஒத்துழைப்பை இழந்து விட்டார். அதனால்தான் அது ஒரே வாரத்திற்குள் டப்பாவுக்குள் செல்ல வேண்டியதாயிற்று.

கேள்வி: நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள். ஆனால் வெளியில், மகேந்திரனின் இன்றைய தோல்விக்குக் காரணம், அவர் முன்பு போல எடுக்க வேண்டிய காட்சிகளை



மனோஹர் சௌரஸியா என்பவர் மத்தியப் பிரதேசத்தில் உள்ள ஜபல்பூர் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் கட்சியின் செயலாளராக நியமிக்கப்பட்டு இருக்கிறார். அவரது அண்ணன் அலோக் சௌரஸியா மத்தியப் பிரதேச மாநில இளைஞர் காங்கிரஸ் கட்சிச் செயலாளராக நியமிக்கப்பட்டு இருக்கிறார். இருவரும் பெரிய கொம்பர்கள். மனோஹர் சௌரஸியா மீது பதினொன்கு கிரிமினல் வழக்குகள் பதிவு ஆகியுள்ளன. அண்ணன் அலோக் சௌரஸியா இருபத்தாறு கிரிமினல் வழக்குகளில் சிக்கிக் கொண்டு இருக்கிறார்.

— இந்தியன் எக்ஸ்பிரஸ்
தகவல்: சேலம் சக்தி.



''சாப்பாட்டு விஷயத்தில் எப்பவும் என் மனைவி என்னை எதிர்பார்க்கறதேயில்லே!''

''அப்படியா?''

''நான் சமைக்க வைச்சிடறதோட சரி. அவளே எடுத்துப் பரிமாறிக்குவா!''

— பக்தவச்சலம்.

யும் வசனங்களையும் ஏற்கெனவே முடிவு செய்வதில்லை. செட்டுக்கு வந்த பிறகுதான் எல்லாவற்றையும் முடிவு செய்கிறார். அது தான் படங்களைப் பாதிக்கிறது என்கிறார்களே?

மகே: அது தவறு. நான் முள்ளும் மலரும் படத்தில் நடந்து கொண்டதைப் போல்தான் மற்ற படங்களிலும் நடந்து கொண்டேன்; இனியும் நடந்து கொள்வேன். வெற்றியின் வெளிச்சத்தில் இருக்கும் போது நான் சிகரெட் பிடித்தால் கூட, 'அட மகேந்திரன் ஒரு சிகரெட் பிடித்தாலே போதும்; அவருக்கு மூட் வந்து காட்சிகளை மளமளவென்று எடுத்துத் தள்ளி விடுவார்' என்றார்கள். அவர்களேதான் இப்போது, 'அட, அவன் எப்பப் பார்த்தாலும் சிகரெட் தான்யா பிடிச்சுக்கிட்டு இருக்கான்...' என்று அதையே ஒரு மைனஸ் பாயிண்டாகப் பேசுகிறார்கள்.

கேள்வி: சினிமாவில் அநாவசியச் சப்தங்களுக்கு இடமில்லை என்கிற போது, பாடல்களுக்கு என்ன அவசியம் வந்தன?

மகே: பாடல்கள் என்றால், கதாநாயகனும் கதாநாயகியும் டூயட் பாடும் பாடல்கள் தான் அநாவசியம். இன்னும் சொல்லப் போனால் அதைவிட ஆபாசம் சினிமாவில் வேறொன்றுமில்லை. ஆனால் சில பாடல்களாவது அவசியம். ஏனெனில், இசை நம் ரத்தத்தோடு ஊறியது. ஏற்றம் இறைப்பவன் ஏற்றப் பாட்டுப் பாடுகிறான்; நடவு செய்யும் பெண்கள் நடவுப் பாட்டுப் பாடுகிறார்கள்... இப்படி இசை நம்மோடு ஊறிப் போனது. அதனால் பாடல்களை நாம் ஒதுக்கி விட அவசியமில்லை. அவை இயற்கையாக அமைய வேண்டியதுதான் முக்கியம்.

கேள்வி: உங்களின் 'அழகிய கண்ணே' படத்திற்கு அடுத்தபடி 'கை கொடுக்கும் கை'யில் ரஜினிகாந்த் நடித்ததற்கு அவர் உங்களுக்காகக் கால்ஷீட் அட்ஜஸ்ட் செய்தார் என்பதைவிட, அழகிய கண்ணேயின் தோல்வியால் ஒரு பிரபல நடிகரைப் போட்டால்தான் எடுபடும் என்று நீங்கள் கருதியது தான் காரணம் என்று சொல்லலாமா?

மகே: அப்படியானால் நான் முள்ளும் மலரும் படத்தில் ரஜினிகாந்தை நடிக்க வைத்த போது அவர் இத்தனை பிரபலமாகவா இருந்தார்? இல்லை. கூட்டம் சேர்ப்பதற்கு ரஜினியும் கமலும் தேவையில்லை. ஒரு வித்தைக்காரனால் கூட அது முடியும். வித்தை தான் முக்கியமே தவிர, வித்தைக்காரன் முக்கியமல்ல.

கேள்வி: கடந்த ஓராண்டுக்கும் மேலாகப் படங்கள் ஏதும் இல்லாமல் இருப்பதால் உங்களுக்குச் சோர்வு எதுவும் வரவில்லையா?


மகே: இல்லை. நிறையப் படிக்க முடிந்தது. என்னை நானே சுயவிமர்சனம் செய்து கொள்ள முடிந்தது.

கேள்வி: இடைப்பட்ட காலத்தில், முன்பே உங்களுக்கு எம். ஜி. ஆர். உதவி செய்தவர் என்கிற வகையில் அவரைப் போய்ப் பார்த்தீர்களா?

மகே: இப்போது அவரைப் போய்ப் பார்த்தால், எங்கே ஆதாயம் தேடுவதற்காகத்தான் போகிறானோ என்று மற்றவர்கள் நினைத்துவிடுவார்களோ என்ற பயத்தில் நானாகப் போய்ப் பார்ப்பதில்லை. தற்செயலாக விழாக்களில் சந்திக்கும்போது மட்டும் அவர் கால்களைத் தொட்டு ஆசி வாங்குவேன். நான் அவர் கால்களைத் தொடுவதற்கும் மற்றவர்கள் தொடுவதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. நான் நன்றிக்காகத் தொடுகிறேன்; மற்றவர்களைப் போல் ஆதாயம் தேடி அல்ல.

பேட்டி: இளங்கோவன்

புகைப்படங்கள்: கே. வி. ஆனந்த்



தி மயிலாப்பூர் இந்து சாசுவத நிதி லிமிடெட்

பதிவு அலுவலகம்: 32 & 33, தெற்கு மாடவீதி
மயிலாப்பூர், சென்னை-600 004.
போன்: 71099

ஸ்தாபிதம் 1872

கிளைகள்:

பார்க் டவுன் கிளை:
207, தங்கசாலை தெரு,
சென்னை-600 003.
போன்: 563588

வண்ணாரப்பேட்டை கிளை:
528, திருவொற்றியூர்
நெடுஞ்சாலை
சென்னை-600 021.
போன்: 551346

சைதாப்பேட்டை கிளை:
41, சுப்பிரமணிய முதலி தெரு,
சென்னை-600 015.
போன்: 440841.

அறிவிப்பு

பங்குதாரர்களிடமிருந்து பிக்செட் டெபாசிட்டுகள் ஏற்கப்படுகின்றன.

6 மாதங்களுக்கு	10½% வீதம் வட்டி
1 வருடத்துக்கு	12 % வீதம் வட்டி
2 வருடத்துக்கு	13 % வீதம் வட்டி
3 வருடத்துக்கு	14 % வீதம் வட்டி

ரூ. 5,000/-க்கு மேற்பட்ட பிக்செட் டெப்பாசிட்டின் மீது வட்டித் தொகைகள் பிரதி மாதம் நேரில் வழங்கப்படுவதோடல்லாமல் அவர்கள் விருப்பப்படி அவர்களுடைய வங்கிக் கணக்குகளிலும் வரவு வைக்கப்படும்

பிக்செட் டெபாசிட் மறு முதலீடு திட்டம்

54 மாதங்களிலேயே இரட்டிப்பாகின்றது

டெபாசிட் தொகை ரூ.	36 மாதங்கள் ரூ.	54 மாதங்கள் ரூ.	72 மாதங்கள் ரூ.
500	780	1,000	1,260
1,000	1,560	2,000	2,520
5,000	7,800	10,000	12,600

மற்றும்

CASH CERTIFICATE

இன்றே ரூ. 757/-ஐ எங்கள் பணப் பத்திரங்களில் முதலீடு செய்து 24 மாதங்கள் கழித்து ரூ. 1000/-ஐ பெற்றுக்கொள்ளுங்கள்.

தங்க நகைகள் மீது சவரன் ஒன்றுக்கு ரூ. 1400/- வீதம் ரூ. 20,000/- வரை கடன் வழங்கப்படும்.

மற்ற விவரங்களுக்கு செயலாளருக்கு விண்ணப்பிக்கவும்.

எம். ஜி. மோகன்ராஜ்
தலைவர்.

எஸ். கிருத்திவாசன்
துணைத்தலைவர்.


எம். கோதண்டராமன்.
ஆக்டிங் செயலாளர்.

ஏன்? பாரதத்தில்

குருவின் காலை

தொட்டு

வணங்குகிறார்கள்!



குருவின் காலை தொட்டு வணங்கும் பொழுது. பேராற்றல் கொண்ட சக்தி ஓட்டம் ஒன்று மேலேயிருந்து வந்து, அந்த குருவின் உடல் வழியே ஓடி' குருவின் திருவடிகளின் வழியே வெளியே பாய்ந்தது. அதனால்தான் குருவின் காலை தொட்டு வணங்குகிறார்கள்

ஸ்ரீ அன்னை வைகறை 1987-3

ஆகையால் கிராண்ட ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ் வாங்கி நல்லோருக்கு விநியோகம் செய்யுங்கள்.

இனிப்பு வகைகள்

1) மங்களூர் போளி
2) தேங்காய் போளி
3) ரஸ மலாய்
4) ஸோன் பப்டி கேக்'
5) மாலாடு ரவாலாடு
5) இனிப்பு ஸோமாஸ்
7) முந்திரி கத்லி
8) கடலை உருண்டை
9) பொரிவிளங்காய் உருண்டை
10) தேங்காய் கோவா
11) அதிரசம்
12) வெல்ல சீடை
13) சூரத்காரி
14) கோதுமை ஹல்வா
15) ரசகுல்லா
16) குங்குமபூ லட்டு
17) குங்குமபூ பாதம் ஹல்வா.
18) குங்குமபூ வீட் ஹல்வா

கார வகைகள்

1) தட்டை
2) தேன்குழல்
3) கைமுறுக்கு
4) சீடை
5) ஸ்பெஷல் மிக்ஸர்
6) நவரத்ன மிக்ஸர்
7) உருளைக்கிழங்கு சிப்ஸ்
8) வாழைக்காய் சிப்ஸ்
9) வறுபயறு
10) வெஜிடபிள் சமோசா
11) ரயில் கட்டிடம்
12) சீப்புச் சீடை

பொடி வகைகள்

1) கருவேப்பிலைப் பொடி
2) பருப்புப் பொடி
3) இட்லிப் பொடி
4) சாம்பார்ப் பொடி
5) ரசப் பொடி
6) ஊறுகாய் மிளகாய்ப் பொடி

'திருமண வைபவங்களுக்கு, பருப்புத் தேங்காய் அதிரசம், திரட்டுப்பால், சீர் முறுக்கு ஆகியவற்றை தயாரித்துக் கொடுக்கிறோம்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு, சென்னை-600 020

போன் : 412557

Ad-Ventures

வம்பு மார்க்கெட்:

தமிழகம் வழியாக என்.டி. ஆருக்கு ஒரு செய்தி!



அலர்ஜி 'மஹால்'

அ. தி. மு. க. பெரும் புள்ளிகளை விஜய சேஷ மகால் கல்யாண மண்டபத்தில் வைத்து மகளுக்கோ, மகனுக்கோ திருமணம் செய்யச் சொல்லுங்களேன், பார்க்கலாம்! ஒரு தடவைக்கு இரண்டு தடவை யோசிப்பார்கள்!

காரணம்? ஒரு 'மன்ற'ப் பெரும்புள்ளி கூறியது: "இதிலே கல்யாணம் நடத்திய இரு புள்ளிகளுக்கு எம். ஜி. ஆரால் பதவி பறிக்கப்பட்டது. அதனால் ராசியில்லை என்று கருதப்படுகிறது."

அவர் குறிப்பிட்ட அந்த இருவருடைய பகுதிகளும் சென்னைச் சுற்றுப்புறத்தில் 'ஆ' என்ற முதலெழுத்தில் தொடங்கும் பெயர் கொண்டவை. இருவரில் ஒருவர் 'எம். பி.' யாக இருந்தவர்; இன்னொருவர் மந்திரியாக இருந்தவர்!

ஃபாருக் பாணியில்...

நாளுக்கு நாள் நம் தெலுங்கு தேச 'கிருஷ்ணுடு'வுக்குச் சிரமம் அதிகரித்து வருகிறது. மருமகன் பேரில் எழுந்திருக்கும் ஊழல் குற்றச்சாட்டுகள், இன்னும் அவர் பேரிலேயே அதிகார துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுகள், அதைத் தொடர்ந்த வழக்குகள், வெளியேற்றப்பட்ட அமைச்சர் காங்கிரஸிடம் சென்று கொடுத்திருக்கும் 'ஜெராக்ஸ்' பிரதிகள்... இப்படி சிக்கல்கள் பலவிதத்தில் நெருக்கிக் கொண்டிருக்கின்றன.

'அதற்கெல்லாம் ஒரு பரிகாரம் இருக்கிறது' எனத் தமிழ்நாட்டின் வழியாக தில்லியிலிருந்து ஒரு வார்த்தை போயிருக்கிறதாம், அவருக்கு! 'தமிழ்நாடு மாதிரி, காஷ்மீர் மாதிரி, மத்திய அரசுக்கு ஆதரவு தருகிற, மத்திய அரசின் ஆசி பெற்ற எதிர்க்கட்சி அரசாக இயங்க வேண்டியது!' — என்ற யோசனைதான்! இந்த யோசனையை ராமராவ் காரு ஏற்றுக் கொண்டால் ஊழல் புகாரைப் பற்றி அவர் கவலைப்பட வேண்டியது இல்லையாம்!

இந்த யோசனைக்கு ராமராவ் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லையாம்! தலையாட்டுவதற்கு அவகாசம் கேட்டிருக்கிறாராம்! ஒரு மேலிடத்துக் கிசுகிசு இது!



பலாப்பழத்தார், பரிதாபம்!

எம். ஜி. ஆரின் சபையில் யாருடைய சகாப்தம் எத்தனை நாள் வரை இருக்கும் என்று யாருக்குமே தெரியாது! ஆனால் அவருடைய கோபத்துக்கு யாராவது ஆளாகியிருக்கிறார் என்று தெரிந்தால், சம்பந்தப்பட்ட நபரின் வீட்டு வாசலில் கூட்டம் 'கப்'பென்று குறைந்து போய்விடும்! (அவர் வீட்டுக்கு வந்து போகும் நபரின் பட்டியல் தினமும் எம். ஜி. ஆருக்குப் போகும் என்பதால்!) அந்த விஷயத்தில் அ. தி. மு. க. புள்ளிகள் படு உஷார்!.


அப்படி இப்போது வெறுமையாகக் காட்சியளிக்கும் ஓர் அமைச்சரின் இல்லம், பலாப்பழ ஊர்க்காரருடையதுதான்! இலங்கைப் பிரச்னை பற்றி எம். ஜி. ஆர். சார்பில் மத்திய அரசோடு அதிகம் பேச்சு வார்த்தைகள் நடத்தியவர் அவர்தான். அப்படி அவர் நடத்திய பேச்சுக்களில் அ. தி. மு. க. வின் உணர்வுகளையும், அ. தி. மு. க. தலைவரின் கருத்தையும் சரிவர அவர் பிரதிபலிக்கவில்லை என்பது, அவர் பேரில் எம். ஜி. ஆருக்கு ஏற்பட்டிருக்கும் பல கோபங்களில் ஒன்றாம்! இலங்கைப் பிரச்னை விஷயத்தில் இப்போது அ. தி. மு. க. ஓர் இரண்டுங்கெட்டான் நிலையில் தவிப்பதற்குப் பண்ருட்டியாரே காரணம் என்று எம். ஜி. ஆர். முடிவு செய்து விட்டாராம்!

இப்படி ஒரு பார்ட்னர்ஷிப்!

ஒரு கம்பெனியில் 'பார்ட்னர்ஷிப்' சேர வேண்டுமானால் ஒன்று முதல் போட வேண்டும்; அல்லது உழைப்பைத் தர வேண்டும்! இரண்டுமே இல்லாமல் பார்ட்னர் ஆகும் 'திறமை' ஆளுங்கட்சித் தொண்டர்களுக்கு மட்டும் உண்டு! தமிழகத்திலுள்ள எல்லாப் பகுதிகளிலும் இந்த நிலை உருவாகியிருக்கிறது.

அதாவது ஏதாவது ஓர் அரசாங்க உதவியையோ, ஆர்டரையோ கோரி எந்த நிறுவனமும் முயற்சி செய்தால், அதை அந்தப் பகுதி 'மாவட்டம் அல்லது எம். எல். ஏ.' மூலம் அணுகிப் பெற சுலப வாய்ப்பு உண்டு. அப்படி அரசாங்க உதவியை வாங்கிக் கொடுக்கும்போதே, 'உங்கள் கம்பெனியில் எங்கள் தொண்டர்கள் சிலரை பார்ட்னராகச் சேர்த்து, அவர்களுக்கு லாபத்தில் பங்கு தர வேண்டும்!' என்று நிபந்தனை விதிக்கிறார்கள்! வேறு வழியில்லாமல் நிறுவனமும் ஒப்புக் கொள்கிறது! இது எப்படி?


— ஒட்டக்கூத்தன் ஜி


பத்திரிகை சுதந்திரம்
மத்திய அரசு
கொத்தி கொத்தி சாய்ச்சுடுவேன்!
ஒரே கல்லுலே ரெண்டு மாங்காய்!
குண்டர்கள் சட்டம்
அரசியல் எதிரிகள்
குண்டர்கள்
என்னை அம்போன்னு விட்டுட்டு அங்கே போய் ஒரேயடியா 'டேரா' போடப் பாத்திங்களா?.. உங்க பாச்சா பலிக்காது!
அம்மு
..பரூக்
ஸ்ரீநகர்



கல்கி

1987 நவம்பர் 29
மலர் 46 இதழ் 18
பிரபவ கார்த்திகை 13



பத்திரிகை சுதந்திரம் மிரட்டலுக்குப் பணிவதல்ல!

இந்தியன் எக்ஸ்பிரஸ் காரியாலயங்களிலும் கோயங்காவின் இல்லத்திலும் நடந்த ரெய்டுகள் தொடர்பாக, "இது பத்திரிகை சுதந்திரத்தில் தலையிடுவதாகாதா?" என்று கேள்வி கேட்கப்பட்டபோது, "நாம் பத்திரிகை சுதந்திரத்திலும் தலையிடுவதில்லை; அந்நியச் செலாவணிச் சட்டங்கள் மீறப்படாமல் அமல்படுத்தும் அரசு இலாகாவின் சுதந்திரத்திலும் தலையிடுவதில்லை" என்று வெகு சாமர்த்தியமாகப் பதில் கூறினார் பிரதமர் ராஜீவ் காந்தி.

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, 'இது நேர்மையான பதில்தானே' என்று தோன்றும். ஆனால் இது ஒரு தந்திரமான பதிலும் கூட என்பதை அதன் பிறகு நடந்துள்ள பல சம்பவங்கள் நமக்கு உணர்த்துகின்றன. பிரதமரின் இந்தப் பதிலானது பச்சைக் கொடி காட்டியது போலாயிற்று. பல்வேறு அரசு இலாகாக்களுக்கு எக்ஸ்பிரஸ் பத்திரிகையை நடத்துகிறவர்கள் மீது பாய்ந்து இம்சிக்கத் துணிவைத் தந்தது.

கோயங்கா அயல்நாடுகளிலிருந்து தருவித்துள்ள பல அச்சு இயந்திரங்களும் இதர உபகரணங்களும் தவறான முறையில் சட்டத்தையும் விதிமுறைகளையும் மீறித் தருவிக்கப்பட்டிருப்பதாக ஒரு குற்றச்சாட்டு. பிறகு டில்லியில் எக்ஸ்பிரஸ் கட்டடம் அமைந்துள்ள நிலப்பரப்பு, பிரச்னைக்குரியது என்பதாக ஒரு புகார். எனவே, அதில் வாடகைக்கு இருக்கும் நிறுவனங்கள் இனி வாடகையை அரசுக்கே நேரடியாகச் செலுத்த வேண்டும் என்று ஓர் அவசர ஆணை . போதாக் குறைக்குத் தொழிற்சங்கத் தலைவரைத் தூண்டிவிட்டு, டில்லி இந்தியன் எக்ஸ்பிரஸில் ஒரு வேலைநிறுத்தம் உருவாக ஏற்பாடு செய்யப்பட்டது. வேடிக்கை என்னவென்றால், மிகப் பெரும்பான்மை ஊழியர்கள் வேலைக்குப் போகவும் பத்திரிகையை வெளிக் கொணரவுமே விரும்புகிறார்கள். ஆனால், போலீஸ், இவர்களுக்கு ஆதரவும், பாதுகாப்பும் தருவதற்குப் பதில், வேலை நிறுத்தம் செய்யும் விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலர் சார்பாக நடந்து கொண்டு, விசுவாச ஊழியர்களைத் தடுத்து நிறுத்துகிறது; தடியடிப் பிரயோகமும் செய்கிறது; கைதாக்கிக் கொண்டு போகிறது! ஏன் என்று கேட்டால், "மேலிடத்து உத்தரவு" என்ற இரு வார்த்தை பதிலுக்கு மேலாகப் போலீஸாரால் ஏதும் கூற முடியவில்லை!

அரசின் இந்த அதிக்கிரமங்களுக்கெல்லாம் மூலகாரணம், எக்ஸ்பிரஸ் பத்திரிகை, இன்றைய மத்திய ஆட்சியின் பல ஊழல்களைக் கண்டுபிடித்து ஒன்றன்பின் ஒன்றாக அம்பலப் படுத்தி வருவதே என்பதை இந்த நாட்டின் படிக்கத் தெரியாத பாமரன் கூடப் புரிந்து கொண்டிருக்கிறான். படித்த அறிவாளிகளோ ஒருவர் பாக்கியின்றி அரசின் அத்துமீறல்களைக் கண்டித்து இருக்கிறார்கள்.

கோயங்காவோ எக்ஸ்பிரஸ் நிறுவனமோ தவறுகள் சில செய்திருக்கலாம். தட்டிக் கேட்க அரசுக்கு உரிமை உண்டு. ஆனால் அந்த அதிகாரத்தைச் சில நடைமுறைக் கோட்பாடுகளுக்கு உட்பட்டுப் பிரயோகிக்க வேண்டும். சட்டத்தையும் விதிமுறைகளையும் ஒரு குடிமகன் எப்படி மீறக் கூடாதோ, அதேபோல் அவனைத் தட்டிக் கேட்கிற அரசும் அதற்குரிய நியாயமான வழிமுறைகளை மீறவே கூடாது. வேலை நிறுத்தத்தைத் தூண்டி விடுவதும், போலீஸைக் கொண்டு மிரட்டுவதும், சோதனைகள் நடத்திச் சித்திரவதை செய்வதும், தர்மத்தை மீறித் திடீர் ஆணைகள் பிறப்பிப்பதும் எக்ஸ்பிரஸை மட்டுமின்றி எல்லாப் பத்திரிகையாளர்களையுமே அச்சுறுத்தி, அடங்கி நடக்கச் செய்யும் என்று ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் எதிர்பார்த்தால் ஏமாற்றமாகவே முடியும். பத்திரிகை சுதந்திரத்தை இவ்வாறெல்லாம் மிரட்டிப் பறித்துவிட முடியாது.

அரசின் அழுகுணி ஆட்டத்தை மக்கள் நன்றாகவே புரிந்து கொள்வார்கள்; காத்திருந்து, தக்க தருணத்தில் பாடம் கற்பிப்பார்கள்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

உ.த. மாநாட்டில் தமிழக அரசு கலந்து கொள்ளாததேன்?



நாசுக்கு!

* போத்தனூர் புலிச்சோழன், கோவை—45

? மலேசியாவில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டில் தமிழக அரசு கலந்து கொள்ளாதது ஏன்?

! எம். ஜி. ஆருக்கு அழைப்பு விடுக்கும் போது கருணாநிதி போன்ற எதிர்க்கட்சியினருக்கும் அழைப்பு விடுப்பது மலேசிய அரசுக்கு நியாயமாக இருக்கலாம். தமிழக அரசுக்கு அப்படி இல்லையே! அதுதான் காரணம்.

* பாலை. அசோக், திருச்சி — 2.

? சமுதாயச் சீர்கேடுகள் நீங்க இலக்கியவாதிகள் பாடுபட வேண்டும் என ப. சிதம்பரம் கூறியுள்ளது பற்றி?

! அரசியல்வாதிகளுக்கும் ஆட்சியிலுள்ளவர்களுக்கும் சிறிதும் சமுதாய அக்கறை கிடையாது என்பதைத்தான் இப்படி நாசுக்காகச் சொல்கிறார் போலும்!

* எல். மாறன், மேல்பட்டி.

? வறட்சிப் பாதிப்பு எனப் புதிய வரிகள் மூலம் பெற்ற 550 கோடி ரூபாய் போதாதென்று, ஜப்பானிடம் 830 கோடி, சமீபத்தில் உலக வங்கியிடம் 350 கோடி... இந்திய மக்களை நம் பிரதமர் எங்குதான் கொண்டு செல்லப் போகிறார்? ஏதேனும் கணிக்க முடிகிறதா?



எங்கே போகிறீர்?......

! 'பண வீக்கம் காரணமாக அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, இந்தியாவுக்கு ஓர் எச்சரிக்கை' என்று நமது திட்டக் கமிஷன் உறுப்பினர் ஒருவரே கூறியுள்ளார். அப்படியிருந்தும் நமது பிரதமரும் நிதியமைச்சரும் விழித்துக் கொள்ளப் போவதாகத் தெரியவில்லை; நாட்டை திவாலா நிலைக்குத்தான் வேகமாகக் கொண்டு செல்கிறார்கள்.

* எம். ஏ. பாஷா, சின்னசேலம்.

? நமது அமைச்சர்களை எதற்கு ஒப்பிடலாம்?

! அடுத்த கேள்விக்குள்ளேயே இருக்கிறது உங்களுக்கான பதில்.



...திவாலா நிலைக்கு!

* மு. மதிவாணன், ஆரூர்.

? சென்னை — பாதாளச் சாக்கடையிலிருந்து எட்டடி நீளமுள்ள முதலை பிடிபட்டிருப்பது பற்றி?

! எட்டடிக்குங்குறைவாகஉள்ள அரசியல்— அதிகார — பண முதலைகளெல்லாம் தப்பி விடுகின்றனவே!

* கே. வேங்கடசுப்ரமணியன், குடியாத்தம்.

? டில்லி இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையை

முடக்க, இ. காங்கிரஸ் இந்த அளவுக்குக் கீழிறங்கித் தகராறு செய்கிறதே?

! கோயங்காவின் மேல் தவறுகளே இல்லை என்று நாம் சத்தியம் செய்ய முடியாது தான். ஆயினும் இப்போது அரசு செய்யும் காரியங்களெல்லாம் பழிவாங்கும் நடவடிக்கைகள்தான் என்பதில் சந்தேகமே



• விஷ்ணு புராணம்

யில்லை. கோயங்கா என்ன குற்றங்களைச் செய்துள்ளதாகக் கருதப்படுகிறதோ அதே போன்ற குற்றங்களைப் புரிந்துள்ள பலர் மீது அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காததே இதனை நிரூபிக்கிறது.

* ஆர். எஸ். இராஜ், சீர்காழி.

? நமது விஷ்ணு புராணத்தால்தான் ரஷ்யர்கள் விண்வெளியைப் பற்றிய உண்மைகளைக் கண்டுபிடித்தார்கள் என்று வி. வி. சுவாமிநாதன் பேசியுள்ளாரே?

! நல்லவேளை, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். நடித்த கலையரசி படத்தைப் பார்த்த பிறகுதான் ரஷ்யர்கள் விண்வெளி ரகசியங்களைத் தெரிந்து கொண்டனர் என்று கூறாமல் போனாரே. அதற்காக வி. வி. எஸ்ஸுக்கு நன்றி!

* த. சத்தியநாராயணன், அயன்புரம்.

? நாதஸ்வர இசை, வீணை இசை இரண்டில் தாங்கள் பெரிதும் ரசிப்பது எதை?

! அது வாசிப்பவர்களைப் பொறுத்தது.

* மு. செந்தில்வாசன், திருமருகல்.

? 'தமிழர்கள் ஏன் மற்ற மொழிகளைக் கற்பதில் அதிக நாட்டம் செலுத்துவதில்லை?

! தமிழைச் சரிவரக் கற்பதிலேயே அவர்கள் நாட்டம் செலுத்துவதில்லையே; பிறகல்லவா பிறமொழிகள்!

* செல்வி மாதவன், கோவை — 5.*

? தொண்ணூற்றேழு சுதந்திரப் போராட்ட வீரர்களுக்குத் தியாகிகள் பென்ஷனும், அனைத்து சு. போ. வீரர்களுக்கும் இலவச முதல் வகுப்பு ரயில் பாஸும் வழங்கும் மத்திய அரசின் திட்டம் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

! இந்தத் தொண்ணூற்றேழு பேரில், ஏறத்

தாழ அனைவருமே நல்ல வசதியில் இருப்பவர்கள்தான். அப்படியிருந்தும் யாரும் 'பென்ஷன் வேண்டாம்; எங்கள் தியாகத்திற்கு விலை பேசாதீர்கள்' என்று சொல்லவில்லையே! நிஜமான தியாகிகள் இப்படித் தானே சொல்வார்கள்? இதயத்தில் எங்கோ நெருடல் ஏற்படுகிறது.

* ரஜினிதாசன், சென்னை — 16.

? பிறக்கப் போகும்குழந்தை ஆணா, பெண்ணா என்று கண்டுபிடிக்கும் சோதனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதே? பாராட்டத் தக்கதா?

! பெரும்பாலும் அப்படிச் சோதனை செய்பவர்கள், பெண்ணாக இருந்தால் கருச் சிதைவு செய்யத்தான் அதைப் பயன்படுத்துகிறார்கள் என்ற நிலையில் தடுப்புச் சட்டத்தை மனம்விட்டுப் பாராட்டுகிறேன்.

* எல். ஆர். சுந்தரராஜன், சென்னை — 28.

? சென்னை பக்கிங்காம் கால்வாயில் மறுபடியும் படகுச் சவாரி வரப் போகிறதாமே?

! கேழ்வரகில் நெய் வடிகிறது என்றால் கேட்பவருக்குத்தான் புத்தி வேண்டும்.

* பாலை: அசோக், திருச்சி — 2.

? இந்தி தெரியாத நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக, நாடாளுமன்றத்தின் மைய மண்டபத்தில் வாரத்தில் மூன்று நாட்கள் இந்தி வகுப்புகள் நடைபெறும் என்று மக்களவைப் பத்திரிகைக் குறிப்பொன்று கூறுவது பற்றி?

! அதேபோல், ஆங்கிலம் தெரியாத இந்திப் பிரதேச எம். பிக்களுக்கும் மூன்று நாட்கள் ஆங்கில வகுப்பு நடத்தினார்கள் என்றால் நன்றாக இருக்குமே!

* சைதை வி. முரளி, சென்னை — 15.

? உங்கள் வீட்டு மொட்டை மாடியில் நின்று நீங்கள் அடிக்கடி பார்த்து ரசிக்கும் காட்சி?

! வானம். அதுவும் கோடை வெயிலில் வறுபட்டுக் கிடந்து மாரிக் காலம் துவங்கும் போது, மழை வரும் அந்த நேரம் பார்த்து மொட்டை மாடிக்குச் சென்று, அண்ணாந்து பார்க்கும் போது விழும் அந்த முதல் தூறல் முகத்தில் படும் ஆனந்தமே தனி ஐயா, தனி!

* ரூ. 15 பரிசு பெறுபவர்:

செல்வி மாதவன்,
92, சுப்பிரமணிய பிள்ளை வீதி,
சிங்காநல்லூர்,
கோயமுத்தூர்
— 641 005.

வட்டமேஜை

காரிக் காளை மீது ஒரு பாசம்!

* பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள மாணவிகளை இப்படியா கொடுமைப்படுத்துவது? வளர்ந்து வரும் இளம் உள்ளங்களில் விரக்தி ஏற்படச் செய்யலாமா? பல்கலைக் கழக அதிகாரிகள் தான் இதற்குத் தக்க முடிவெடுத்து அவர்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

திருமகல். மு. செந்தில்வாசன்.

* இக்கட்டான இந்நிலையில் நமது பிரதமரை பலவீனப்படுத்தி விடாமல், நன்னோக்கோடு தேசபக்தியுள்ள பத்திரிகையாகச் செயல்படுவது கண்டு பூரிப்படைகிறேன். இங்கு சிலர் அமைதிப்படை நடவடிக்கைகளை பின்வாங்கச் செய்வதற்காக மிகக் கேவலமான சுயநல லாபம் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் இத் தருணத்தில் துணிச்சலோடு யதார்த்தத்தை எடுத்துச் சொல்லும் தங்களை மனமாரப் பாராட்டுகிறேன்.

ஜெயங்கொண்டம். இ.அ. பாலசுப்பிரமணியன்.

* பிரதமர் ராஜீவ் காந்தி புலிகள் விஷயத்தில் கண்டிப்புக் காட்டுவது போலவே, ஜெயவர்த்தனாவிடமும் கண்டிப்புக் காட்டி, ஜே.வி.பி.யின் வாலை ஒட்ட நறுக்கச் செய்ய வேண்டும் என்று யோசனை கூறியிருப்பது தாங்கள் ஈழத் தமிழர்களின் மேல் கொண்டுள்ள பற்றை நன்கு பறைசாற்றுகிறது!

மேலக்கிருஷ்ணன்புதூர். ஆர். கே. லிங்கேசன்.

* இனவாத அரசின் அடக்கு முறையை எதிர்க்கும் போரில், எதிர்கால வாழ்வை என்றோ இழந்து போன இளைஞர்களின் மனநிலையைப் புரிந்து கொள்ளத் தவறி விட்டது இந்திய அரசு. 'ஆயுதங்களை ஒப்படைக்காமல் துரோகம் செய்து விட்டனர் புலிகள்' என்கின்றீர்கள். ஒப்பந்தத்துக்குப் பிறகு ஜெயவர்த்தனா, பிரேமதாஸா கூட்டத்தினர் பேசி வரும் கருத்துக்களைக் கேட்டால் நமக்கே சந்தேகம் வருகின்றது. இந்நிலையில் அந்த ஒப்பந்தத்துக்கு ஆதரவு தராத, எதிர்த்து வந்த புலிகள் ஆயுதங்களை முழுவதும் ஒப்படைப்பார்கள் என எப்படி எதிர்பார்க்க முடியும்?

சென்னை—36. சொ. சங்கரபாண்டி.

* பாதாளச் சாக்கடை பிரச்னை பற்றி ஏனோ தானோவென்று, பக்கங்களை நிரப்ப மட்டும் பயன்படுத்தாமல் நிஜமாகவே சமூக அக்கறையுடன், சம்பந்தப்பட்டவர்களிடமும் பேட்டி எடுத்து, விபத்துக்கள் நடக்காமல் இருக்க அதற்கான தீர்வையும் வெளியிட்ட கல்கியின் சேவை பாராட்டுக்குரியது!

திருத்துறைப்பூண்டி. ஜெ. பிஸ்மி.

* பாதாளச் சாக்கடையில் மூழ்கி எழும் தொழிலாளர்கள் படும் அவஸ்தையைப் படிப்பதற்கே இவ்வளவு பயங்கரமாகவும் பரிதாபமாகவும் இருக்கிறதே, அவர்களுக்கு எப்படி இருக்கும்? சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் ஜேப்பியார் தம் பேட்டியில் தாம் சொன்னதை நிறைவேற்றுவார் என நம்புகிறோம்.

இராமேஸ்வரம். அ. அருள்.

* அட்டைப்படக் கட்டுரையில், சென்னை அபிராமபுரத்தில் பாதாளச் சாக்கடை விஷவாயுத் தாக்குதலால் இறந்தவர்களுள் இருவரது பெயர்கள், மாணிக்கம், பொன்னுசாமி என்று தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அச் சம்பவத்தில் உயிரிழந்தவர்கள், கட்டுரையில் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ள செல்வராஜ் தவிர, குருசாமி, கண்ணன் ஆகியோர்.

சென்னை — 85.

எம். கிருஷ்ணன்,
செயலாளர்,
அண்ணா பொதுப் பணியாளர் சங்கம்,
சென்னைக் குடிநீர் வாரியம்.

* கு.க. ஆபரேஷன் குறைபாடுகளுக்குக் காரணம், அனுபவமில்லாத டாக்டர்களின் செயல்களே என்பதைத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டி விட்டீர்கள்.

திருச்சி—2. ஆற்காடு எழிலன்.

* 'மானசீக பீடம்' — போட்டிக் கதை அருமை! இளைஞுகைப் 'பழிவாங்கும் உணர்வு'களை அழகாகச் சித்திரித்திருந்தார் மோஹனிசா.

மதுரை—20. மதுரை ஜோ.

* வையவனின் ''மாடு'' சிறுகதையைப் படித்து முடித்த போது, ஏனோ என்னையுமறியாமல் — காரிக் காளையின் மீது ஒரு பாசவுணர்வேற்பட்டதென்றால்— அதற்கு வையவனின் எழுத்து நடையே காரணம்!

குடியாத்தம். கே. பட்டாபிராமன்.

* இவ்வார வம்பு மார்க்கெட் அ.இ.மு.க.வினரையும் சரி, இ.காங்கிரஸாரையும் சரி, ஒரு கலக்குக் கலக்கியிருக்கும்!

தோட்டக் குறிச்சி. இரா. வனையாபதி.

* கடந்த 8.11.87 தேதியிட்ட கல்கியில் 8'' விட்ட முள்ள ஆழ்கிணற்றில் (40 அடி ஆழம்) விழுந்து விட்ட ஒரு குழந்தையை மீட்டதைப் பற்றி எழுதியிருந்தீர்கள். தமிழ்நாடு தீயணைப்புத் துறையில் நான் பணியாற்றிய பொழுது திருமழிசை என்ற கிராமத்தில் 8'' விட்டமுள்ள நாற்பதடி ஆழ்கிணற்றில், மேரி என்ற ஐந்து வயதுக் குழந்தை விழுந்து விட்டது. கிண்டி தீயணைப்பு நிலையத்தில் இருந்த நாங்கள், சுமார் பதினைந்து தீயணைப்புப் படையினர் சென்று எங்களிடம் இருந்த சில உபகரணங்களைப் பயன்படுத்திக் குழந்தையை உயிருடன் காப்பாற்றிச் சென்னை பொது மருத்துவ மனையில் சேர்த்தோம். மேரி என்ற அக் குழந்தை இன்று திருமழிசை மேல்நிலைப் பள்ளியில் பயின்று வருகிறாள்.

போரூர். பி. நீலகண்டன்.



இலவசம்
இப்போது பிஜ் உபயோகப்படுத்துவீர்
மிச்சப்படுத்துவீர்... அதிகமோ அதிகம் !
Lavender dew
The luxury soap with parfum de lavande
ஒரு இலவச லவண்டர் டியூ
லக்ஷரி சோப் (குறிப்பிடப்பட்ட
விலை ரூ. 6.40)—2.5 கிலோ
பேக் ஸூப்பர் பிஜ்
வாங்குந்தோறும்.
பிஜ் உபயோகிப்பீர்! உங்கள் சமையலறை
பாத்திரங்கள், கண்ணாடிப் பாத்திரங்கள்
தரை மற்றும் வாஷ் பேஸின், பளபளப்புடன்
ஜொலிக்கும்.
இப்போது நீங்கள் புத்துணர்ச்சி பெற
முடியும்—லவண்டர் டியூ கொண்டு,
காரணம் அது இலவசம்—பிஜ் வாங்கும்
பெண்டிருக்கு!
SUPER
BIZ
5-refill pack
multipurpose
CLEANING
POWDER
MADE IN INDIA
GODREJ SOAPS PVT. LIMITED
BOMBAY-400 079
NET WT.
2.5 kg.
A Godrej PRODUCT
LOCAL TAXES EXTRA PACKED:
MAX. PRICE Rs.

போட்டிக் கதை — 14

‘ஏழைகள்’

மொட்டை மாடியில் காற்று குளுமை யாக வீசிக் கொண்டிருந்தது.

"ஏ, சாமீ.... கோவிச்சுக்காம கொஞ்சம் எழுந்திருச்சு ஊட்டுக்குள்ள பூடு சாமி"

படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை ஆட் காட்டி விரலை அடையாளம் வைத்து மூடிக் கொண்டு, குரல் வந்த திசையை நோக்கித் தலையைத் தாழ்த்தினான் விஜயன்.

பக்கத்து வீட்டின் தோட்டத்தில், மல ஜலம் தங்கும் செப்டிக் டேங்கிற்கு அருகே, கையில் கடப்பாரையுடன் நின்று கொண்டு, அண்ணாந்து பார்த்தான் அந்தக் குரலுக்குரியவன். இடுப்பில் வேட்டி மட் டுமே. அந்த நாலு முழம் வேட்டியையும் சுருட்டி கோவணமாகக் கட்டியிருந்தான். அன்றைய வானத்தைப் போலவே நிறம் கறுத்திருந்தான். முன் மண்டை முழுவதும் வழுவழுவென்று இருக்க, நெற்றிப் பிரதே சம் ஏகமாய்ச் சுருங்கியிருந்தது. பின் மண் டையில் கறுப்பும் வெண்மையும் சரிவிகிதத் தில் கலந்திருந்தன.

சில விநாடிகள் மௌனமாகப் பார்த்த விஜயன் "என்ன சொன்னீங்க?" என்றான் குரலைச் சற்று உயர்த்தி.

"இங்க கக்கூஸ் நரகலையெல்லாம் அள் ளிக் கொட்டிச் சுத்தம் பண்ணப் போறேன் சாமி. நாத்தம் கொடலைப் பொறட்டும். அதான் ஊட்டுக்குள்ளே போயிருன்னு சொன்னேன் சாமீ..." — ரொம்பப் பணி வாகப் பேசினான் வெள்ளையன்.

என்றுமில்லாமல் இன்று பக்கத்துவீட்டின் கொல்லை விளக்கு, பளீரென்று எரிவதன் காரணம், அப்போதுதான் புரிந்தது விஜ யனுக்கு.

"பரவாயில்லை. நீங்க உங்க வேலையை ஆரம்பிங்க..." முகத்தில் தோன்றிய புன்ன கையோடு பதில் சொன்னான் விஜயன்.

"அதுக்கில்லே சாமி. பொணை நாத்தமடிக் கும். அதான் சொன்னேன். ஜாமமாயிடிச்சே ஒறக்கம் வரலியா? கீழே இறங்கிப் போய்த் தூங்கேன் சாமி!"

கொஞ்சமாய் இழுத்து இழுத்துப் பேசினான்.

அவன் தன்னை ஒருமையில் அழைத்துப் பேசியது விஜயனுக்கு என்னவோ போலிருந்தது.

'இவனுக்குக் கூட எனக்கு மரியாதை கொடுக்க வேண்டுமென்று தோன்றவில் லையோ? உம்... வேலையில்லாதவன் தானே!' அவனது அடிமனது நொந்து கொண்டது.

இருந்தாலும் வார்த்தைக்கு வார்த்தை 'சாமி' போட்டுப் பேசியது அவனைச் சமா தானமாக்கியது.

அவன் கையில் வைத்திருந்த 'அர்த்த முள்ள இந்து மதத்'தில் கண்ணதாசன் கூறிய ஒரு வரியைப் படித்துக் காட்ட வேண்டும் போல் தோன்றியது — 'சொந்தக்காரர்களின் பிணத்துக்குப் பக்கத்தில் நிற்கும் போது கூடப் புத்தகத்தைக் கையிலெடுத்து விட் டால், நான் அதிலேயே லயித்து விடுவேன்' என்று அதைச் சொன்னால் இவனுக்குப் புரியுமா என நினைத்துக் கொண்டான்.

"நான் எல்லா நாற்றத்தையும் சகித்துப் பழகி விட்டவன். நான் பி.எஸ்.ஸி. கெமிஸ்ட்ரி படித்தவன். லாபில் சகலவித நாற்றங்களையும் அனுபவித்து மரத்துப் போனவன். கவலைப்படாம வேலையைத் துவங்குங்க" — படபடவென்று பேசினான்.

"அதுக்கு மேல ஒன் பிரியம் சாமி! எனக் கும் பேச்சுத் துணையா இருக்கும்."

அவன் கடப்பாரையை ஓங்கினான். இரண்டு சிமெண்டுப் பலகைகள் இணைக்கப் பட்டுப் பூசப்பட்ட இடத்தில், அதன் நுனி 'ணங்' என்று மோதி எழுந்தது.

விஜயன் வானத்தைப் பார்த்தான்.

போட்டிக்கு நிலவு இல்லாத சந்தோஷத் தில் நட்சத்திரங்கள் மினுக்கித் தீர்த்துக் கொண்டிருந்தன. கிழக்குக் கடைசியில் ஒரு நட்சத்திரம் 'இதோ என் ஆயுள் முடிந்தது' என்று எரிந்து கொண்டே பூமியை நோக்கிச் சறுக்கி விழுந்து, தற்கொலை செய்து கொண் டிருந்தது.

விஜயன் கூட எத்தனையோ முறை நினைத் திருக்கிறான். இப்படித் தற்கொலை செய்து கொள்ளலாம் என்று. ஆனால் அதற்கான முயற்சியில் அவன் இறங்கியதில்லை — காரணம்?

‘ராஜ்கோதல்’

வேறென்ன? தைரியம் வரவில்லை. அந்தக் கோழைத்தனத்தின் உச்சமான தைரியம் எல்லோருக்கும் வந்து விடுகிறதா என்ன?!

அவன் பட்டதாரியாகி இரண்டு வருடங்கள் ஓடி விட்டன. வேலை வாய்ப்புகளும் அவனை விட்டு ஓடி ஓடிக் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருந்தன.

அவன் பள்ளியில் படித்த போதே, அவனது அப்பாவின் மூச்சோட்டம் நின்று விட்டது. அவர் வேலை பார்த்த பள்ளியிலேயே அம்மா பார்வதிக்கு ஆயா வேலை போட்டுக் கொடுத்தார்கள். அந்த பலத்தில் விஜயனைப் பட்டதாரி ஆக்குவதற்குள்ளேயே பார்வதி ஆடி ஓடிக் களைத்து விட்டிருந்தாள். 'இதோ வளர்ந்து விட்டேன், இதோ' என்று மகள் கல்பனா வேறு அவளை பயமுறுத்திக் கொண்டேயிருந்தாள்.

இந்த நிலைமையில் வேலையின்மை விஜயனை ரொம்பவும் நோகடித்துக் கொண்டிருந்தது. அவனது ஒரே ஆறுதல், புத்தகங்கள் தான். சில நாட்களில் விடிய விடியக் கூட தூங்காமல் மொட்டை மாடியில் உட்கார்ந்து புத்தகம் படிப்பான்.

இன்றும் அப்படித்தான் மொட்டைமாடியில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தான்.

தன் வேலையை மும்முரமாகச் செய்து கொண்டிருந்தான் அந்தத் தொழிலாளி.

செப்டிக் டேங்க் மேலே போட்டு மூடியிருந்த சிமெண்ட் பலகைகளை ஒவ்வொன்று





கப் பெயர்த்தெடுத்து ஓரமாக அடுக்கினான்.

'குப்'பென்று துர்நாற்றம் வெளியேற ஆரம்பித்தது. அது வெள்ளையனைக் கொஞ்சமும் பாதிக்கவில்லை. உள்ளே கறுமை நிறச் சர்க்கரை போன்ற திரவம் நிறைந்திருந்தது. குட்டையான கயிறு முடியப் பட்டிருந்த இரும்பு வாளி ஒன்றினால் அத்திரவத்தை இறைத்துக் கொஞ்சம் பெரியதாய் இருந்த டிரம்மிற்குள் ஊற்றினான். அந்த டிரம் நிரம்பியதும் அதைத் தூக்கிக் கொண்டுபோய், வெளியே நிறுத்தியிருந்த கை வண்டியில் இருந்த பெரிய டிரம்மில் ஊற்றி விட்டு வந்தான்.

விஜயனுக்கு துர்நாற்றம் வயிற்றைப் புரட்டியது. தொண்டையை அறுத்தது. வாயில் உமிழ்நீர் குபுகுபுவென ஊறி அவனை வாந்தியெடுக்கத் தூண்டியது. துப்பத் துப்ப எச்சில் வாயில் நிரம்பிக் கொண்டேயிருந்தது. ரொம்பச் சிரமப்பட்டு எச்சிலையெல்லாம் விழுங்கி வைத்தான்.

மாடியிலிருந்தே இந்த நாற்றத்தைத் தாங்க முடியவில்லையே, இவன் எப்படி அதிலேயே கை வைத்து அள்ளிக் கொட்டுகிறான்?

அவனது நாசி செயலிழந்து விட்டதா? அவனுக்கு உமிழ்நீர்ச் சுரப்பிகளே கிடையாதா?

ஒரு மனிதனுக்கு இவ்வளவு சகிப்புத் தன்மை இருக்க முடியுமா? விஜயன் வியப்பில் ஆழ்ந்தான்.

முன்பு வீரமாய்ப் பேசி விட்டு, இப்போது எழுந்து உள்ளே போகவும் வெட்கமாய் இருந்தது. புத்தகத்தில் ஆழ்ந்து போக முயற்சி செய்து கொண்டிருந்தான்.

''சாமி, நீ தண்ணி போடுவியா?'' — நாற்ற நீர் நிரம்பிய டிரம்மைத் தோளில் சுமந்தவாறே கேட்டான் வெள்ளையன்.

''ஊஹூம், இல்லையே! ஏன் கேட்கிறே?'' — ஆச்சர்யத்துடன் எதிர்க்கேள்வி போட்டான் விஜயன். இப்போது இவனும் ஒருமையில் பேச ஆரம்பித்து விட்டான்.

''என்னாலேயே தண்ணி போட்டாத்தான் இந்த வேலையைச் செய்ய முடியுது. இந்த நாத்தத்தைச் சகிக்க முடியுது. நீ என்னடான்னா, இந்த பாழாப் போன நாத்தத்திலே முகஞ்சுழிக்காம குந்தியிருக்கியே!'

இலங்கைப் பிரச்னை, இந்தியாவில் எந்தெந்தப் பகுதிகளை அதிகம் பாதித்திருக்கிறது என்று கணக்கெடுத்தால் நீலகிரி முதல் ராங்க்கை எட்டிப் பிடித்துவிடும். ஏற்கெனவே சிரிமாவோ—சாஸ்திரி ஒப்பந்தப்படி, (இலங்கைத் தமிழர்களில் ஏழு பேர் இந்தியா திரும்பினால், அங்கே நான்கு பேருக்



● சாந்தகிருஷ்ணன்



● சந்திரசேகரன்: ''பேனாவும் புக்கும் அவங்க கையில...''

"பேனாவும், புக்கும் அவங்க கையிலதான் இருக்கு!"

குக் குடியுரிமை) 1968-லிருந்து 1985-வரை நான்கு லட்சத்து அறுபதாயிரம் பேர் இந்தியா திரும்பியிருக்கிறார்கள். இவர்களில் பாதிப் பேர் நீலகிரியில் இருக்கிறார்கள்!

சீதோஷ்ணம் காரணமாக (மெட்ராஸ் வெயில் தாங்காதுப்பா, ராமநாதபுரம் காய்ஞ்சு கெடக்கே, மதுரைல என்ன பண்றது நாம) இலங்கைத் தமிழர்களுக்கு ரொம்பப் பிடித்த இடம் நீலகிரி.

தொழில் ரீதியாக எடுத்தாலும் தேயிலைத் தோட்டங்களை நான்கு புறமும் பார்ப்பதற்கு நீலகிரியை விட்டால் இடம் ஏது?

எனவே —

அன்றும் சரி, இன்றும் சரி இலங்கையிலிருந்து தாயகத்திற்குத் திரும்புகிறவர்கள் குடியேற விரும்பும் இடம்— நீலகிரி.

சிலோன்காரர்கள் வந்த பிறகு நீலகிரியின் வனங்களுக்கும், மரங்களுக்கும் பிடித்தது தலைவலி என்று ஒரு பொதுவான குற்றச்சாட்டு இருக்கிறது. இலங்கைத் தமிழர்கள் இதற்கு என்ன சொல்லப் போகிறார்கள்?

கோத்தகிரியில் இருக்கும் மக்கள் மறுவாழ்வு மன்றம், இலங்கையிலிருந்து திரும்பும் இந்தியர்களுக்கு ஒரு நட்புமுறை உதவி செய்வதாகச் தெரிய வந்தது. வெயில் இதமாயிருந்த ஒரு பகல் பொழுதில் அந்த அலுவலகத்திற்கு நாங்கள் விசிட் செய்த போது—

மன்றத்தின் முழுநேர ஊக்குவிப்பாளர்கள் சாந்தகிருஷ்ணனும், சந்திரசேகரனும் சொன்ன சில விவரங்கள் இதோ!

ஓஹோ! இவன் போதையிலிருக்கிறானா? தெளிவாகப் பேசுகிறானே!

சாராயத்திற்கு—தான் படித்து, சுவாசித்து சோதனையும் செய்திருக்கிற அதற்கு இப்படி ஒரு சக்தி இருக்கிறதா? அது மனிதனுக்கு சகிப்புத் தன்மையைத் தருகிறதா?

இந்தச் சிந்தனை விஜயனுக்குச் சிரிப்பு மூட்டியது. சாராயம் செய்யும் வேலையை ஒரு நல்ல புத்தகம் செய்ய முடியாமல் போய் விடுமா என்ன?

அவன் புத்தகத்தில் முழுமையாக மூழ்கினான்.

''மணி என்னாகும் சாமி?''—விஜயனைப் புத்தகத்தில் இருந்து எழுப்பினான் வெள்ளையன்.

''ஒண்ணு..... ஒண்ணரை இருக்கும்''—ஊகமாகச் சொன்னான்.

''வண்டி ரொம்பிடுச்சு. அதைக் கொண்டு போயி ஊருக்கப்பாலே கொட்டிட்டு, அப்படியே சிங்கிள் டீயடிச்சிட்டு வந்துடறேன் சாமி...''

''டீ குடிக்கப் போறியா இல்லே சாராயம் போடவா?''—சிரித்துக் கொண்டே கேட்டான் விஜயன்.

''போட்டா நல்லாத்தானிருக்கும். ஆனா சவுக்குத் தோப்பு கடேசிக்குப் போகணுமே. இப்ப நேரமில்லை சாமி''

''கள்ளச் சாராயமா?''

''எல்லாச் சாராயமும் ஒண்ணுதான் சாமி. அவுங்க மட்டும் என்ன களவாடியா கொண்டு வர்றாங்க? கஷ்டப்பட்டுக் காய்ச்சித் தானே விக்கிறாங்க!''

—இப்படி ஒரு நியாயமா? மீண்டும் அவனுக்குச் சிரிப்பு வந்தது.

''ஆமா, ஒரு நாளைக்கு நீ எவ்வளவு சம்பாதிப்பே?''

''அதுக்கென்ன சாமி, இன்னிக்கு நாப்பது ரூவா வேலை. சில நாளைக்கு இரண்டு மூணு கிராக்கி கூட கிடைக்கும். எப்படிப் போனாலும் மாசம் ஆயிரத்துக்குக் குறைவில்லாம கிடைக்குமுங்க''

''ஆயிரம் ரூபாயா?''—விஜயனின் வார்த்தைகளில் வியப்புத் தெறித்தது. குடிபோதையில் பெருமைக்காக, மிகைப்படுத்திச் சொல்கிறானோ என்ற சந்தேகமும் எழுந்தது.

''எவ்வளவு சம்பாதிச்சென்ன? இந்தப் பாழாப்போன சாராயக்கடை செலவு போக வீட்டுக்கு தெனம் பத்துப் பதினைஞ்சு கூட குடுக்கமுடியலை சாமி''—புலம்பிக்கொண்டே நடந்தான்.

கைநிறையச் சம்பாதித்தும், பாவம், இந்தச் சாராயம்தான் இவனை முன்னேற விடாமல் ஏழையாகவே வைத்திருக்கிறதா? ஆனால் சாராயம் ஊற்றிக் கொண்டால்தான் இந்தத் தொழிலைச் செய்து சம்பாதிக்க முடியும் என்றல்லவா சொல்லுகிறான்.

விஜயனுக்கு பதில் கிடைக்கவில்லை. மாறாக ஓர் எண்ணம் தோன்றியது. வேலை வேலை என்று அலைவதைவிட்டு, தானும்

- ஜீவியம் முழுக்க தேயிலைக் காட்டில் இருந்தவர்கள் நீலகிரியைத் தேடி வருவது எப்படித் தப்பாகும்?
- காடு அழிப்பது நாங்கள் இல்லை. உண்மையில் பெரிய பெரிய காண்ட்ராக்டர்கள் சிலோன்காரர்களை வேலைக்கு வைத்து மரங்களை வெட்டுகிறார்கள். லாரிலோடு போய் விட்டால் காண்ட்ராக்டருக்கு லாபம். மாட்டிக் கொண்டால், 'சிலோன்காரன் மரத்தை வெட்டுறான்' என்ற பழி.
- எங்கும் புரோக்கர். எதிலும் புரோக்கர். தாயகம் திரும்பும் அகதிகள் ஒரு வருடத்திற்குள் மனு செய்தால் அவர்களுக்கு வீடு கட்டிக் கொள்ள ஆறாயிரம் ரூபாய் தருவார்கள். பாதிப் பேர் விவரம் தெரியாமல் அலைச்சலிலேயே ஒரு வருடத்தை வீணடித்து விடுவார்கள். மனு செய்பவர்களுக்கும் புரோக்கர் ஆதரவு இருந்தால்தான் லோன் கிடைக்கும்.
- இந்தியா திரும்பும் அகதிகளின் தலைவிதி கண்டி ஹைகமிஷனில் எழுதப்படுகிறது. இங்கே வியாபாரக்கடன் என்று மூவாயிரம் ரூபாய் தருகிறார்கள். அப்படிக் கடன் வாங்கியவர்கள் நஷ்டம் அடைந்து போய் விட்டார்கள். இந்தக் கடனை முதலில் ரத்து செய்ய வேண்டும்.
- எங்கள் அறக்கட்டளை பாக்கிய நகரில் 21 வீடுகள் கட்டியுள்ளது. ஒவ்வொன்றும் 12000 பெறும். அதை 6000 ரூபாய்க்கு வழங்க நாங்கள் தயாராயிருந்தும் அரசாங்கம் அந்த வீடுகளை வாங்குபவர்களுக்குக் கடன் தர முன்வராததால் இரண்டு வருடங்களாக அப்படியே கிடக்கிறது.
- குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்ட 69 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கியது அரசாங்கம். சிலர் வீடு கூட கட்ட ஆரம்பித்து விட்டார்கள். இப்போது அங்கே நிலச்சரிவு ஏற்படக்கூடிய அபாயம் இருக்கிறது என்று திடீரென்று பட்டாவை ரத்து செய்து விட்டார்கள். அவர்கள் கதி?
- விவசாய நிலத்திற்கென்று ஐந்நூறு ரூபாய் கடன் வழங்குகிறது அரசு. ஐந்நூறு ரூபாய்க்கு நிலம் எங்கே கிடைக்கிறது காட்டுங்கள்.
- எங்களில் தொண்ணூறு சதவீதத்தினர் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதால், அரசியல் ரீதியான தாக்கமும் எங்களுக்கு எதிராகவே இருக்கிறது.
- இப்போது அரசாங்கம் புதுத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியிருக்கிறது. இலங்கையிலிருந்து திரும்பிய தமிழர்களை வேலைக்கு வைத்துக் கொள்ளும் நாற்பு ஆலைகளுக்கு 25,000 ரூபாய் கடன் கொடுக்கலாம் என்று திட்டம். இதைத் தவறாகப் பயன்படுத்திப் பல தனியார்கள் கடன் வாங்கிக் கொள்கிறார்கள். பிறகு வேலைக்கு வைக்கப்பட்டிருக்கும் சிலோன்காரர்களுக்குச் சரியானபடி சம்பளம் கொடுக்காமல் இழுக்கடித்து அவர்களாகவே ஓடும்படி செய்து விடுகிறார்கள். அப்புறம் சிலோன்காரர்கள் வேலையை விட்டு ஓடிவிட்டார்கள் என்று பொய்யாக எழுதி வைத்து விடுகிறார்கள். பேனாவும், புக்கும் அவர்கள் கையில்தானே இருக்கிறது!

இந்தத் தொழிலைச் செய்தால் என்ன? நிறைய வருமானம் வருமே; சாராயம் கூட தேவையில்லையே! ஊஹூம், அம்மா தற்கொலையே செய்து விடுவாள். என்ன செய்வது. போலி கௌரவத்தை விட முடியவில்லையே!

அவனது சிந்தனை நீண்டு கொண்டே போனது.

இன்னும் தூக்கம் வந்தபாடில்லை. மீண்டும் படிக்க ஆரம்பித்தான்.

கொஞ்ச நேரம் நடந்து கொண்டே படித்தான். அவ்வப்போது புத்தகத்திலிருந்து சிந்தனை சுழன்றபோதெல்லாம், துர்நாற்றம் அவனது நுரையீரல்களை நிறைத்தது.

கீழே இறங்கிப்போய் தண்ணீர் குடித்து விட்டு, மீண்டும் மொட்டை மாடிக்கு வந்த போது, மணி மூன்றாகி விட்டிருந்தது.

வெள்ளையன் திரும்பி வந்தான். இப்போது அவனது நடையிலே சிறிது தள்ளாடல் தெரிந்தது. இப்போது சரக்கைக் கொஞ்சம் அதிகமாகவே ஊற்றிக் கொண்டு விட்டானோ?

நிச்சயமாக இந்தச் சாராயம்தான் இவனது ஏழைமைக்குக் காரணம் என்று நினைத்துக் கொண்டான் விஜயன்.

உடல் கொஞ்சம் தள்ளாடினாலும், உற்சாகத்தோடு ஒரு பழைய சினிமாப் பாட்டை சப்தமாக முணுமுணுத்தவாறே அவன் வேலையைத் தொடர்ந்தான். இப்போது செப்டிக் டேங்கின் உள்ளேயே இறங்கி, முழங்கால் அளவு திரவத்தில் நின்று கொண்டு வாளியில் மொண்டு ஊற்றிக் கொண்டிருந்தான்.

பாடிய படியே அள்ளி ஊற்றியவன், சட்டென நிறுத்தினான். பாட்டும் நின்றது. ஊற்றும் போது மஞ்சளாய்ப். பளபளவென்று அவன் கண்ணில் பட்ட பொருளே பாட்டு நின்றதன் காரணம். அது என்ன பொருள், தங்கம் மாதிரி?

கையை டிரம்மிற்குள் விட்டு அலசிப் பிராய்ந்து பார்த்தான். கையில் தட்டுப்பட்ட பொருளை வெளியே எடுத்தான்.

—ஒரு சிறிய மோதிரம்!

தங்க மோதிரம்! ஐந்து அல்லது ஆறு வயதுக் குழந்தை அணியக் கூடிய அளவு மோதிரம்.


நன்கு துடைத்து விட்டுப் பார்த்தான். அழகாக இருந்தது. ஒரு நிமிடம் அதையே உற்றுப் பார்த்தான்.

அவனுக்கு ஐந்து குழந்தைகள். கடைசிக் குழந்தைக்கு மூன்று மாதம் தான் ஆகியிருந்தது. அவள் பிறந்ததில் இருந்து ஒரு நல்ல சட்டை கூட வாங்கிக் கொடுக்கவில்லை.

நம்ப புள்ளைக்காகத்தான் சேட்டு கடையிலே வாங்கியாந்தேன்னு சொல்லி ராசாத்தி கையிலே கொண்டு போய்க் குடுத்துடலாமா?

மோதிரத்தை வித்தா எப்படியும் அறுநூறு ரூவா கிடைக்கும். அந்தப் பணத்திலே பிள்ளைங்களுக்கும் ராசாத்திக்கும் துணி மணி வாங்கிக் குடுப்போமா?

குடிசை கூட மழை பேஞ்சா ஒழுகுதுன்னு



"என்ன? கல்யாணப்பந்தல்ல புதுசாக் கட்டை வண்டி ஒண்ணு நிக்குது?"

"அது வேறொண்ணுமில்லே, பையன் கேட்டிருந்த வரதட்சிணைச் சாமான் லிஸ்ட்ல "டு வீலர்"ன்னு எழுதியிருந்து தாம்; பெண்ணோட அப்பா வாங்கி நிறுத் திட்டார்!"

— துடுப்பதி வெங்கண்ணா.

சொன்னா. கூரையைப் பிரிச்சுட்டு, புதுசாப் போட்டுடலாமா?

எம். எல். ஏ. வுக்கு ஐந்நூறு ரூவா குடுத்தா குடியிருக்கிற இடத்தைப் பட்டா போட்டுக் குடுத்துடுவார்னு சொன்னாங்களே, அதைக் கூட செய்யலாம்.

கை நிறையக் காசை வைச்சுக்கிட்டு ஒரு வாரத்துக்கு ஃபாரின் சரக்காப் போட்டா 'மஜா'வாத்தான் இருக்கும்.

வெள்ளையனுக்கு ஏதேதோ யோசனைகள் தோன்றின.

மோதிரத்தை மடியில் வைத்துச் சுருட்டிக் கட்டியவனுக்குத் திடீரென்று என்ன தோன்றியதோ, தெரியவில்லை. நிமிர்ந்து விஜயனைப் பார்த்தான்.

அவன் புத்தகத்துக்குள் இருந்தான்.

"சாமீ......"

"என்னப்பா?"

"இந்த மோதிரத்தைப் பாரேன்."

மடியில் வைத்த மோதிரத்தை வெளியே எடுத்து, மாடியை நோக்கி வீசினான். விஜயன் அதைப் பிடித்துப் பார்த்து விட்டு, "நல்லாருக்கே, உன் பிள்ளைக்கு வாங்கினயா?" என்றான்.

"இல்ல சாமி, இங்கேதான், இந்த நரகலிலேதான் கிடந்தது."

"அப்படியா. இந்தா வைச்சுக்கோ. வீட்டுக்குப் போயி உன் பிள்ளைக்குப் போட்டுப் பார். அழகாயிருக்கு."

விஜயன் மீண்டும் கீழே வீசியெறிய, பிடிக்க முடியாமல் அவன் தடுமாற, மோதிரம் தரையில் விழுந்தது.

அந்தச் சமயம் பார்த்து கொல்லைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த வீட்டுக்காரர் "என்னப்பா ஒழுங்கா, சுத்தமா அள்ளிப் போடறியா?" என்று கேட்டவாறே மூக்கைப் பொத்திக் கொண்டு வெள்ளையனை நோக்கி வந்தார்.

மோதிரத்தைக் குனிந்து எடுத்தவாறே "வேலை சுத்தமா இருக்கும் சாமீ" என்றான்.

"அதென்ன? இங்கே கொடு பார்க்கலாம்."

"மோதிரம் சாமி. இங்கேதான் நரகலிலே கிடந்தது."

வாங்கியவர், மோதிரத்தை அப்படியும், இப்படியும் திருப்பிப் பார்த்தார். வீட்டுப் பக்கம் திரும்பி "சிவகாமி சிவகாமி" என்று கூப்பிட்டார். நாற்றத்தால் முகத்தை எட்டுக் கோணலாக்கி வெளியே வந்த அம்மாவிடம் "இதோ பார் இது நம்ம மோதிரம் தானே! நம்ம குழந்தை மோதிரம் தானே?" என்றார், ஒரு கையால் மூக்கை மூடியபடியே.

அவள் விழித்துக் கொண்டு நிற்கும் போதே, "நம்முடையதுதான். கொண்டு போய் பீரோவிலே வை" என்று கொடுத்தனுப்பி விட்டு, "சுத்தமா கிளீன் பண்ணணும். அப்பத்தான் பேசின காசு தருவேன்" என்று தோரணையாகக் கூறிவிட்டு அவரும் உள்ளே போய் விட்டார்.

விஜயன் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டேயிருந்தான். அவனுக்கு எரிச்சலும் கோபமுமாக வந்தது.

அவனுக்கு நன்றாகத் தெரியும்— அந்த ஆளுக்கும், அந்த அம்மாவுக்கும் குழந்தையே கிடையாதென்று! அந்த மோதிரம் நிச்சயம் அவர்களுடையதல்ல. இவர்கள் இந்த வீட்டிற்குக் குடிவந்து ஒரு வருடம்தான் ஆகிறது. அதற்கு முன் பல பேர் இருந்திருக்கிறார்கள். அவர்களில் யாரோ ஒருவரின் குழந்தை.. மோதிரத்தைக் கக்கூஸில் நழுவ விட்டிருக்கலாம்.

அநியாயமாய்ப் பொய் சொல்லி மோதிரத்தைப் பறித்துக் கொண்டு போய் விட்டாரே! பாவி!

"நீ ஏன்யா மோதிரத்தைக் கொடுத்தே? அது அந்தாள் மோதிரமே இல்லே. உன்னை நல்லா ஏமாத்திட்டான் போ" — வெள்ளையனிடம் வேகமாகச் சொன்னான் விஜயன்.

"பரவாயில்லே சாமீ" அலட்சியமாகச் சொன்னான் வெள்ளையன்.

"அவங்களுக்குக் குழந்தையே கிடையாது தெரியுமா?"

அவன் மாடியை நிமிர்ந்து பார்த்துப் பல் வரிசை தெரியச் சிரித்தான்.

"அவங்களுக்குக் கொழந்தையே கிடையாதுன்னு எனக்கு நல்லாவே தெரியும் சாமி! சத்தியமாத் தெரியும்."

"தெரியுமா? தெரிஞ்சும் ஏன் கொடுத்தே? மோதிரம் இங்கேதான் கிடைச்சதுன்னு ஏன் சொன்னே?"

"வேண்டாம் சாமி. அந்த மோதிரம் நிச்சயமா என்னோட சொத்து கிடையாது. அதனால அது எனக்குத் தேவையில்லே. ஒரு வேளை நீ கேட்டிருந்தாக் கூட உனக்கே குடுத்திருப்பேன் சாமி. அடுத்தவன் சொத்து எனக்கு வேணாம். அந்தாளு பொய் சொல்றாரு ஆண்டவன் தண்டிப்பான். பாவம் சும்மா விடாது!"

அவனது வார்த்தைகளில் ஆட்டம் இருந்தாலும், செயலில் நேர்மையும் நியாயமும் நிலையாய் நின்றன.

விஜயன் இன்னும் வியப்பிலிருந்து மீளவில்லை.

ஏழைமையிலும் இப்படியொரு நேர்மையா?

வெள்ளையன் ஏழையாகவே இருப்பதற்கான உண்மையான காரணம் இப்போது தான் அவனுக்குப் புரிந்தது!



* ஜூனி-ஒய் உறுப்பினர் படை: பொதுச் சேவைக்குத் தயார்!

சில சட்சட் சந்திப்புகள்!

சாந்தா தியாகராஜன்:

மலைப்பிரதேசத்தாலதான் மழைன்னு சொல்றாங்க. ஆனா எங்க நீலகிரியில பெய்யற- கொஞ்ச மழையையும் தேக்கி வக்க சரியான திட்டமில்லை. நாளுக்கு நாள் சுற்றுலாப் பயணிங்க அதிகமாகிக்கிட்டே போறாங்க. இவங்களால உள்ளூர்காரங்களுக்கு ரொம்பக் கஷ்டம். அத்தியாவசியப் பொருள்களோட விலையெல்லாம் எக்கச்சக்கமா ஏறிப் போச்சு. முன்னே பச்சை, பச்சை, பச்சை, பச்சையா இருந்த மரஞ், செடி கொடிகளையெல்லாம் அழிச்சு லாட்ஜ், லாட்ஜா எழுப்பிட்டாங்க. இது கூட பரவாயில்லைங்க. பெரிய பணக்காரங்க, ஸீஸன்ல வந்து தங்கி அனுபவிக்கறதுக்காக நிலத்தை வாங்கி, மரஞ் செடியெல்லாம் அழிச்சி பங்களா கட்டிடறாங்க. அதனாலே காடெல்லாம் அழியறது ஒரு பக்கம். நிலவிலை யெல்லாம் ஏறிப் போறது ஒரு பக்கம். இமாஜின், ஒரு ஸெண்ட் நிலம் இங்க ரூ.50000/—! மெட்ராஸ்ல மவுண்ட்ரோட்ல விக்கற விலைங்க!



* சாந்தா தியாகராஜன்



* கே. எல். ஜோகி

கே. எல், ஜோகி:

நீலகிரியில் படகர்கள்தான் அறுபது சதவீதம் இருப்பாங்க. நாங்கள்லாம் படிச்சு, முன்னேறிட்டோம். படகர்கள்ல இப்போ பலரும் டாக்டரா இருக்காங்க, இன்ஜினியரா இருக்காங்க. எங்க முன்னோர்கள்ல சில பேர் எங்களை முற்பட்ட ஜாதில சேர்த்துடணும்னு சொன்னாங்க. நல்லவேளை அரசாங்



மஞ்சிதளா வாசுதேவன்



• பெள்ளி

கம் எங்களைப் பிற்பட்ட வகுப்பில வச்சிருக்கு. நான் கேட்கறது என்னன்னு நாங்கள்லாம் அடிப்படையில மலைவாழ் ஜாதியைச் சேர்ந்தவங்க.. எங்களைப் பழங்குடியினர் **(Scheduled Tribe)** வகுப்பில சேர்க்கறதுதான் நியாயம். எங்களுக்கு இன்னும் அதிகமான சலுகைகள் கிடைக்கும், பாருங்க.. இதுக்காக நான் முயற்சி செய்யப் போறேன்...

(உண்மையில், நாங்கள் சந்தித்த அத்தனை படகர் இனத்தவர்களும் சரளமான ஆங்கிலத்தில்தான் பேசினார்கள். தங்களை மலை ஜாதியினராக அறிவிக்க வேண்டும் என்பதைக் கூட அழகான ஆங்கிலத்தில்தான் சொன்னார்கள்!)

அரவங்காட்டைச் சேர்ந்த மஞ்சிதளா இராமம்.

பேசுவது வாசுதேவன்:

நீலகிரி மாவட்டத்தில் கால்நடைகளை வாய் நோய்— கால் நோய் அதிகமாகத் தாக்கி வந்த சமயம். லண்டனில் உள்ள வெல்கம் ஃபவுண்டேஷனும், நம் மத்திய அரசும் சேர்ந்து, இந்த நோயை ஒழிக்கத் திட்டமிட்டன. அதன்படி, தேசிய பால்வள வாரியம் எங்கள் மாவட்டத்தில் இருபத்தெட்டுப் பேரை இந்த வேலைக்கு நியமித்தது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ மனைகளில் எங்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. கால்நடைகளுக்கு வெற்றிகரமாகத் தடுப்பூசி போட்டு, அந்த நோயை நாங்க கம்ப்ளீட்டா ஒழிச்சிட்டோம். வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மூன்று வருட ஒப்பந்தம் முடிந்ததும், தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறையில் எங்களை ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்பிக்கையளிக்கப்பட்டது. மூன்று வருடங்களுக்குப் பின் இன்னும் சிறிது காலம் தேசிய பால்வள வாரியம் எங்களை வைத்துக் கொண்டிருந்து விட்டு 31.3.86ல் கழற்றி விட்டு விட்டது.

நாங்கள் நம்பிக்கையோடு தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத்துறையை நாடினோம். எங்கள் இருபத்தெட்டு பேரில் பதினெட்டுப் பேருக்கு மட்டும் தடுப்புச் சாவடியில் வேலை கொடுக்கப்பட்டது. இதை எதிர்த்து மற்றவர்கள் வழக்குத் தொடர்ந்ததும், அந்தப் பதினெட்டுப் பேரையும் வேலை நீக்கம் செய்து விட்டார்கள்.

எஸ்.எஸ்.எல்.சி. மட்டும் படித்து, ஒரு குறிப்பிட்ட வேலையில் பயிற்சி பெற்ற நாங்கள் இப்போது மத்திய அரசாலும், மாநில அரசாலும் கைகழுவப்பட்டு நடுத்தெருவில் நிற்கிறோம்.

ஊர் ஜனங்கள் 'என்ன டாக்டரு, (ஊசி போட்டதால் வந்த பட்டப்பெயர்) வேலைக்குப் போகலியா?' என்று கேட்கும் போது கூனிக் குறுகுகிறோம்.

எங்களுக்கு என்ன கதி?

தேயிலைத் தோட்டங்களில் வறட்சி என்று கேள்விப்பட்டு நீலகிரி மாவட்டத்தின் மஞ்சூரை நோக்கிப் போனோம். குன்னூரிலிருந்து குந்தாவிற்குச் செல்லும் பாதையில் சுற்றிச் சுற்றி, மேலேறி, கீழிறங்கி, மறுபடி மேலேறி மஞ்சூரை அடைந்தோம். நாங்கள் போய்ச் சேர்ந்த நேரம் வறட்சி விடை பெற்றிருந்தது. தேயிலைகள் எக்கச்சக்கமாய்த் துளிர்த்திருந்தன. மகா சந்தோஷம். மஞ்சூரைச் சேர்ந்த வாசுதேவனைச் சந்தித்தோம். இவர் இன்ட்கோ தேயிலைத் தொழிலாளர்கள் நலச் சங்கத் தலைவர். அவர் சொன்னார்.

''வறட்சி காரணமாகக் கடனை வசூல் செய்வதை அரசாங்கம் ஒத்திப் போடலாம்; செய்யவில்லை. வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏக்கருக்கு ரூ.7500/— வரை கடன் வசதி தருவதாகச் சொன்னார்கள். அதுவும் தரவில்லை. இங்கிருக்கும் தொழிலாளர் படும் கஷ்டங்கள் சொல்லி மாளாது..."

வாசுதேவன் கையிலிருக்கும் குடையை உணர்ச்சி பூர்வமாக அசைத்து அசைத்துப்



• மஞ்சூர் வாசுதேவன்

பேசிக் கொண்டிருக்கும் போதே, அங்கு வந்து சேர்ந்த பெள்ளி மேலும் உணர்ச்சி வசப்பட்டார். பெள்ளி ஒரு வழக்கறிஞர்.

''சார், அரசுடமையான ஒரு பாங்கு இங்கே பண்ணின அநியாயத்தை நீங்க பத்திரிகையில எழுதியே ஆகணும் சார். கடன் கொடுன்னு கவர்மென்ட் சொல்லியிருக்கு. பாங்க்காரங்களும் கொடுக்கறேன்னு சொல்லிட்டாங்க. ஆனா என்ன செஞ்சாங்க பாங்க்காரங்க? அவங்ககிட்ட மூணு லட்சம், நாலு லட்சம்னு டெபாஸிட் வச்சிருக்கிற ஒரு நாலஞ்சு பேருக்கு மட்டும் கடன் கொடுக்கறதுக்கு முடிவு செஞ்சாங்க. டி.வி. காரங்களைக் கூப்பிட்டு வறட்சியான ஏரியாவை எல்லாம் படம் எடுத்து, கஷ்டப்படறவங்களுக்கு நாங்க லோன் தரோம்னு சொல்லி, பப்ளிக்கா இந்த நாலு பேருக்கு மட்டும் பணம் தந்தாங்க சார். அதைப் படமா எடுத்து, டி.வி.யிலே வேறு விளம்பரம் தேடிக்கிட்டாங்க. வறட்சியால கஷ்டப்படற ஏழைகளுக்கு ஒரு பைசா கொடுக்கலை. வயிறு

எரியுது சார். எழுதுங்க சார் இதை!"

ஊட்டி அரசுக் கல்லூரி மாணவர்களும், மாணவிகளும் சேர்ந்து UNI-Y என்ற ஓர் அமைப்பை வைத்துக் கொண்டு சமூகப் பணி ஆற்றி வருகிறார்கள். முப்பதுக்கும் மேற்பட்ட மாணவிகளும், இருபதிற்கும் மேற்பட்ட மாணவர்களும் இந்த அமைப்பின் அங்கத்தினர்கள்.

அமைப்பிற்கு ஒரு மாணவிதான் தலைவி. செல்வி கிதாராணி. சதக்கத்துல்லா துணைத் தலைவர்.

இவர்களைச் சந்தித்த போது, அமைப்பின் செயல் முறைகளைப் பற்றிக் கூறினார்கள். மாணவர்கள் சமுதாய நலனில் கொண்டிருக்கும் அக்கறை அவர்களுடைய பேச்சில் வெளிப்பட்டது.

UNI-Y செய்து வரும் பணிகள் என்னென்ன?

- அவசரமாய் ரத்தம் தேவைப்படும் நோயாளிகளுக்கு ரத்தம் வழங்குதல்.

- ஊனமுற்ற குழந்தைகள் (காது கேளாத, வாய் பேசாத) உற்சாகமாகச் 'செயல்பட, அந்தக் குழந்தைகள் இருக்கும் பள்ளிக்குச் சென்று அவ்வப்போது, விளையாட்டுப் போட்டி முதலியன நடத்தி, வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசளித்தல். அன்றைய தின உணவுச் செலவை மொத்தமாக அமைப்பு ஏற்றுக் கொள்ளுதல். புத்தகங்கள், சீருடைகள் ஆகியவற்றை அளித்தல்.

- ஒவ்வொரு சனிக்கிழமையும் குன்னூரில் இருக்கும் முதியோர் இல்லத்திற்குச் சென்று அங்குள்ள முதியோருக்குச் சிறு உதவிகள் செய்தல். அவ்வப்போது பெத்தட்டி எனும் ஊரில் அமைந்திருக்கும் அனாதைக் குழந்தைகள் இல்லத்திற்குச் சென்று அந்தக் குழந்தைகளோடு ஒருநாள் இருந்து அன்பும் ஆதரவும் காட்டுதல்.

- நீண்ட நாட்களாக அரசாங்கத்தால் கவனிக்கப்படாமல் இருந்த பொக்காபுர் என்ற ஊரின் குடிநீர்ப் பிரச்னையை இவர்கள் தீர்த்து வைத்திருக்கிறார்கள். எப்படி? இவர்கள் அனைவருமாகச் சேர்ந்து சுமார் மூன்று கி.மீ. தூரத்திற்குக் குடிநீர்ப் பைப்புகளைப் பொருத்திப் புதைத்திருக்கிறார்கள்.

- இதுபோல் இன்னும் ஏராளமான சமூக சேவைகள் செய்ய இவர்களுக்கு ஆசை. பண உதவிதான் செய்ய முடியாது. ஆனால் தங்களால் எவ்வளவு வேண்டுமானாலும் உடல் உழைப்புத் தரமுடியும் என்று உற்சாகமாகக் கூறுகிறார்கள். அரசும் சேவை நிறுவனங்களும் பொது நன்மைக்காகத் தங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முன்வரவில்லையே என்பதுதான் இவர்களின் ஆதங்கம். வித்தியாசமான கோரிக்கையாக இல்லை!

நீலகிரி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்து மக்களைச் சந்தித்துக் கட்டுரைகளை எழுதியவர்கள்:

சுரேஷ் — பாலா



பங்கஜம்: "நடிக்கிறதுக்குச் சான்ஸ் கிடைச்சும் வேண்டாம்னுட்டீங்களாமே.... ஏன் மாமீ.....?"

அம்புஜம்: மருமகள்கிட்டே அன்பா இருக்கிற மாமியாரா நடிக்கச் சொன்னாங்க... அப்படியெல்லாம் எப்படிம்மா நடிக்க முடியும்?"

— சரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா.



அவர்: சினிமா மோகம் ரொம்ப ஜாஸ்தியா போச்சு. ஏண்டா, அடிக்கடி 'பெயிலா'வரேன்னு, என் பையன் கிட்டே கேட்டேன்......

இவர்: என்ன சொன்னான்?

அவர்: இதுதாம்பா, என் 'மேனரிஸம்'ங்கிறான்...!

— ஆர். வசந்தகுமார்.



"எனக்குத் திடீர்னு டிரான்ஸ்ஃபர் வந்ததும், ஆபீஸில் அத்தனை பேரும் அழாத குறையா ரொம்பச் சோகமா உட்கார்ந்துட்டாங்க..."

"அடப்பாவமே...! அவ்வளவு அன்பாய் பழகினீங்களாக்கும்...!"

"மண்ணாங்கட்டி. அத்தனை பேர்கிட்டேயும் கடன் வாங்கியிருந்தேன்!"

— சரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா.

இதுவும் ஒரு குழந்தைகள் தின விளம்பரமோ—அல்ல

இது இந்திய குழந்தைகளுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்.



லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா

ஆயுள் காப்பு—நிரந்தரமான அன்பின் சின்னம்.

LIC - 234/87 TM



அத்தியாயம் 32
கிள்ளி வளவன் யானை

கூத்து முடிவதற்கும் சமையல் ஆவதற்கும் சரியாயிருந்தது. கட்டுக் கட்டாகத் தாமரை இலைகளைக் கொண்டு வந்து அவ்வீரர்களின் முன்னால் போட்டார்கள். பிறகு பொங்கலும் கறியமுதும் கொண்டு வந்து பரிமாறினார்கள்.

வீரர்கள் சாப்பிடத் தொடங்கிய பிறகு இளவரசர் அவர்களிடையே பந்தி விசாரணை செய்து கொண்டு வலம் வந்தார். அங்கங்கே நின்று அவ்வீரர்களின் உடல் நலத்தைப் பற்றி விசாரித்தார். அவர்களுடைய ஊரையும், பெயரையும் விசாரித்தார். அப்படி விசாரிக்கப்பட்டவர்கள் ஆனந்தக் கடலில் ஆழ்ந்தார்கள். பக்கத்திலிருந்தவர்கள் அவர்களுடைய அதிர்ஷ்டத்தைப் பாராட்டினார்கள்.

ஏற்கெனவே சோழ நாட்டு வீரர்களுக்கெல்லாம் இளங்கோவின் பேரில் மிக்க அபிமானம் இருந்தது. சமீபத்தில் அந்த அபிமானம் பன்மடங்கு பெருகியிருந்தது. தாய் நாட்டிலிருந்து தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் தருவிப்பதற்கு இளவரசர் பெரும்பிரயத்தனம் செய்ததை அவர்கள் அறிந்திருந்தார்கள். அத்துடன் சாதாரணப் போர் வீரர்களுடனே இளவரசர் சமநிலையில் கலந்து பழகி க்ஷேமம் விசாரித்து அவர்களுக்கு உற்சாகத்தை அளித்து வந்தார். இந்த குணாதிசயம் இளவரசரை அவ்வீரர்கள் தங்கள் கண்ணுக்குக் கண்ணாகக் கருதுமாறு செய்திருந்தது.

ஆகையால், வீரர்கள் அங்கங்கே இளவரசரை நிறுத்த முயன்றார்கள். துணிச்சலை வருவித்துக் கொண்டு அவரை ஏதேனும் கேள்வி கேட்பார்கள். முக்கியமாக, அவர்களில் பலரும் கேட்ட கேள்வி, ''புலத்திய நகரத்தின் மீது படையெடுப்பு எப்போது?'' என்பதுதான். இந்தக் கேள்விக்கு விடையாக இளவரசர் ''புலத்திய நகரின் மீது படை எடுத்து என்ன பயன்? மகிந்தன் ரோஹணத்துக்கல்லவா போயிருக்கிறான்?'' என்று சிலருக்குச் சொன்னார். ''கொஞ்சம் பொறுத்திருங்கள்; மழைக் காலம் போகட்டும்'' என்று வேறு சிலரிடம் சொன்னார். யுத்தமின்றிச் சோம்பி இருப்பதில் சில வீரர்கள் தங்கள் அதிருப்தியை வெளியிட்டுக் கொண்டார்கள். வேறு சிலர், ''தாங்கள் மாதமொரு முறையாவது இவ்விதம் வந்து எங்களைப் பார்த்து விட்டுப் போனால் பொறுமையாயிருக்கிறோம்'' என்றார்கள்.

அமரர் கல்கி

பந்தி விசாரணை முடிந்ததும் இளவரசர் சற்று ஒதுக்குப்புறமாக அவருக்கென அமைந்திருந்த படை வீட்டுக்குச் சென்றார். வந்தியத்தேவனையும் ஆழ்வார்க்கடியானையும் அவர் தம்முடன் அழைத்துக் கொண்டு போனார்.

"இந்த வீரர்களின் உற்சாகத்தைப் பார்த்தீர்கள் அல்லவா? தஞ்சையிலிருந்து மட்டும் தகுந்த ஒத்துழைப்புக் கிடைத்திருந்தால் இதற்குள் இந்த இலங்கைத் தீவு முழுவதும் நம் வசமாகியிருக்கும். அருமையான சந்தர்ப்பம் வீணாகிப் போய்விட்டது. இங்கே மழைக் காலத்தில் யுத்தம் நடத்த முடியாது. இன்னும் மூன்று நாலு மாதம் நம் வீரர்கள் சும்மா இருக்க வேண்டியதுதான்!" என்று சொன்னார்.

இதைக் கேட்ட திருமலை, "இளவரசே! தாங்கள் இதைப் பற்றிக் கவலைப்படுவது வியப்பாயிருக்கிறது. அங்கேயோ சோழ சாம்ராஜ்யத்துக்கே பேரபாயம் நேர்ந்திருக்கிறது! விஜயாலய சோழர் ஸ்தாபித்த ராஜ்யம், பராந்தகராலும் சுந்தர சோழராலும் பல்கிப் பெருகிய மகாராஜ்யம், உள் அபாயங்களினால் சின்னாபின்னமாகி விடும் போலிருக்கிறது!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"ஆம், ஆம்! நீங்கள் இருவரும் முக்கியமான செய்தி கொண்டு வந்திருக்கிறீர்கள். நான் என்னுடைய அற்பக் கவலையை வெளியிட்டுக் கொண்டிருக்கிறேன். நல்லது; இப்போது நீங்கள் சொல்ல வேண்டியதையெல்லாம் விவரமாகச் சொல்லுங்கள். முதலில் இவர் ஆரம்பிக்கட்டும்!" என்று இளவரசர் வந்தியத்தேவனைச் சுட்டிக் காட்டினார்.

வந்தியத்தேவன் உடனே தன் கதையைத் தொடங்கினான். காஞ்சியிலிருந்து தான் புறப்பட்டது முதல் கண்டவை, கேட்டவை எல்லாவற்றையும் கூறினான். பல அபாயங்களிலிருந்து தப்புவதற்குத் தான் புரிந்த சாகசச் செயல்களைக் குறித்து அதிகமாக விஸ்தரிக்க விரும்பாதவன் போல் காட்டிக் கொண்டு, அதே சமயத்தில் தன் பிரதாபங்களை வெளியிட்டான். கடைசியில், "ஐயா! தங்கள் அருமைத் தந்தையாரைச் சிறையில் வைத்திருப்பது போல் வைத்திருக்கிறார்கள். நெருங்கிய பந்துக்களும் பெருந்தர அதிகாரிகளும் சிற்றரசர்களும் சேர்ந்து பயங்கரமான சதி செய்கிறார்கள். இதனாலெல்லாம் தங்கள் சகோதரி இளையபிராட்டி பெருங்கவலையில் ஆழ்ந்திருக்கிறார். ஆகையால் தாங்கள் உடனே புறப்பட்டு என்னுடன் பழையாறைக்கு வரவேண்டும். ஒரு கணமும் தாமதிக்கக் கூடாது!" என்று முடித்தான்.

பிறகு ஆழ்வார்க்கடியான் தனது வரலாற்றைக் கூறினான். வந்தியத்தேவன் கூறியவற்றையெல்லாம் அவனும் ஆமோதித்தான். அத்துடன் திருப்புறம்பயம் பள்ளிப்படையருகில் நள்ளிரவில் நடந்த கொலைகாரர்களின் சதியைப் பற்றியும் கூறினான். சோழ நாட்டு நிலைமை இவ்வளவு அபாயகரமாயிருப்பதால் தற்சமயம் இளவரசர் அங்கு வராமலிருப்பதே நல்லது என்று முதன் மந்திரி அநிருத்தர் சொல்லி அனுப்பிய செய்தியை மறுபடியும் வற்புறுத்திக் கூறினான்.

"தாங்கள் சோழ நாட்டுக்குத் தற்சமயம் வராமலிருப்பது மட்டுமல்ல; இங்கேயும் படையெடுப்பை மேலும் விஸ்தரித்துக் கொண்டு போக வேண்டாம் என்று முதன் மந்திரி கேட்டுக் கொள்கிறார். படைகளையெல்லாம் திரட்டி வட இலங்கையில் சேர்த்து வைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறார். சதிகாரர்கள், சீக்கிரத்தில் வெளிப்பட்டு வந்து தங்கள் உண்மை சொரூபத்தைக் காட்டுவார்கள். அச்சமயம் இப்போது இலங்கையிலுள்ள படை மிக்க உபயோகமாயிருக்கும் என்று முதன் மந்திரி அபிப்பிராயப் படுகிறார். பாண்டிய நாட்டில் தற்சமயம் உள்ள கைக்கோளர் படை, வன்னியர் படை, வேளாளர் படை—மூன்றும் இளவரசருக்காக உடல் பொருள் ஆவியை அர்ப்பணம் செய்யக் காத்திருக்கின்றன. இதையும் தங்களுக்குத் தெரிவிக்கும்படி முதன் மந்திரி எனக்குக் கட்டளையிட்டார்!"

என்றான் ஆழ்வார்க்கடியான்.

"திருமலை! உன் குருநாதர் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறார்? பாடலிபுரத்துச் சாணக்கியரைப் போல் இவர் அன்பில் சாணக்கியர் என்று தன்னை எண்ணிக் கொண்டிருக்கிறாரா? என் உற்றார் உறவினரோடு நான் சண்டை போட வேண்டும் என்கிறாரா?" என்று இளவரசர் ஆத்திரமாய்க் கேட்டார்.

"இல்லை, ஐயா! அநிருத்தர் அவ்விதம் சொல்லவில்லை. ஆனால் சக்கரவர்த்திக்கு விரோதமாகச் சதி செய்கிறவர்களை, — சாம்ராஜ்யத்துக்குத் துரோகம் செய்ய முயற்சி தொடங்கியிருப்பவர்களை, — சமயம் பார்த்துத் தண்டிக்க வேண்டும் என்கிறார். அதற்கு உதவி புரிவது தங்கள் கடமை அல்லவா?" என்றான் திருமலை.

"அதற்கு நான் எப்படி அதிகாரியாவேன்? சதி நடப்பது உண்மையானால் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது சக்கரவர்த்தியல்லவா? என் தந்தையின் கட்டளையின்றி நான் எப்படி இந்தக் காரியத்தில் பிரவேசிக்க முடியும்!" என்றார் இளவரசர்.

வந்தியத்தேவன் இப்போது குறுக்கிட்டு, "இளவரசே! தங்கள் தந்தை இப்போது சுயாதீனமாயில்லை. பழுவேட்டரையர்கள் அவரைச் சிறை வைத்திருப்பது போல் வைத்திருக்கிறார்கள். யாரும் நெருங்க முடியாதபடி அரண்மனைக்குள்ளே வைத்திருக்கிறார்கள். தங்கள் தமையனாரோ தஞ்சைக்கு வருவதில்லையென்று விரதம் வைத்துக் கொண்டிருக்கிறார். இந்த நிலைமையில் சாம்ராஜ்யத்தைப் பாதுகாப்பது தங்கள் பொறுப்பல்லவா? உடனே பழையாறைக்கு வரவேண்டியது தங்கள் கடமை அல்லவா?" என்றான்.

"இளவரசர் பழையாறைக்கு வர வேண்டிய அவசியம் என்ன? அதுதான் எனக்குத் தெரியவில்லை!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

இளவரசர் சற்று சிந்தனையில் ஆழ்ந்திருந்துவிட்டு, "மண்ணாசை மிகப் பொல்லாதது. இராஜ்யத்தின் பேரில் உள்ள ஆசையினால் இவ்வுலகில் என்னென்ன பயங்கரமான பாவங்கள் நடந்திருக்கின்றன? இன்று சிம்மகிரிக் கோட்டைக்குப் போயிருந்தேனல்லவா? அந்தக் கோட்டையின் வரலாறு உங்களுக்குத் தெரியுமா?" என்றார்.

"நான் கேட்டதில்லை" என்றான் வந்தியத்தேவன்.

"சொல்கிறேன், கேளுங்கள்! சுமார் ஐந்நூறு வருஷங்களுக்கு முன்பு இந்த இலங்கைத் தீவைத் தாதுசேனன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். ஒருவன் பெயர் காசியபன்; இன்னொருவன் மகல்லன். தாதுசேனனின் சேனாபதியும் காசியபனும் சேர்ந்து சதியாலோசனை செய்தார்கள். காசியபன் தன் சொந்தத் தந்தையைச் சிறையில் அடைத்துவிட்டுச் சிங்காதனம் ஏறினான். மகல்லன் கடல் கடந்து தமிழ் நாட்டுக்கு ஓடிப்போனான். சில நாளைக்குப் பிறகு தாதுசேனனின் சிறையைச் சுற்றிச் சுவர் எழுப்பி அடைத்து அவனைக் கொன்று விட்டார்கள். இந்தக் கொடூர பாவத்தைச் செய்த காசியபனுக்குத் தன் சகோதரன் மகல்லன் திரும்பி வந்து பழிக்குப் பழி வாங்குவான் என்ற பீதி உண்டாகி விட்டது. அதற்காக இந்த சிம்மகிரிக் குன்றுக்கு வந்தான். இதன் உச்சியில் கோட்டை கட்டிக் கொண்டு வசித்து வந்தான். செங்குத்தான குன்றாகையால் பகைவர்கள் அதன் பேரில் ஏறிக் கோட்டையைப் பிடிப்பது இயலாத காரியம் என்று நினைத்தான். இம்மாதிரி பதினெட்டு வருஷம் ஒளிந்து வாழ்ந்திருந்தான். கடைசியில் ஒரு நாள் மகல்லன் தன் உதவிக்குப் பாண்டிய ராஜாவின் சைன்யத்தையும் அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தான். சிம்மகிரிக் கோட்டையை அணுகினான். அச்சமயத்தில் காசியபனின் புத்தி பேதலித்து விட்டது. அத்தனை வருஷம் கோட்டையில் ஒளிந்திருந்தவன் அசட்டுத் தைரியத்துடன் வெளிவந்து போராடி இறந்தான்! அப்பேர்ப்பட்ட பாதகன், — தந்தையைக் கொன்ற பாவி, — கட்டிய கோட்டையில் சில அற்புதமான வர்ண சித்திரங்கள் இருக்கின்றன. இன்று சீன யாத்திரீகர்களுடன் போயிருந்த போது பார்த்தேன். அடாடா! அந்தச் சித்திரங்களின் அழகை என்னவென்று சொல்வது? பல நூறு வரு

ஷங்களுக்கு முன்பு எழுதியவை. ஆனால், இன்றைக்கும் சிறிதும் வர்ணம் மங்காமல் புத்தம் புதிய சித்திரங்கள் போல் இருக்கின்றன......''

''ஐயா! நான் ஒரு கேள்வி கேட்கலாமா?'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''தயக்கம் ஏன்? தாராளமாய்க் கேட்கலாம்.''

''சிம்மகிரிக் கோட்டை இன்னமும் பகைவர் படைகளின் வசத்திலே தானே இருக்கிறது?'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''ஆமாம்; அதைக் கைப்பற்றும் முயற்சியை இப்போது தொடங்கும் உத்தேசம் எனக்கு இல்லை. அதனால் வீணான உயிர்ச்சேதம் ஏற்படும்.''

''அதைப் பற்றி நான் கேட்கவில்லை, ஐயா! பகைவர் கோட்டைக்குள் தாங்கள் பிரவேசித்தது உசிதமா என்று கேட்டேன். சின யாத்திரீகர்களுக்கு யானைப் பாகனாகத் தாங்கள் போக வேண்டிய அவசியம் என்ன நேர்ந்தது? யானையின் கழுத்தில் தங்களைப் பார்த்ததும் என் கண்களை நம்புவதா இல்லையா



என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டு விட்டது. தங்களுடைய புருவத்தின் நெரிப்பைப் பார்த்துத்தான் சந்தேகம் தெளிந்து நிச்சயப்படுத்திக் கொண்டேன். இப்படித் தங்கள் உயிருக்கு அபாயத்தை ஏற்படுத்திக் கொள்ளலாமா?''

''என் உயிர் மட்டும் அவ்வளவு உயர்ந்ததா, திருமலை! எத்தனை சோழ நாட்டு வீரர்கள் இந்த இலங்கையில் வந்து உயிரை விட்டிருக்கிறார்கள்?''

''அவர்கள் போர்க்களத்தில் உயிர் துறந்தார்கள். தாங்கள் அநாவசியமாகத் தங்களை அபாயத்துக்கு உள்ளாக்கிக் கொண்டீர்கள்!''

''அநாவசியமில்லை; இரண்டு காரணங்கள் உண்டு. சிம்மகிரி சித்திரங்களைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை எனக்கு வெகு நாளாக இருந்தது. அந்த ஆசையை இன்று பூர்த்தி செய்து கொண்டேன்...''

''இளவரசே! இன்னொரு காரணம்?''


''பார்த்திப பல்லவர் திரிகோணமலையில் வந்து இறங்கினவுடனே, எனக்குச் செய்தி கிடைத்தது. அவரை இன்று பார்க்க விரும்பவில்லை. ஏனெனில்......''

''ஏனெனில்......''

''மாதோட்டத்துக்கு முதன் மந்திரி வந்திருக்கிறார் என்பதும் எனக்குத் தெரியும். அவரிடமிருந்து செய்தி வரும் என்று எதிர்பார்த்தேன். இரண்டு மூத்தவர்களிடமிருந்து செய்தி வந்தால், முதலில் கிடைக்கிற செய்தியின்படிதானே நான் நடந்தாக வேண்டும்?''

வந்தியத்தேவன் ''ஆகா! அப்படிச் சொல்லுங்கள். என் கட்சிதானே ஜயித்தது?'' என்று குதூகலித்தான்.

''அரசே! இவன் தங்களைத் தந்திரத்தினால் ஏமாற்றி விட்



டான்......''

"அவன் ஏமாற்றவில்லை. நானாகவே ஏமாந்தேன். உன்னை அழைத்து வருவதற்கு வைத்திருந்த வீரனை இவன் குதிரை மேலிருந்து தள்ளிவிட்டு அக் குதிரை மீது தான் ஏறிக் கொண்டு வந்ததை நான் கவனித்து விட்டேன். இவனுக்கு ஒரு பாடம் கற்பிக்க விரும்பினேன்......

"நல்ல பாடம் கற்பித்தீர்கள்! ஒவ்வொரு பாடமும் ஒரு மணங்கு நிறையிருக்கும். இப்போது நினைத்தாலும் என் முதுகும் மார்பும் வலிக்கின்றன! ஓலை கொண்டு வந்த தூதனை இப்படித் தானா நடத்துவது? போனால் போகட்டும்; தாங்கள் மட்டும் என்னுடன் பழையாறைக்கு வருவதாயிருந்தால்..."

"எனக்கு ஒரு பழைய பாடல் ஞாபகம் வருகிறது! திருமலை! என் முன்னோர்களில் பெருங்கிள்ளி வளவன் என்று ஒரு மன்னர் இருந்தார். அவரிடம் ஓர் அதிசயமான யானை இருந்தது. அதன் ஒரு கால் காஞ்சியில் இருக்கும்; இன்னொரு காலினால் தஞ்சையை மிதிக்கும்; மற்றொரு கால் இந்த ஈழ நாட்டை மிதிக்கும். நாலாவது கால் உறையூரில் ஊன்றி நிலைத்திருக்கும்.

'கச்சி ஒரு கால் மிதியா, ஒரு காலால்
தத்துநீர்த் தண்தஞ்சை தான் மிதியாப் — பிற்றையும்
ஈழம் ஒரு கால் மிதியா வருமே நம்
கோழியர் கோக் கிள்ளி களிறு!'

என்று அற்புதமான கற்பனையுடன் ஒரு புலவர் பாடியிருக்கிறார். இந்த இலங்கையில் மந்தை மந்தையாக ஆயிரம் ஆயிரம் யானைகள் இருக்கின்றன. இருந்து என்ன பயன்? புலவருடைய கற்பனை யானையைப் போல் ஒரு யானை இருந்தால் நானும் ஒரே சமயத்தில் காஞ்சியிலும் பழையாறையிலும் மதுரையிலும் இலங்கையிலும் இருக்கலாம் அல்லவா?''

புலவரின் யானையைப் பற்றிக் கேட்டதும் வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியானும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.,

"அப்படிப்பட்ட யானைதான் இல்லையே? தாங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று திருமலை கேட்டான்.

"சந்தேகம் என்ன? பழையாறைக்கு வருவதென்றுதான் முடிவாகி விட்டதே?'' என்றான் வந்தியத்தேவன்.

"உங்கள் சண்டையைக் கொஞ்சம் நிறுத்தி வையுங்கள். நாளை அநுராதபுரம் போவோம். அங்கே பார்த்திப பல்லவரை நான் எப்படியும் சந்தித்தாக வேண்டும். அவர் சொல்வதையும் கேட்டு விட்டுத்தான் முடிவு செய்ய வேண்டும்'' என்றார் இளவரசர்.

அத்தியாயம் 33
சிலை சொன்ன செய்தி

மறுநாள் காலையில் சூரியன் உதயமாவதற்குள் அருள்மொழி வர்மர், ஆழ்வார்க்கடியான், வந்தியத்தேவன் ஆகிய மூவரும் அநுராதபுரத்துக்குப் புறப்பட்டார்கள். சிறிது தூரம் காட்டுப் பாதையில் வந்த பிறகு இராஜ பாட்டையை அடைந்தார்கள். வேறு வீரர்கள் யாரையும் இளவரசர் தம்முடன் மெய்க்காவலுக்கு அழைத்து வராதது வந்தியத்தேவனுக்கு வியப்பை அளித்தது. காலை நேரத்தில் இருபுறமும் மரங்கள் அடர்ந்த அந்த இராஜ பாட்டையில் பிரயாணம் செய்வதே ஓர் ஆனந்த அனுபவம். பழையாறை அரசிளங்குமரி தன்னிடம் ஒப்புவித்திருந்த வேலையைச் செய்து முடித்துவிட்டோம் என்ற பெருமித உணர்ச்சி அவன் உள்ளத்தில் பொங்கிக்கொண்டிருந்தது. அது மட்டுமா? பல வருஷங்களாக அவன் இருதயத்தில் பொங்கிக் கொண்டிருந்த ஆசையும் நிறைவேறிவிட்டது. சோழவள நாட்டின் செல்லப் பிள்ளையைப் பார்த்தாகி

ராலீஸ். பரம்பரைச் சிறப்பிலே ஊக்கம் பெறுவோர்.



பாய்மரக் கப்பல்.

பழங்கால இந்தியாவில் கட்டப்பட்ட பாய்மரக் கப்பல். கப்பல் கட்டும் தொழில், செழிப்பான ஏற்றுமதி தொழில்துறையாக இந்தியாவில் இருந்தது. இந்திய வாணிபக் கப்பல்கள் அரேபியா, எகிப்து, ஆப்பிரிக்கா, ரோம் மற்றும் மெக்சிகோ நாடுகள் வரை பயணம் பட்டிருந்தன. பாய்மரக் கப்பல், வளர்ந்து வரும் சர்வதேச வாணிபத் தொடர்புகளைப் பெருக்கி, எல்லோரது வாழ்க்கையையும் வளப்படுத்தும் மனித விடாமுயற்சியைப் பிரதிபலிக்கும் சின்னமாக விளங்குகிறது.

செழிப்பின் அலைகள்

பல நூற்றாண்டுகளாக இந்தியநாடு கொண்டுள்ள உலக வாணிபத் தொடர்புகளில் எங்கள் கனவு பிரதிபலிக்கிறது.

நம் நாட்டின் வெளிநாட்டு செலாவணி ஒதுக்கீடுகளைப் பலப்படுத்துவதில் எங்களுக்குள்ள பொறுப்புக்கு இக்கனவே அடிப்படையாகும்.

பக்குவப்படுத்தப்பட்ட உணவுகள், பொறியியல் இனங்கள், டெக்ஸ்டைல்கள், கம்பளங்கள், தோல் மற்றும் தோல் பொருட்கள்— எதுவாயினும் அவற்றிற்குச் சர்வதேச சந்தையில் சிறந்த விலை கிடைப்பதன் மூலம், நம் தேசிய வருமானத்தைப் பெருக்க நாங்கள் இடைவிடாது பாடுபடுகிறோம்.

அதே நேரத்தில், நிர்வாக மற்றும் தொழில்நுட்ப உதவிகள் மூலம் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் துறைகள் மேம்பாடு பெற, நாங்கள் ஊக்குவிக்கிறோம்.

வெளி நாடுகளில் ராலீஸ் தயாரிப்புகளுக்கு இருக்கும் அமோக வரவேற்பே எங்களின் வெற்றிக்குச் சான்று— ஆயினும் எங்கள் ஆத்மதிருப்தி வேறு பலவற்றில் உள்ளது.

அதாவது இந்தியாவின் ஏற்றுமதி, 10 மடங்கு உயர்ந்துள்ளது. 1966-67ல் ரூ. 1157 கோடியாக இருந்தது 1985-86ல் ரூ. 11,012 கோடியாகப் பெருகியுள்ளது என்று அறிவதிலே. அத்துடன் நம் நாட்டின் அந்நியச் செலாவணி ஒதுக்கீடுகள், இதே கால வரம்பிற்குள் ரூ. 296 கோடியில் இருந்து, ரூ. 7384 கோடியாகப் பெருகியுள்ளது என்று அறிவதிலே.

நாட்கள் செல்லச் செல்ல, நமது தேசிய வருமானம், வலுவடைவதோடு, வாழ்க்கையின் தரம் வளம் பெற்று வருகிறது.

எதிர்காலம் ஒளிமயமானது

ஏனெனில் எங்கள் கனவுகளில் பிரதிபலிக்கும் வாழ்வின் செழிப்பு, பெருகி வரும் தேசிய வருமானத்தின் வலிமையில் உயிர்த் துடிப்புடன் உள்ளது.

வாழ்க்கை வளம்பெற வழிவகுப்பது ராலீஸ்



RALLIS
Multi-Technology Group

Agrochemicals
Consumer Durables
Control Systems
Engineering
Pharmaceuticals
Exports



அருள்வாக்கு

குழந்தைகள் ஸ்வாமியை 'உம்மாச்சி' என்றே சொல்லும். குழந்தைகளின் பரம்பரையில் சில தனி வார்த்தைகள் உண்டு. இவை ஆயிரக்கணக்கான வருஷங்களாக வந்துகொண்டிருக்கின்றன. பெரியவர்களின் வார்த்தைகளும் அவற்றின் அர்த்தங்களும் மாறும். குழந்தை மொழி மாறுவதில்லை. 'உம்மாச்சி' என்ற குழந்தை மொழிக்கு ஸ்வாமி என்று அர்த்தம். என்னிடம் குழந்தைகளை அழைத்து வருகிறவர்கள் கூட, "உம்மாச்சித் தாத்தாவுக்கு நமஸ்காரம் செய்" என்று அவற்றிடம் சொல்லக் கேட்டிருப்பீர்கள். 'இதென்ன உம்மாச்சி? இதன் சரியான மூலம் என்ன?' என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

திருச்சி மலைக்கோட்டைக்குப் போயிருந்தேன். அங்கே உள்ள கோயில் ஸ்ரீ பாதம் தாங்கிகளில் திருநல்லத்திலிருந்து (கோனேரி ராஜபுரம்) வந்திருக்கிறவர்களும் இருந்தார்கள். அவர்களில் ஒருவரை இன்னொருவர் "உம்மாச்சு" என்று கூப்பிடுவதைக் கேட்டேன். திருநல்லத்தில் ஸ்வாமியின் பெயர் உமா மகேசுவரன் என்பது. எனக்கு உடனே விஷயம் 'பளிச்'சென்று புரிந்தது. உம்மாச்சு, உம்மாச்சி எல்லாம் உமா மகேசனைக் குறிப்பனவே என்று தெரிந்து கொண்டேன். ஆக, குழந்தைகளின் பாஷையிலிருந்தே அவர்கள் மிகப் பழம் காலத்திலிருந்து உமாதேவியுடன் சேர்ந்த மகேசுவரனைத்தான் ஸ்வாமியாக நினைக்கிறார்கள் என்பது தெரிய வந்தது.

குழந்தைகளால் சொல்லப்படுகிற ஒரு விஷயத்துக்குப் பெருமை அதிகம். குழந்தைகளிடம் காமமும் குரோதமும் நிலைத்திருப்பதில்லை. இந்த விநாடி ஆசைப்பட்டு வாங்கிய பொருளை அடுத்த விநாடி கீழே போட்டுவிட்டுப் போய்விடும். இந்த விநாடி கோபித்துக் கொண்ட ஒருவரிடம் அடுத்த விநாடியே ஆசையோடு ஓடி ஒட்டிக் கொள்ளும். குழந்தைக்கு மோச எண்ணம் இல்லை. கபடம் இல்லை. இதனால்தான் உபநிஷத்துக்களும் நம்மைக் 'குழந்தையாக இரு' என்று உபதேசிக்கின்றன. குழந்தையே தெய்வம் என்பார்கள். அந்தக் குழந்தை,தெய்வம் என்றால் உமாமகேசுவரன் என்று சொல்கிறதென்றால் அந்தக் கட்டளையை நாம் ஏற்க வேண்டும். வேதத்தின் பாஷையும் குழந்தையின் பாஷையும் ஒன்றாகச் சொல்வது போல் எல்லோரும் சாயங்காலத்தில் அம்பிகை சகிதனான ஈசுவரனைத் தியானிப்போமாக.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

விட்டது. நாடு நகரமெல்லாம் மக்கள் எந்த வீர இளைஞரின் வீரப் பிரதாபங்களையும் குணாதிசயங்களையும் பாடிப் புகழ்ந்து கொண்டிருந்தார்களோ, — அந்த அரசிளங் குமாரரைச் சந்தித்தாகிவிட்டது. அந்தச் சந்திப்புதான் எவ்வளவு அதிசயமான சந்திப்பு? — அருள்மொழி வர்மர் ஒரு விசித்திரமான மனிதர் என்று தான் கேள்விப்பட்டிருந்தது உண்மைதான்! திடீரென்று குதிரையைத் திருப்பித் தன்னைத் தாக்கித் திக்குமுக்காடச் செய்துவிட்டாரே? அவர் சேனைக்குத் தலைமை வகித்துச் செல்லுமிடங்களிலெல்லாம் வெற்றி மேல் வெற்றியாக இருந்து வருவதின் இரகசியமும் இதுதான் 'போலும்! பகைவர்கள் எதிர்பாராத சமயத்தில் எதிர்பாராத இடத்தில் தாக்குவதே இவருடைய போர் முறை போலும்! ஆனால் இவரது இடைவிடா வெற்றியின் இரகசியம் இதுமட்டுந்தானா? சேனா வீரர்களுடன் எவ்வளவு பவ்யமாக இவர் பழகுகிறார்? எப்படி அவர்களைத் தம் அன்புக்கு வசப்படுத்தி வைத்திருக்கிறார்!

போர் வீரர்களை மட்டுந்தானா? தாம் வெற்றிகொண்ட நாட்டின் மக்களையும் எப்படி வசீகரப்படுத்தி வைத்திருக்கிறார்? சமீபத்தில் மாபெரும் போர் நடந்த நாடு என்று இதைச் சொல்ல முடியுமா? சாலைகளில் மக்கள் எவ்வளவு உல்லாசமாக நடந்து கொண்டிருக்கிறார்கள்! இரு பக்கங்களிலுமுள்ள கிராமங்களில் ஜனங்கள் எப்படி நிர்ப்பயமாகவும் கவலையின்றியும் தத்தம் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்? மக்களின் முகங்களில் பீதியின் அறிகுறியோ துயரத்தின் சின்னமோ சிறிதும் காணப்படவில்லையே? கலகலவென்று பெண்களும் குழந்தைகளும் சிரிக்கும் சத்தம் கூட அடிக்கடி காதில் விழுகிறதே! இது என்ன விந்தை! இவர் எத்தகைய விந்தையான மனிதர்! — 'வெற்றி கொண்ட நாட்டு மக்களிடமிருந்து

உணவுப் பொருளைக் கைப்பற்றக் கூடாது என்று இளவரசர் பிடிவாதம் பிடித்துச் சோழ நாட்டிலிருந்து சைன்யத்துக்கு உணவுப் பொருள் வர வேண்டுமென்று வற்புறுத்தியதும், அதன் காரணமாகப் பழுவேட்டரையர்களுக்கு ஏற்பட்ட கோபமும், அவர்கள் சுந்தர சோழரிடம் புகார் கூறியதும், — இவையெல்லாம் வந்தியத்தேவனுக்கு நினைவு வந்தன. அன்றியும் ஆதித்த கரிகாலர் கையாளும் கொடூரமான போர் முறையையும் அருள்மொழி வர்மரின் தயாளம் பொருந்திய தர்ம யுத்த முறையையும் அவன் தன் மனத்திற்குள்ளே ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டான். சில நாளைக்குமுன்புவரையில்தன்னுடைய எஜமானராயிருந்த ஆதித்த கரிகாலரைப் பற்றி எவ்விதத்திலும் குறைவாக எண்ணுவது அவனுக்கே பிடிக்கவில்லை. ஆயினும் அந்த அநுராதபுரத்து இராஜபாட்டையில் இருபுறமும் வசித்த கிராம ஜனங்களின் மலர்ந்த முகங்களைப் பார்க்கும் போதெல்லாம் அவன் மேற்கண்டவாறு ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அம்மம்மா! ஆதித்த கரிகாலர் யுத்தம் செய்து திரும்பிய நாடுகளில் இத்தகைய காட்சிகளைக் காண முடியுமா? எங்கெங்கும் ஒரே ஓலக் குரல் அல்லவா கேட்டுக் கொண்டிருக்கும்?

இத்தகைய அபூர்வ குணாதிசயம் படைத்த இளவரசருடன் எத்தனையோ விஷயங்களைப் பற்றிப் பேச வேண்டும்; எவ்வளவோ காரியங்களைப் பற்றிக் கேட்க வேண்டும் என்று வந்தியத்தேவனுடைய உள்ளம் துடிதுடித்தது. ஆனால் புரவிகளின் பேரில் ஆரோகணித்து விரைவாகச் சென்று கொண்டிருக்கும் சமயத்தில் பேசுவதற்கு இடம் எங்கே? — ஆம், பேசுவதற்கு ஒரே ஒரு சந்தர்ப்பம் மட்டும் அவனுக்குக் கிடைத்தது.

அநுராதபுரத்துக்குக் கிட்டத்தட்டப் போய்க் கொண்டிருந்த போது சாலை ஓரத்தில் பெரியதொரு புத்த பகவானின் சிலை நிற்பதை வந்தியத்தேவன் கண்டான். இம்மாதிரி சிலைகள் இலங்கையில் பற்பல இடங்களிலும் இருந்தபடியால் அதைப் பற்றி வந்தியத்தேவன் அதிக கவனம் செலுத்தவில்லை. ஆனால் பொன்னியின் செல்வர் அச்சிலையின் அருகில் குதிரையைச் சமரென்று இழுத்துப் பிடித்து நிறுத்தியதும் இவனும் நிற்க வேண்டியதாயிற்று. சற்று முன்னாலேயே போய்க் கொண்டிருந்த ஆழ்வார்க்கடியானும் குதிரையை நிறுத்தி இவர்கள் பக்கம் திரும்பினான்!

பொன்னியின் செல்வர் சற்று நேரம் அந்த புத்த பகவானுடைய கம்பீரமான சிலையைக் கவனமாக உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''அடடா! என்ன அற்புதக் கலை!'' என்றார்.

''எனக்கு ஓர் அற்புதமும் தெரியவில்லை. இந்த நாட்டில் எங்கே பார்த்தாலும் இத்தகைய பிரம்மாண்டமான புத்தர் சிலைகளை வைத்திருக்கிறார்கள். எதற்காகவோ தெரியவில்லை!'' என்றான் வந்தியத்தேவன்.

இளவரசர் வந்தியத்தேவனைப் பார்த்துப்புன்னகைசெய்தார். ''மனத்தில் உள்ளதை உள்ளபடி பேசுகிறீர். அதில் எனக்கு மகிழ்ச்சி!'' என்றார்.

''இளவரசே! வல்லவரையர் இன்றைக்குத்தான் உண்மை பேசுவதென்கிற வழக்கத்தைக் கைக்கொண்டிருக்கிறார்!'' என்றான் திருமலை.

''வைஷ்ணவரே! எல்லாம் சகவாச தோஷந்தான்! வீர நாராயணபுரத்தில் உம்மைப் பார்த்தது முதல் என் நாவில் கற்பனா சக்தி தாண்டவமாடி வந்தது. இளவரசரைப் பார்த்ததிலிருந்து உண்மை பேசும் வழக்கம் வந்துவிட்டது!'' என்றான் வந்தியத்தேவன்.

அவர்களுடையசொற்போரைஇளவரசர் கவனிக்கவில்லை. சிலையின் தோற்றத்தில் ஆழ்ந்திருந்தார்.

''உலகத்திலேயே சிற்பக் கலையின் அற்புதம் பூரணமாக விளங்கும் வடிவங்கள் இரண்டுதான். ஒன்று நடராஜர்; இன்னொன்றுபுத்தர்'' என்றார்.

''ஆனால் நடராஜ வடிவங்களை இம்மாதிரி பிரம்மாண்ட வடிவங்களாக நம் நாட்டில் செய்வதில்லையே!''

''இலங்கையில் முற்காலத்தில் இருந்த மன்னர்களில் சிலர் மகா புருஷர்கள். அவர்கள் ஆண்ட ராஜ்யம்

சிறியது. ஆனால் அவர்களுடைய இருதயம் பெரியது; அவர்களுடைய பக்தி மிகப் பெரியது. புத்த பகவானிடம் அவர்களுடைய பக்தியை இப்படிப் பெரிய வடிவங்களை அமைத்துக் காட்டினார்கள். புத்த சமயத்தில் அவர்களுடைய பக்தியைப் பெரிய பெரிய ஸ்தூபங்களை அமைத்துக் காட்டினார்கள். இந்த நாட்டில் உள்ள புத்தர் சிலைகளையும் விஹாரங்களையும் ஸ்தூபங்களையும் பார்த்துவிட்டு நம் சோழ நாட்டிலுள்ள சின்னஞ்சிறு சிவன் கோவில்களை நினைத்தால் எனக்கு அவமானமாயிருக்கிறது!'' என்றார் பொன்னியின் செல்வர்.

இவ்விதம் சொல்லிவிட்டுக் குதிரையிலிருந்து இறங்கி இளவரசர் புத்தர் சிலையண்டை சென்றார். சிலையின் பத்ம பாதங்களையும் அந்தப் பாதங்களை அலங்கரித்த தாமரை மொட்டுக்களையும் சிறிது நேரம் கவனமாகப் பார்த்தார். பின்னர் புத்தர் சிலையின் பாதங்களைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டுத் திரும்பி வந்து பழையபடி குதிரையின் மீது ஏறினார்.

குதிரைகள் சற்று மெதுவாகவே சென்றன. "ஏதேது? இளவரசர் புத்த மதத்தைச்சேர்ந்துவிடுவார்போலிருக்கிறதே!'' என்று வந்தியத்தேவன் திருமலையிடம் சொன்னது இளவரசர் காதில் விழுந்தது.

அவர்கள் இருவரையும் பொன்னியின் செல்வர் பார்த்து, "புத்த பகவானிடம் என்னுடைய பக்தி காரணார்த்தமானது. அந்தப் புத்தர் சிலையின் பத்ம பாதங்கள் எனக்கு ஒரு முக்கியமான செய்தியை அறிவித்தன!'' என்றார்.

"ஆகா! எங்கள் காதில் ஒன்றும் விழவில்லையே?''

"மௌன பாஷையில் அச்செய்தி எனக்குக் கிடைத்தது.''

"அது என்ன செய்தி? எங்களுக்குத் தெரியலாமா?''

"இன்றிரவு பன்னிரண்டு நாழிகைக்கு அநுராதபுரத்தில்சிம்மதாரைத் தடாகத்துக்கு அருகில் நான் வரவேண்டுமென்று பகவானுடைய பாதமலர்கள் எனக்கு அறிவித்தன!'' என்றார் பொன்னியின் செல்வர்.

(தொடரும்)

சிதைந்த ஸ்வரங்கள்

அலாரம் வெகு சிரத்தையுடன் காலை மூன்று மணிக்குச் சிணுங்கியது.

திடுக்கிட்டுக் கண்விழித்த கணேசன் அதன் தலையைத் தட்டி அடக்கினான்.

வேதா— இளம் மனைவி— அவன் கழுத்தை இதமாய் கட்டிக் கொண்டு, ஒருக்களித்துப் படுத்திருந்தாள். அந்த இளமைத் திரட்சியில் கண்கள் கூசின.

மனம் ஒரு தடவை "ஸ்கிப்" ஆடியது.

மெல்லக் கனைத்தான். வேதாவின் தூக்கம் கலையவில்லை. சின்னக் குழந்தையாய்த் தூங்கும் அவளை எழுப்பக் கொஞ்சம் யோசித்தான். 'கரெக்டா நாலு இருபதுக்கு ஏற்காடு எக்ஸ்பிரஸ் அந்த ஸ்டேஷனுக்கு வந்திடும். ஸ்டேஷன் இங்கிருந்து பதினேழு மைல். ராத்திரியே டாக்ஸி பேசியாச்சு. அவனும் ரெடியாயிருப்பான். அவங்களை வரவேத்து அழைச்சுட்டு வர்ற பொறுப்பை நானே வலுவிலே விரும்பி ஏத்துக்கிட்டு இப்படி அசட்டையா இருந்தா எப்படி?' —என்றவன் அடுத்த நிமிஷமே சுறுசுறுப்பானான். சோம்பல் போன இடம் தெரியவில்லை.

அவளைப் பின்னிப் பிணைந்து கிடக்கும் வேதாவின் கைகளை மெல்ல எடுத்து, கால்களை நகர்த்தி, அவளது தூக்கம் கலையாமல் திருப்பிப் படுக்க வைத்தான்.

அவசரமாய் பாத்ரூம் போய், பல் தேய்த்து குளித்து, பேண்ட், ஷர்ட் மாட்டி, லேசான ஒப்பனையுடன் ரெடியானான்.

'வேதாவை எழுப்பிச் சொல்லிட்டுப் போகலாம்...'

மறுபடியும் பெட்ரூமுக்குப் போனான்.

வேதா இன்னும் தூங்கிக் கொண்டிருந்தாள்.

சட்டென்று அவளது செழுமையான கன்னத்தில் மிருதுவாய் முத்தமிட்டான் கணேசன். சோப்பு வாசனையும் பவுடர் மணமும் ஒருசேரக் கலந்து வேதாவின் நாசியைத் தாக்க......

கண்ணைக் கசக்கி எழுந்தாள்.

"வேதா நேரமாச்சு.... நான் புறப்படறேன். என்னை வெளியிலே தள்ளிக் கதவைச் சாத்தி தாப்பாப் போட்டுக்க. அப்புறம் நிறுத்தி நிதானமா கும்பகர்ணியாட்டம் எட்டு மணி வரை தூங்குவியாம். கமான் கெட் அப்..."

"என்னங்க இப்பவே புறப்படணுமா?"

"சரிதான்... விடிய விடியக் கதை கேட்டு சீதைக்கு ராமன் சித்தப்பான்னு சொல்லறியா? நேற்றுச் சொன்னதை அதுக்குள்ளே மறந்துட்டியா? யம்மாடி இதப்பாரு, நான் உன் புருஷன். அதாவது ஞாபகமிருக்கா?"

"அடச்சீ, என்னங்க நீங்க? அசிங்கமாப் பேசிக்கிட்டு... நான் ஒண்ணும் மரமண்டையில்லே! ஒங்க அபிமான பாடகி—கர்நாடக சங்கீத இசையரசி—சென்னை ஜெயலட்சுமி—இந்த ஊர் கோட்டை கோயில் கும்பாபிஷேகத்திலே கச்சேரி செய்யாறயில்லே வர்றாங்க. அவங்களைக் கூட்டிட்டு வர நீங்க இப்பவே ஸ்டேஷனுக்குப் போறீங்க. என்ன சரிதானே?"

"சரிதான்... நான் வரட்டுமா? காப்பி கூட தராம துரத்தறே; சரி.. வெளியிலே குடிச்சுக்கறேன். காலம் கெட்டுக்கிடக்கு. கதவைச் சாத்தித் தாப்பாப் போட்டுக்க! நான் வரட்டுமா?"

கணேசன் புறப்பட்டுப் போனான்.

வேதா — கதவைச் சாத்தி, பெட்ரூமைத் தஞ்சமடைந்தாள். தூக்கம் வரவில்லை. படுத்துக் கொண்டு யோசித்தாள். கல்யாணமாகி இந்த நான்கு மாதங்களில் கணேசனின் குணாதிசயங்கள் எல்லாமே அவளுக்குப் பரிபூரணமாய் அத்துபடியாகி இருந்தது. கர்நாடக இசையில் அவனுக்கிருந்த லயிப்பும், பிடிப்பும், ஸ்வரஞானமும் அவளைக் கவர்ந்து அதிசயப்பட வைத்தது.

கணேசன் டாக்ஸி ஸ்டாண்டை அடையும் போது மணி மூன்று முப்பத்தைந்து. 'சர்' ரென்று அவனை உரசிக் கொண்டு வந்து நின்றது, அவன் பேசி வைத்த டாக்ஸி.

"என்னா சார் புறப்படலாமா?"— என்றான் டிரைவர்.

"ம்., சீக்கிரமாப் போப்பா.. இப்ப கௌம்பினாத்தான் சரியா இருக்கும்."— என கணேசன் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே டாக்ஸி ஒரு குலுக்கலுடன் உறுமிப் பறந்தது.

கணேசன் — முன்யோசனையுடன் கையோடு

பாரதி வீரராகவன்


கொண்டு வந்திருந்த காஸெட்டை டிரைவரிடம் தந்தான்.

பிளேயரில் சொருக... இசைவாணி சென்னை ஜெயலட்சுமி இசைமழை பொழிய ஆரம்பித்தாள்.

முதலில், 'கௌளை ராகத்தில் பிரணமாம் யஹம்' அடுத்து, 'பஜரே மானஸ' கர்நாடக தேவகாந்தாரியில் மதுரமாய் ஒலித்தது.

ஒவ்வொரு கீர்த்தனையும் பாவம் ததும்ப, டிரைவரும் மெய் சிலிர்த்தான்.

கணேசன் அக்கறையாய் விளக்கம் தந்தான். ஒரு தலைசிறந்த சங்கீத விமர்சகனின்



தரமான விமர்சனத்தை அதில் காண முடிந்தது.

காஸெட்டில் அந்த காணுஞ்சவி முடிவதற்கும் — நான்கு பாதை கூடும் அந்த கூட்டு ரோட்டில் கார் மக்கர் செய்யவும் சரியாக இருந்தது.

கணேசன் அதிர்ந்தான்... மணி நான்கை நெருங்கிக் கொண்டிருந்தது.

டிரைவர் இறங்கி, பானட்டைத் திறந்து குடைந்தான். கால் மணி நேரம் ஏதேதோ செய்தும் கார் நகரவில்லை.

கணேசன் அவசரப்பட்டான்.

''ஏம்பா டிரைவர், என்ன பண்ணலாம்? போன் பண்ணக் கூட வசதியில்லாத எடத்திலே வந்து மாட்டிக்கிட்டமே''

''பாக்கலாம் இருங்க... ஏதாச்சும் லாரி போச்சுன்னு அதுலே போயி வேறெ டாக்ஸி எடுத்தாரலாம்..

கணேசன் சுற்றிலும் ஒரு தடவை நோட்டம் விட்டான். ரோட்டோரத்தில் நாலைந்து குடிசைகள் தெரிந்தன. பாதையை வெறித்தான். லாரி ஏதும் வரவில்லை. நேரம்தான் கடந்தது. கணேசனின் மனம் புழுங்கித் தவித்தது. செய்வதறியாது திகைத்தான்.

நேரம் நான்கரையைத் தாண்ட, ஏதோ ஒரு நம்பிக்கையில் ஒரு குடிசைக் கதவைத் தட்டினான் கணேசன்.

கிழவி ஒருத்தி அலறிப் புடைத்து எட்டிப் பார்த்தாள். கணேசனுக்கு கொஞ்சம் தெம்பு வந்தது.

"ஏந்தாயி... இங்கே ஏதாச்சும் சைக்கிள் ஷாப் இருக்குதா?"

"அதோ.... அந்த எதிர் வூடு சைக்கிள் ஷாப்புத்தான்."

கிழவி கதவை சாத்திக் கொண்டாள்.

லேசாக மழைத் தூறல் போட ஆரம்பித்திருந்தது. கணேசன் எதிரில் போய் கடைக்காரரை எழுப்பி விஷயத்தைச் சொன்னான்.

முன் பின் தெரியாததால், கடைக்காரர் சந்தேகப் பார்வை பார்த்தார். கணேசன் டாக்ஸியையும், டிரைவரையும் ஜாமீன் காட்டினான்.

ஒரு பொத்தல் சைக்கிள் வெளியே வந்தது. ஹைதர் காலப் பழசு போலிருந்தது. 'லொட' 'லொட' வென்று அநியாயத்துக்கு ஆடியது.

வேறுவழியில்லை... விதியே என்று சைக்கிளை மிதிக்க ஆரம்பித்தான் கணேசன். மழை வலுத்திருந்தது. இடி மின்னலுடன் பேய்க் காற்றும் சேர்ந்து அவனைப் புழியாய்த் தாக்கியது.

கணேசன் எதையும் பொருட்படுத்தாமல் கருமமே கண்ணாகச் சைக்கிளை ஓட்டினான். தொட்ட காரியம் எப்படியும் முடிக்க வேண்டும் என்ற வைராக்கியம் அவன் மனத்தில் மேலோங்கியிருந்தது.

கணேசன் மை இருட்டில், நடத்தும் பகீரதப் பிரயத்தனம் டிரைவரை உலுக்கியது.

"இப்படி ஒரு பைத்தியத்தை நான் இது வரை பாக்கல்லே. கொட்டற மழையிலே 'லொங்கு' 'லொங்கு'ன்னு சைக்கிள மிதிச்சுக்கிட்டு எட்டு மைல் போறதுன்னு சாதாரணமா? அந்த இசைவாணி இவரை எப்படி ஆட்டி வெக்கிறா? ஹூம்... இப்படியும் சில பேர்! மனுஷன் போயி வேறெ டாக்ஸி எடுத்தாறத்துக்குள்ளே சுத்தமா பொழுது விடிஞ்சிடும்."

கணேசன் இந்து அறநிலையத் துறையின் ஆட்சிக்குட்பட்ட அந்தப் புராதனக் கோட்டை கோவிலின் நிர்வாக அதிகாரி. அந்தக் கோயிலுக்கு மாற்றலாகி வந்து மூன்று மாதமாகிறது. அவன் வந்த நேரம், அந்தக் கோயிலுக்கு அடித்தது யோகம். புனருத்தாரணம் செய்து, இன்று காலை கும்பாபிஷேகம் நடை பெற இருந்தது.

பதினைந்து நாள் முன் கூடிய கும்பாபிஷேகக் கமிட்டி மெம்பர்கள் ஒரு முடிவெடுத்தார்கள். கும்பாபிஷேக நாளில் இரவு திரை இசை விருந்தளிக்க ஏதாவது ஒரு ஆர்க்கெஸ்ட்ராவை ஏற்பாடு செய்ய யோசித்தார்கள்.

கணேசனுக்கு அதில் கொஞ்சம் கூட சம்மதமில்லை. தயங்கினான்.

'உபாசனையில் சிறந்தது நாதோபாசனை. அஞ்சலியில் சிறந்தது கீதாஞ்சலி. தெய்வ சன்னிதியில் சினிமா டப்பாங்குத்துப் பாட்டா? வேறு வழியில்லையா?' — என தீவிரமாய் யோசித்தான்.

அவன் மூளையில் ஒரு பொறி தட்டியது. சென்னை ஜெயலட்சுமியின் கச்சேரியை சிபாரிசு செய்தான்.

'ரெண்டாயிரம்மட்டும்தான் அதுக்குன்னு ஒதுக்க முடியும். கணேசன் சொல்ற பாட்டி அந்தத் தொகைக்குக் கச்சேரி செய்ய வருவாங்களான்னு தெரியலே! அதிகம் கேட்டா அது கணேசன் தலையிலே விடிஞ்சதுதான். கணேசன் பொறுப்பேத்துக்கிட்டாச் சம்மதிக்கறோம்.'

கணேசன் அந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடத் தயாராயில்லை.

அந்த இசைவாணியின் பாடல்களை ரேடியோவிலும், கேஸட்டிலும் கேட்டிருக்கிறானே தவிர, இதுவரை அவளை நேரில் பார்த்ததில்லை. அந்த நேரம் இப்பொழுது வலுவிலே வந்திருக்கிறது. அவன் மனம் சந்தோஷத்தில் 'தீம் தீம்' என்று குதித்துக் கும்மாளமிட்டது.

கமிட்டி மெம்பர்களின் கண்டிஷனுக்கு ஒத்துக் கொண்டான். அன்றே சென்னை கிளம்பினான். அவன் போன நேரம் இசைவாணி ஊரிலில்லை. வேறு ஏதோ ஊரில் கச்சேரியாம். செகரட்டரியிடம் ரேட் பேசி டேட் வாங்கினான். கைப்பணம் ஐந்நூறு போட வேண்டி வந்தது. ரொக்கமாக இரண்டாயிரத்து ஐந்நூறு தந்து வெற்றியுடன் திரும்பினான்.

அவனது பாக்கெட்டிலிருந்து ஐந்நூறு போனதைப் பற்றி வேதாவிடம் கூடச் சொல்லவில்லை.

மழை ஓய்ந்திருந்தது.

கணேசன் வேறு டாக்ஸி பிடித்து, சைக்கிளை மேலே போட்டுக் கொண்டு திரும்பும் போது நன்றாக விடிந்து விட்டது.

கூட்டு ரோடு கடைக்காரனிடம் சைக்கிளை ஒப்படைத்தான். அவசரம் அவசரமாய் இரயில்வே ஸ்டேஷனை அடையும்போது மணி ஏழைத் தாண்டிவிட்டது.


வெயிட்டிங் ரூமை நோக்கிப் படபடக்க நடந்தான். உடம்பு அடித்துப் போட்ட மாதிரி வலித்தது. தெப்பமாய் நனைந்திருந்த சட்டை, பேண்ட் லேசாக உலரத் தொடங்கியிருந்தது. தலை கலைந்து முகம் கறுத்துக் கிடந்தது.

அசல் காஞ்சீபுரம் பட்டு பளபளக்கும் இசைவாணியைப் பார்த்து ஆர்வமுடன் கையெடுத்துத் தொழுதான். ஜன்ம சாபல்யம் கிடைத்த சந்தோஷம் அவன் நாடி நரம்புகளில் 'ஜிவு ஜிவு' எனப் பரவி, அவனைத் திக்கு முக்காட வைத்தது. விழிகளில் பெருமிதம் கொப்புளித்தது.

ஆனால், அந்த இசைவாணி அவனை அலட்சியப்படுத்தினாள். பதில் வணக்கம் கூட சொல்லாமல், கோபமாய், கண்கள் நெருப்பைக் கக்க அவனை ஏற இறங்கப் பார்த்தாள்.

ஓர் அருவருப்பான குஷ்டரோகியைப் பார்க்கும் பார்வை அது!

அந்தப் பார்வையின் வேகத்தில், கணே



உங்கள் அபிமான நிறுவனமான "திருப்பதி எஸ்டேட்ஸ்"
பெருமையுடன் அறிமுகப்படுத்தும் புதுமனைப் பிரிவு

லக்ஷ்மி நகர்

காஞ்சிபுரத்திலிருந்து 2 கி.மீ. தூரத்திலும், காஞ்சிபுரம் இரயில் நிலையத்திற்கு அருகிலும், சென்னை-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையிலும், காஞ்சிபுரம்-அரக்கோணம் மாநில நெடுஞ்சாலையும் சந்திக்கும் இடத்தை ஒட்டியும் உள்ள வெள்ளை கேட் என்று கூறப்படும் இடத்தின் அருகில் அமைந்துள்ளது.

வரலாறு காணாத புரட்சி! சரித்திரம் கண்டிராத சாதனை!!

கான்கிரீட் காணிக்கற்கள்; கான்கிரீட் மனை இலக்கக் கற்கள் உபயோகப்படுத்தி மனைகளை என்றும் தேட அவசியம் இல்லாத வகையில் அமைக்கப்பட்ட மனைப்பிரிவு.

ஐந்து ஆண்டுகளுக்கு மனைகளை காத்திட உத்திரவாதம்!

எந்த அதிகப்படி செலவும் கிடையாது!

மனைப்பிரிவிற்கு ஒரு பொதுக் கிணறு!

இப்படி அனைத்து சிறப்பு அம்சங்களும் ஒருங்கே அமையப்பெற்ற இந்த லே-அவுட் அரசாங்க அங்கீகாரம் பெற்றது.

DTP. APPROVAL NO: CSAR DTCP (M) 87-271 LP. 201

பத்திரம் சுத்தமானது என்பதற்கு அத்தாட்சியாக அரசாங்க வழக்கறிஞரின் லீகல் ஒப்பீனியனும் பெற்றது.

உடனடியாக பத்திரம் பதிவு செய்பவர்களுக்கு தள்ளுபடி 5 சதவீதம்

சுலப தவணைமுறைத் திட்டமும் உண்டு

31-12-1987க்குள் மனை பதிவு செய்பவர்களுக்கு
எங்கள் அன்பளிப்பு: பிரஸ்டிஜ் பிரஷர் குக்கர்

மனைகளைப் பார்வையிடவும் மற்ற விபரங்களுக்கும் நேரில் அணுகவும்.

திருப்பதி எஸ்டேட்ஸ்

"லக்ஷ்மி நிலையம்"
30, ஆற்காடு முதலியார் தெரு,
(தெற்கு போக் ரோட் பக்கம்)
தியாகராய நகர், சென்னை-600 017
டெலிபோன் : 440741

கிளை அலுவலகம்:
18-B, ரயில்வே ரோடு,
ராஜா திரை அரங்கம் அருகில்
காஞ்சிபுரம்-631 501
டெலிபோன்: 2268

Imageads 2513



துணுக்கு எழுதுங்கள்

பரிசு ரூ. 400!

நமது ஆஸ்தான ஜோக்கர் தளபதி திடமதியின் அறிவுக் கொழுந்தான கருத்துக்கள் சில, வாசகர்கள் எழுதி அனுப்பி, இந்த இதழில் பிரசுரமாகியுள்ளன. இதே பாணியில், அரசியல்—சமுதாய நிகழ்ச்சிகள் அல்லது பிரச்னைகளைத் தொடர்பு படுத்திக் கீழே உள்ள கூப்பனில் எழுதி விலாசத்தைப் பூர்த்தி செய்து அனுப்புங்கள். பிரசுரமாகும் துணுக்குகள் ஒவ்வொன்றும் ரூ. 25 பரிசுபெறும். ஒருவரே எழுதிய வெவ்வேறு துணுக்குகள், அடுத்து வரும் பல இதழ்களில் பிரசுரமானால் ஒவ்வொரு முறையும் அவருடைய சன்மானம் இரட்டிப்பாகும். இவ்விதம் அதிகபட்சமாக ரூ. 400 வரை ஒரு துணுக்கு பரிசு பெற வாய்ப்புண்டு. உறையின் மேல் ''தளபதி திடமதி'' என்று மறவாமல் குறிப்பிடவும்.

கூப்பன்:

கல்கி இதழ்: 29.11.87 — முடிவு தேதி: 8.12.87.

தளபதி திடமதி:''..........................

....

....

....

....

....

என் பெயர்:..........................

விலாசம்:..........................

....

சன் ஒரு புழுவாய்த் துடித்தான். சிரமப்பட்டு மனத்தை அடக்கித் தாங்கிக் கொண்டான். தயங்கிய குரலில் பயபக்தியுடன் சொன்னான்.

''ஒங்களெ அழைச்சிட்டுப் போக வந்திருக்கேன். டாக்ஸி வெளிலே நிக்குது..''—அவளின் குரூரப் பார்வையால் அவன் தொண்டை வறண்டது போலிருந்தது.

இசைவாணி கேலியாகச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் கணேசன் கரைந்து போனான்.

''ஓ... அழைச்சிட்டுப் போக வந்த தொரை நீங்க தானா? ஏன் இப்பவே வந்தீங்க? கச்சேரி சாயங்காலம் தானே! அப்ப வந்திருந்தாப் போதுமே, நேரா இங்கிருந்து அப்படியே மேடைக்குப் போயிருக்கலாமே—ரெண்டுங்கெட்டானா இப்ப எதுக்கு ஓடி வரணும்?''— இசைவாணி குத்தலாகக் கேட்டாள்.

கணேசனுக்கு அவமானமாயிருந்தது. வெட்கப்பட்டு அவளை நேருக்குநேர் பார்க்கக் கூசினான்.

எச்சிலைக் கூட்டி விழுங்கித் தொண்டையை ஈரமாக்கி நடந்ததைச் சொல்ல வாய் திறந்தான்.

அதற்குள் இசைவாணி இடைமறித்து, உரத்த குரலில் கத்தினாள்.

''நான் என்ன ஒங்க வீட்டு வேலைக்காரியா, நெனெச்ச நேரத்துக்கு வந்து கூட்டிட்டுப் போக? இந்த சின்ன ஸ்டேஷனிலே ஒண்ணும் கெடைக்காமெ தவிப்பாங்களேங்கிற நெனைப்பாவது வேணுமா? என் அந்தஸ்தென்ன? கௌரவமென்ன? சே! இசைன்னு கிலோ என்ன வெலைன்னு கேக்கற, வெவஸ்தை கெட்ட ஜன்மங்க...''

இன்னும் அசிங்கமாய்த் திட்டினாள். பல பேர் முன்னால் இப்படி திட்டுகிறோமே என்ற எண்ணம் கொஞ்சம் கூட இருக்கவில்லை.

கணேசனுக்கு நெஞ்சில் 'சுரீர்' என்று வலித்தது. இசைவாணியின், வார்த்தைகள் விஷ அம்புகளாய்த் தாக்கிக் கடுகடுத்தன. அவனால் ஏதும் பேச முடியவில்லை. மனம் விம்மிக் கொண்டிருந்தது.

கண்கள் கொப்புளிக்க வெளியே வந்தான். டாக்ஸி டிரைவரை அழைத்து, ''டிரைவர், அவங்கெள ஏத்திட்டுப் போயி டிராவலர்ஸ் பங்களாவிலே விட்டுடுங்க... நான் பஸ்ஸிலே வந்திடறேன்...''

டாக்ஸி அவர்களை ஏற்றிக் கொண்டு பறந்தது.

கணேசன் கால்போன போக்கில் நடந்து பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தான். பஸ் ஒரு குலுக்கலுடன் புறப்பட்டது. காலையிலிருந்து அவன் பட்ட அவஸ்தைகளை நினைத்துப் பார்த்தான். இளம் மனைவியின் அணைப்பை உதாசீனப்படுத்தி, தூக்கம் கெட்டு, கொட்டற மழையிலே சைக்கிள் மிதிச்சு இதெல்லாம் அவனை பலவீனப்படுத்தவில்லை....

ஆனால், இசைவாணியின் நிஜமுகம் கண்டு அவன் மிகவும் சோர்ந்து போயிருந்தான். அவன் பூஜித்த முகம், பொய்முகம் என்பதை நிதர்சனமாய் உணர்ந்து மனசுக்குள் சொல்லிக் கொண்டான்...

''இன்று மாலை கச்சேரியை என்னால் ரசிக்க முடியாது. 'கல்யாணி'யும் 'தோடி'யும் சுவைக்காது...''



ஒரு கனவு நனவாகிறது!


ஒரு பைலட்.. அதுதான் அவன் எப்போதும் ஆக விரும்பியது. ஒரு குழந்தையாக இருந்தபோதே அவனது பேச்செல்லாம் அது பற்றிதான் இருக்கும். ஒரு நாளைக்கு இரு தடவை ஹார்லிக்ஸைக் குடித்துப் பெரியவனாக, வலுவுடன் வளர் என்று அவனுக்கு நான் சொன்னது நினைவிருக்கிறது.

இப்போது, அதெல்லாம் உண்மையாகவே நடந்துவிட்டது. ஒரு நாளைக்கு இரண்டு வேளை ஹார்லிக்ஸ் குடிக்கும் பழக்கத்தை அவனுக்கு நாங்கள் ஏற்படுத்தியது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். இத்தனை வருடங்களிலும் அவனுக்கு அது உறுதுணையாக இருந்து வந்துள்ளது.



வளரும் குழந்தைகளுக்கு நலமளிப்பது.

மால்டெட் பார்லி, முழு ஆடைப்பால் மற்றும் பொன்னிற கோதுமைகொண்ட ஹார்லிக்ஸ் ஒரு சுவையான, சத்தான பானம். ஊட்டச் சத்திற்கு மூலாதாரமாய் ஒரு லட்சிய பான மென்று கருதப்படுகிறது. எனவே கடந்த நூறு வருடங்களாக கோடிக்கணக்கான குடும்பங்கள் உலகமெங்கும் ஹார்லிக்ஸின் மேல் நம்பிக்கை வைத்து வருகிறார்கள் என்பதில் ஆச்சரியமில்லை.



சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்

நிற்க நிழல் வேண்டும்

வாஸந்தி

18

'சரக் சரக்'கென்று ஜன்னல் படுதாக்கள் நகர்த்தப்பட்டதும் சுரீரென்று வெயில் உள்ளே பாய்ந்தது.

பிரபு எரிச்சலுடன் கண்ணைத் திறந்து பார்த்தான்.

"எப்பத்தான் எழுந்திருப்பே? எழுந்திரு!" என்று லேசாக அதட்டினாள் அம்மா.

அலுவலகத்துக்குப் போகத் தயாராகியிருந்தாள்.

"எனக்கு நாழியாச்சு. டைனிங் டேபிள் மேல் எல்லாம் மூடி வைச்சிருக்கேன். சாப்பிட்டு எல்லாத்தையும் மறுபடி மூடி வெக்கணும். நினைவாக் குளிச்சு, கதவையெல்லாம் பூட்டி..."

"ஓகே. ஓகே!"

"வாசக் கதவைச் சாத்திக்கோ!"

அவன் முணுமுணுத்துக்கொண்டே எழுந்தான்.

கதவைச் சாத்தும்போது, "பெரிய 'போர்'மா நீ!" என்றான்.

"நீ அதுக்கு மேல!" என்றாள் அம்மா தெருவில் இறங்கியபடி.

தனக்குக் கிடைத்த புகழ்ச்சி போல் அவன் லேசாகப் புன்னகை செய்தபடி பல் துலக்கச் சென்றான்.

நேற்று இரவு அவன் வீட்டுக்கு வந்தபோது இரண்டு மணி. தினசரி பத்திரிகையில் வேலை செய்பவனின் தலையெழுத்து அது என்று அம்மாவும் அப்பாவும் தங்கையும் புரிந்து கொண்டு எத்தனையோ நாட்களாகி விட்டன. இருந்தாலும் காலையில், தான் ஆபீஸுக்குக் கிளம்பும் முன் அவன் எழுந்திருக்கா விட்டால் அம்மாவுக்குக் கோபம் வரும்.

அவன் சாதாரணமாக மறுபடி ஒரு தூக்கம் போடுவான். பிறகு நிதானமாகப் பதினொரு மணிக்கு ஆபீஸுக்குப் போவான். இன்று முடியாது. தில்லி அரசியல் உலகம் ரகசியப் பரபரப்பில் இருந்தது, நேற்றிலிருந்து. உடனடியாகக் கிளம்பினால் ஏதாவது சுவாரஸ்யமான விஷயங்களைச் சேகரிக்கலாம்.

அசோகா ஹோட்டல் ரிஸப்ஷனை அடைந்தபோது அவனுக்கு முன்னால் இரண்டு பத்திரிகையாளர்கள் காமிராவுடன் நின்றிருந்தார்கள். அவனைக் கண்டதும் "நோ சான்ஸ் 'யார்'!" என்று உதட்டைப் பிதுக்கினார்கள். "எக்ஸ்டர்னல் அஃபேர்ஸ் மினிஸ்ட்ரியின் அனுமதியில்லாமல் யாரும் யாரையும் பார்க்க முடியாது!"

"போனில் அவரோடு பேசலாமா?" என்றான் பிரபு ரிஸப்ஷனிஸ்டிடம்.

"நோ, ஸாரி."

"நான் அவருக்குத் தெரிந்தவன்."

"கூடப் பிறந்தவராக இருந்தாலும் அனுமதியில்லை."

அங்கு ஜீன்ஸில் ஒரு பெண் ரிப்போர்ட்டர் நின்றிருந்தாள். இந்தப் பாணியை அவளும் முயன்றிருக்க வேண்டும். அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

"பிரயோஜனமில்லை" என்றாள்.

"ஏய் பிரபு, நீ ஜாஃப்னா போயிருந்தியே, அப்பப் பார்த்திருப்பியே, இவங்களை!"

"பார்க்க முடியல்லே. தலைவர்களைப் பார்க்கறது கஷ்டம். மறைவிடத்திலே இருப்பான்கள். இடத்தை யாரும் சொல்ல மாட்டான்கள்."

"டூ லேட் 'யார்'! இவங்களைக் கடைசி நிமிஷத்திலே கூப்பிடறது!"

"அவங்க கோபத்திலே ஏதாவது தாறுமாறாச் சொல்லிடப் போறாங்களேன்னுதான் இத்தனை கட்டுப்பாடு!"

"இவன்கள் ஒப்புத்துப்பான்கள் என்று தோணல்லே!"

"மத்த க்ரூப்பெல்லாம் ஒப்புத்துக்கும் என்கிறார்களே?"

"ஒப்புத்துக்கல்லேன்னா ஹாப்லெஸ் கேஸ் 'யார்'?"

"ஏய், இவங்களுடைய பங்கைக் குறைச்சு மதிப்பிட முடியாது."

"அது சரிதான். ஆனால் எந்தப் பேச்சு வார்த்தையாவது நடத்த இவங்கள் ஒத்து

ழைச்சிருக்காங்களா? 'திம்பு டாக்ஸ்' என்ன ஆச்சு?"

"ப்ரெஸ் கிளப்பிலே பார்க்கலாம்!" என்றபடி பிரபு கிளம்பினான்.

மோட்டார் சைக்கிளைக் கிளப்பும்போது, ஏமாற்றமாக இருந்தது. ஹோட்டல் காம்பவுண்டை நிறைத்தபடி செக்யூரிட்டி கார்ட்ஸ் நின்றிருந்தார்கள். இதுமாதிரி ஒரு காவலை என்றும் கண்டதில்லை. மற்ற ரிப்போர்ட்டர்களின் பேச்சில் எல்லாம் உண்மையிருந்ததாகத் தோன்றிற்று.

அடுத்து என்ன செய்யலாம் என்று மூளை துரிதமாக யோசிக்கையில் பொன்னம்பலத்தின் நினைவு வந்தது. மறு சிந்தனை இல்லாமல் அவன் அவர் வீட்டை நோக்கிச் சென்றான்.

பொன்னம்பலம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். கொழும்பில் உயர் அரசாங்கப் பதவியிலிருந்தவர். ராஜினாமாச் செய்துவிட்டு இங்கு வந்துவிட்டார் குடும்பத்துடன். இங்கு அவர் பார்க்கும் வேலை என்ன என்று அவர் திட்டவட்டமாகச் சொல்லா விட்டாலும், அவன் ஒருவாறாக ஊகித்திருந்தான்.

அவர் வீட்டை அடைந்து அழைப்பு மணியை அமுக்கியதும் அவருடைய மனைவி கதவைத் திறந்தாள்.

"ஆ, நீங்களும் வந்துட்டீங்களா? அப்ப ஏதோ முக்கியமான விஷயம்தான்" என்றாள்.

"வேறு யார் வந்திருக்கிறது?" என்றான் அவன் திகைப்புடன்.

"யாருமில்லை. விடிய விடிய வேலை பார்த்துக் கொண்டிருந்தார் இவர். முக்கிய விஷயம் இல்லைன்னா இப்படி வேலை இருக்காது.

"எங்கே அவர்?"

"கூப்பிடறேன். இப்பத்தான் எழுந்தார்."

"வாருங்கோ!" என்றபடி பொன்னம்பலம் லேசான சிரிப்புடன் வந்தார்.

"மூக்கிலே வியர்த்ததா?"

"ரொம்ப. நான் சுற்றி வளைக்கப் போறதில்லே. நேரா சமாசாரத்துக்கு வருவோம். என்ன நடக்கிறது?"

"என்ன நடக்கிறது?" என்றார் பொன்னம்பலம் அப்பாவியாக.

"இதப் பாருங்க பொன்னம்பலம். உங்களை எனக்கு மூணு வருஷமாத் தெரியும். என்னிக்காவது நீங்க வெளியிலே விடக்கூடாதுன்னு சொன்ன விஷயங்களை வெளியிலே விட்டிருக்கேனா? மனசிலே ஓர் ஓரமா வெச்சுக்குவேன்! சமயம் வரும்போது வெளியிலே விடுவேன்!"

பொன்னம்பலம் சிரித்தார்.

"நீர் ஒரு அவசரக்குடுக்கை. உம்மை நம்பக் கூடாது!"

"அவசரப்பட்டு என்ன செஞ்சேன்?"

"யாழ்ப்பாணத்துக்கு அப்பப் போகாதீங்கன்னு சொன்னேன். கேட்டீங்களா? நீங்க உயிர் தப்பிச்சு வந்ததே உங்கப்பா அம்மா செஞ்ச புண்ணியம்!"

"என் பேப்பர் செஞ்ச புண்ணியம்!" என்று அவன் சிரித்தான். "என் கட்டுரைகளைப் படிச்சீங்களா?"

"படிச்சேன். நிலைமையைச் சரியாப் படம் பிடிச்சிருக்கீர்."

"தாங்க்யூ. இப்ப என்ன நடக்கிறது?"

அவர் மீண்டும் சிரித்தார். "இப்ப எங்கிருந்து வர்றீங்க?"

"அசோகா ஹோட்டல்!"

அவர் புன்னகை செய்தார்.





''தெரு முனையில் இருக்கிற கை பம்பில் தண்ணியடிச்சுட்டு வரச் சொல்லி என் கணவர்கிட்டே குடத்தைக் கொடுத்தது தப்பாப் போச்சு!''

''ஏண்டி?''

''குடத்தை வித்துட்டு அவர் 'தண்ணியடிச்சுட்டு' வந்துட்டார்!''

— மணியன் தர்மலிங்கம்.

''நினைச்சேன். யாரையாவது பார்த்தீங்களா?''

''சாம்ராட் ஹோட்டல்லே இருக்கிற மற்றவங்களைப் பார்த்தேன், நேத்து. அசோகா ஹோட்டல்லே இருக்கிறவங்களைத்தான் பார்க்க முடியல்லே!''

''இயலாது!''

''ஏன் இத்தனை டைட்?''

''உங்களைப் போல அவசரக் குடுக்கைகளாலே விபரீதம் வரும் எண்டுதான்!''

''அத்தனை செக்யூரிட்டி ஏன்?''

''அவங்க உயிருக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால் எடுக்கற முயற்சி வீணாப் போகும்.''

''அவங்களைச் சிறைப்படுத்தி வெச்சிருக்கிறதாச் சொல்றாங்க.''

''ஆ, பத்திரிகைக்காரங்க என்ன வேணா சொல்லட்டும்! முன்னெச்சரிக்கை எடுக்க வேண்டியது இந்தக் கட்டத்திலே ரொம்ப அவசியம்.''

அவன் சற்று நேரம் பேசாமல் இருந்தான். எந்த நிலையிலும் 'பொன்னம்பலம் நிதானமிழக்காதவர்' என்று இந்த மூன்று வருஷப் பழக்கத்தில் அவன் உணர்ந்திருக்கிறான். அவரிடம் இன்று லேசான பதற்றம் தெரிந்தது.

''எத்தனை முறை பேச்சு வார்த்தை தோல்வியிலே முடிஞ்சிருக்கு, இலங்கை அரசினாலேயும் போராளிகளினாலேயும்!'' என்றார் அவர் தொடர்ந்து.

''அதனாலேதான் அவங்களைக் கம்ப்ளீட்டா ஒதுக்கி வெச்சுட்டாங்க போலிருக்கு!''

''உம். இருக்கலாம்'' என்றார் அவர் பட்டுக் கொள்ளாமல். ''அவங்களுக்கு அளவுக்கு அதிகமாகவே முக்கியத்துவம் கொடுத்தாச்சு.''

''அவங்க செஞ்ச தியாகங்களையும் மறக்க முடியுமா, பொன்னம்பலம்?''

''முடியாதுதான்! ஆனால் தியாகம் செஞ்சது இப்ப அசோகா ஹோட்டல்லேயும் சாம்ராட் ஹோட்டல்லேயும் உட்கார்ந்திருக்கிறவங்க இல்லே! இவங்களுக்காக உத்வேகத்தோட உசிரைத் திருணமா நினைச்சுக் களத்திலே நுழைஞ்ச பொடியன்கள்தான் தியாகிகள்.''

பொன்னம்பலத்தின் மனைவி தேநீர் கொண்டு வந்து வைத்தாள்.

''இலங்கை அரசுக்கு இந்தியாவைக் கண்டு நிறையக் கவலையும் பயமும் உண்டு— சரித்திர காலப் பயம் அது. யாழ்ப்பாணத்தைத் தங்கள் வீரத்தினாலேதான் காப்பாத்தினதா போராளிகள் மார் தட்டிக்கிறாங்க. உண்மையிலே யாழ்ப்பாணத்தை நிர்மூலமாக்க இலங்கை விமானப் படைக்கு எத்தனை நேரம் செல்லும்? இந்தியா எப்படி அதை எடுத்துக் கொள்ளும் என்கிற பயம்தான் அப்படிச் செய்யாம விட்டதுக்குக் காரணம்!''

''அதெல்லாம் சரி. இப்ப என்ன நடக்கிறது?'' என்றான் அவன் மறுபடி.

''உடன்படிக்கை ஏற்படப் போகிறது எண்டு உமக்குத் தெரியாதா?''

''இப்ப திடீர்னு இது என்ன திருப்பம்?''

''ரொம்பக் காலமாப் பேச்சு வார்த்தை இருந்ததுதானே?''

''இருந்தாலும், இப்ப ஆச்சரியமாயிருக்கு. முன்னறிவிப்பு இல்லாத மாதிரி!''

''ஆச்சரியம்னு சொல்றதை விட ஏமாற்றம்னு சொல்லலாம். They feel betrayed.''

''யாரோடயாவது பேசினீங்களா?''

''இப்ப அதிகம் வலுவில்லாத க்ரூப்களோடு பேசினேன்.''

''இலங்கை அரசுக்கு எதிர்பார்த்த இடத்திலேர்ந்து ஆதரவு கிடைக்கல்லே'' என்றார் மெல்லிய குரலில். ''உள்நாட்டிலே வேற ஆபத்து. இந்தியாவுக்கு இணங்கக் கூடிய நிலையிலே இருக்கு. இந்தத் தருணத்தை நழுவ விடக் கூடாது.''

அவர் திடீரென்று சிரித்தார். ''உம்ம மனசு ஓரத்திலே எத்தனை இடம் இருக்கு?''

''நிறையவே இருக்கு!''

புன்னகை மாறாமல் அவர் சொன்னார். ''போராளிக் கும்பல்களிடம் ஒரு முக்கிய அரசியல் மிலிட்டரி ஒப்பந்தத்தைப் பற்றி முன்கூட்டியே எந்த நம்பிக்கையில் ஆலோசனை கேட்க முடியும்? சம்மதம் ஒன்றுதான் வாங்க முயற்சி செய்யணும்.''

விறைத்து உட்கார்ந்திருந்த பிரபு சட்டென்று அடங்கினான். மெல்ல நிதானமாய் ஒரு சிரிப்பு அவன் உதடுகளில் விரிந்தது.

''ரைட்டோ!'' என்று எழுந்தான். ''ஆனால் அது கஷ்டமான காரியமா இருக்கப் போறது. நிறைய டிரபிள் ஏற்படலாம்.''

''ஆ, அதை அடக்கிடலாம்'' என்றார், அவர் லேசாக. ''மக்கள் மறந்துடுவாங்க. அவங்களுக்கு வேண்டியது அமைதி.''

அவருடைய வீட்டிலிருந்து கிளம்பி தில்லி ஜனத்திரளில் கலக்கும்போது, அத்தனை லேசாக முடியக் கூடிய காரியமா அது என்று கேள்வி எழுந்தது. அவர் சொன்ன விஷயத்தால் பல விஷயங்கள் தெளிவாவது போல் தோன்றிற்று.

திடீரென்று அவனுக்கு ஜயசீலனின்

டைரக்டர்: "இந்தப்படத்திலேஒருபுதுமை பண்றேன். ஹீரோ திருப்பதியிலே போய் 'மொட்டை' அடிச்சுக்கிறார்!"

தயாரிப்பாளர்: "நிச்சயம் இது புதுமை தான்! ஏன்னு வழக்கமா ஒவ்வொரு படத்துக்கும் நான்தான் அங்கே போய் 'மொட்டை' அடிச்சுக்குவேன்!"

— வி. ஆண்டாள்.



நினைவு வந்தது. பாவம் அவளைப் போல் எத்தனை பேர் இருப்பார்கள்! அவர்களுக்காக அங்கு நிச்சயம் அமைதி ஏற்பட வேண்டும். தில்லிக்குத் திரும்பும்படி அவசரமாக அழைப்பு வந்து விட்டதால் அவளை மீண்டும் பார்க்க முடியாமல் உடனடியாகக் கிளம்ப வேண்டி வந்துவிட்டது. சீலியாவைப் பற்றி ஏதாவதும் தகவல் தெரிந்திருக்குமா? அவன் உயிரோடு இருப்பானா? அவனைப் பற்றி அவனுக்கு நாம் நம்பிக்கையூட்டிப் பேசியது அவ்வளவும் பொய்யாகிப் போனால்? — ஜயசீலன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தத் தெரிந்தவன் — சீலியாவின் மேல் இருக்கும் காதல் உணர்வைத் தவிர. அத்தனை ஆழமான அன்பு சாத்தியமா?

காப்பி ஹவுஸ் ஒன்று கண்ணில் பட்டது. அவன் வண்டியை நிறுத்தி உள்ளே நுழைந்து காப்பிக்குச் சொன்னான். பாண்ட் பாக்கெட்டிலிருந்த சின்ன நோட் புக்கில் பொன்னம்பலத்துடன் பேசியதைக் குறிப்பெடுக்கையில், "நீங்கள்தானே பிரபு என்கிறது?" என்கிற தமிழ் வார்த்தைகளைக் கேட்டுத் தூக்கி வாரிப் போட்டு நிமிர்ந்தான்.

எதிரில் வாட்டசாட்டமான ஓர் ஆள் நின்றிருந்தான். முகத்தில், உருவத்துக்குச் சம்பந்தமில்லாத குழந்தைச் சிரிப்பு.

"ஆமாம், நீங்க?"

"என் பெயர் யோகீச்வரன். உங்க போட்டோ பத்திரிகையிலே வந்ததாலே கண்டுபிடிச்சேன். சரியா எழுதியிருக்கிங்க."

"யாழ்ப்பாணமா?" என்றான் பிரபு குளிர்ந்து.

"இல்லே வவுனியா. யாழ்ப்பாணம் ஒண்ணுதான் பத்திரிகைக்காரங்களுக்கு முக்கியம்"— மறுபடி குழந்தைச் சிரிப்பு.

"நீங்க போராளியா?"

"ஆமாம்."

அவன் ஒரு கூட்டத்தின் பெயரைச் சொன்னான்.

"சமாதான உடன்படிக்கை வரப் போகுதாமே?" அப்ப நீங்கள்லாம் என்ன செய்யப் போறீங்க?"

"வந்தால் சந்தோஷம், ஒரு வகையிலே; சந்தேகம் இன்னொரு வகையிலே..."

"சந்தோஷம்?"

"ஒரு கும்பலுடைய ஏகாதிபத்தியம் குறையலாம்."

"சந்தேகம்?"

"எந்த அளவுக்கு அரசு செயல்படுத்தப் போறதுன்னு சந்தேகம் — ஜெயவர்த்தனவுக்குப் பிறகு என்ன நடக்கும்னு சந்தேகம்."

பிரபு பதில் ஏதும் சொல்லாமல் இன்னொரு காப்பிக்கு ஆர்டர் கொடுத்தான். இவன் ஒரு பயங்கரவாதக் கும்பலைச் சேர்ந்தவன் என்று நம்புவது கஷ்டமாக இருந்தது.

"உங்க கட்டுரையிலே ஜயசீலன்னு ஒரு யாழ்ப்பாணப் பொடியனைக் குறிக்கிறீங்க. அவனுக்குத் தேவநேசன்னு ஓர் அண்ணன் இருந்தானே?"

அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"ஆமாம். உனக்கு அவனைத் தெரியுமா?"

"ஆமாம்" என்று அவன் தலையாட்டினான். "எங்க கூட்டத்திலே இருந்தான். ஆர்மி சுட்டுப் போட்டது."

"ஜயசீலனும் உங்களோடு இருந்தானா?"

"இல்லே. இருந்திருந்தால் அவனுக்கு அந்தக் கஷ்டங்கள் ஏற்பட்டிருக்காது. அவன் இன்னும் உயிரோடு இருக்கான் என்கிறதே எனக்கு ஆச்சரியமாயிருக்கு."

"என்ன கஷ்டங்கள்? எதனாலே?"

"அவனுக்கும் தலைமைப் பீடத்திலே இருந்தவங்களுக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. இவன் தட்டிக் கேட்க ஆரம்பிச்சான். அவர்களுக்குப் பிடிக்கல்லே. ஓட ஓட விரட்டினார்கள். எப்படித் தப்பிச்சான் என்று புரியல்லே. பாவம், அவனுக்கு ஒரு சிநேகிதி. அவளையும் சும்மா விடல்லே."

பிரபு அதிர்ந்தான்.

"என்ன பண்ணாங்க அவளை?"

"கடத்திக்கிட்டுப் போயிட்டாங்க!"

"அவங்களா? ஆர்மி கடத்திக்கிட்டுப் போனதா இல்லே கேள்வி?"

"ஆ, அது வழக்கம்தான். போராளிங்க பண்ற தப்பெல்லாம் ஆர்மி பண்றதாத்தான் நாங்க பிரசாரத்துக்குச் சொல்லுவோம்."

"அட, ஜயசீலன் அதை நம்பறான் என்கிறேன்!"

"நம்பலாம். ஆனால் அது தவறு."

"என்ன பண்ணாங்க அவளை?"

"தெரியாது. என்ன வேணா நடந்திருக்கலாம்!"

(தொடரும்)



— நீலகிரி மாவட்டக் கலெக்டர் கே. எஸ். ஸ்ரீபதி பேட்டி!

“ஒன்றிரண்டு குறைகள் இல்லாமல் இல்லை..!”

கல்கி: ஊட்டியிலுள்ள மக்களைச் சந்திக்கும்போது, 'பழைய ஊட்டி காணாமல் போய் விட்டது. அந்த அளவுக்குக் காடுகள் அழிக்கப்பட்டுக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இனியாவது புதிய கட்டடங்கள் கட்டப்படுவது தடுக்கப்பட்டாக வேண்டும்...' என்கிறார்கள்.

நீலகிரி மாவட்டக் கலெக்டர் கே. எஸ். ஸ்ரீபதி: நம் நாடு வளர்ந்து வரும் நாடு. எனவே வளர்ச்சியைத் தடுக்க முடியாது; கூடாது. எனினும் இந்த வளர்ச்சியால் இயற்கையின் சமநிலை பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்களே இல்லை. அந்த வகையில்தான் ஊட்டி வளர்ந்து வருகிறது.

கல்கி: நீலகிரி மாவட்டத்திலுள்ள இன்னொரு பெரிய பிரச்னை, இலங்கை அகதிகள் மறுவாழ்வு. இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோரில் சுமார் ஐம்பது சதம் பேர் இங்குதான் வசிக்கிறார்கள். அவர்களுக்குச் சரியானபடி கடன் வசதி போன்றவை வழங்கப்படவில்லை என்று சொல்கிறார்கள்.

கலெக்டர்: தாயகம் திரும்பியோரில் யாருக்கெல்லாம் நீலகிரி மாவட்டத்தில் குடியேற அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கெல்லாம் சரியானபடி கடன் வசதிகள் வழங்கப்பட்டுத்தான் வருகின்றன. நீங்கள் சொல்வது, வேறு இடத்தில் குடியேற அனுமதி பெற்று, அதை விட்டுவிட்டு இங்கு வந்து குடியேறியிருப்பவர்களைப் பற்றியதாக இருக்குமென்று கருதுகிறேன்...

கல்கி: அப்படியில்லை. உதாரணத்திற்குக் கோத்தகிரி அருகிலுள்ள பாக்கிய நகரில் அயல்நாடுகளின் நிதியுதவியுடன் 'மக்கள் மறுவாழ்வு மன்றம்' என்ற அமைப்பு இருபத்தியொரு வீடுகளைக் கட்டியுள்ளது. அவை ஒவ்வொன்றும் பன்னிரண்டாயிரம் மதிப்புடையவை. அவற்றை இலங்கை அகதிகளுக்கு வழங்க அம்மன்றம் தயாராய் இருக்கிறது. ஆனால் அரசு அம்மக்களுக்கு வழங்க வேண்டிய உயர்ந்த பட்ச வீட்டுக் கடனை தலா ஆறாயிரம் ரூபாயைக் கடந்த இரண்டாண்டுகளாக வழங்காததால் தாமதமாகிறது. அதாவது பன்னிரண்டாயிரம் மதிப்புள்ள வீட்டை ஆறாயிரம் ரூபாய்க்கே அம்மன்றம் வழங்கத் தயாராய் இருந்தும் அரசின் ஒத்துழைப்பு இல்லை!

கலெக்டர்: எனக்கே இது புதிய விஷயமாகத்தான் இருக்கிறது. உடனடியாகக் கவனித்து ஆவன செய்கிறேன். என் கவனத்திற்குக் கொண்டு வந்த உங்களுக்கு நன்றி.

கல்கி: கன்னேரிமுக்கு என்ற இடத்தில் கடந்த 85 இல் இலங்கை அகதிகள் உள்பட மொத்தம் 69 பேருக்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது அங்கே நிலச்சரிவு ஏற்படும் அபாயம் உள்ளதால் கொடுத்த பட்டாவை வாபஸ் பெற எண்ணுகிறது அரசு. மாற்று இடம் தரப்பட வேண்டாமா?

கலெக்டர்: அவர்களுக்கெல்லாம் பக்கத்துக் கிராமங்களில் மாற்று இடம் தரத் தயாராய் இருக்கிறோம். அவர்கள்தான் அந்த இடமே வேண்டுமென்று பிடிவாதமாக இருக்கிறார்கள்.

கல்கி: கோத்தகிரி அருகில் இம்பட்டி என்னும் ஊர். அங்கு பெண்கள் சினிமாவுக்குப் போகக் கூடாது என்று ஊர்க் கட்டுப்

பாடு. மீறிப் போனால் 101 ரூபாய் அபராதம். இதே நிலைதான் ஓரசோலை, கேர்பட்டா, கொசாட்டி, மினிதேன், ஜக்கனாரை மேலட்டி என்னும் ஊர்களிலும். இது மனித உரிமைகளை மதிக்காத இழிநிலை அல்லவா?

கலெக்டர்: உண்மையில் எனக்கும் இது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. உடனடியாக விசாரித்து ஆவன செய்கிறேன்.

கல்கி: பிக்கட்டி டீ தொழிற்சாலை பற்றிக் கடந்த 70 — வாக்கிலேயே பேசப்பட்டது. தற்போது தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் அதற்காக ஒரு கோடி ரூபாய் நிதியுதவி செய்து ஆறு மாதங்களாகியும் இன்னும் டீ தொழிற்சாலை வந்தபாடில்லையே?

கலெக்டர்: ஆரம்பகாலத் தாமதங்களுக்குக் காரணம் உள்ளூரில் தொழிற்சாலைக்கான இடம் கொடுப்பதில் அந்த மக்களுக்குள்ளிருந்த கருத்து வேறுபாடுகள்தான். தற்போது திட்டம் தொழில் துறை இயக்குனரகத்தில் உள்ளது. விரைவில் உத்தரவு வந்துவிடும்.

கல்கி: குந்தா பகுதியில் முன்பு 7,500 ஏக்கர் தேயிலைத் தோட்டம் வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட்டு அதற்குக் கடன் வசதியளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் கடன் வழங்கியதெல்லாம் வங்கியில் டெபாசிட் வைத்திருப்பவர்களுக்குத்தான் என்கிறார்களே?

கலெக்டர்: அது முற்றிலும் பொய். கடன் வழங்கப்பட்ட நானூறு ஐந்நூறு பேரில் டெபாசிட் தாரர்களும் இருந்திருக்கலாம். ஒன்றிரண்டு தவறுகள் நடந்திருக்கலாம் என்பதையும் நான் மறுக்கவில்லை. எனினும் பாதிக்கப்பட்ட யாருக்கும் கடன் கேட்டு மறுக்கப்படவில்லை என்பதுதான் உண்மை.

கல்கி: மாயாரில் உள்ள அரசு சின்கோனாத் தோட்டத்தில் வேலை பார்க்கும் தொழிலாளர்களில் பலர் நிரந்தரமாக்கப் படாமலேயே இருக்கிறார்கள். மேலும் அவர்களுக்காகக் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கும் காலனியிலிருந்து அவர்கள் உப்பு வாங்க வேண்டுமானால் கூட சுமார் நான்கைந்து கி. மீ. தூரம் மலையேறி நடுவட்டம் வந்துதான் வாங்கிச் செல்ல வேண்டும். இதைப் போக்க அரசே அவர்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கிச் சென்று வழங்கலாமே?''

கலெக்டர்: கவனிக்கிறேன்.

கல்கி: சின்கோனாவில் தற்காலிக வேலையில் இருந்து சிறிது காலம் வேலை தராமல் நிறுத்தப்பட்டதால், ராமன் என்பவரின் மகன் சடையாண்டி (19 வயது) வேறு இடத்திற்கு வேலைக்குச் சென்ற போது, காட்டு யானையால் மிதிக்கப்பட்டுக் கடந்த 5.3.83 — ல் இறந்து போனான். அதுகுறித்து நஷ்டஈடு கோரிய போது, ஊட்டியிலுள்ள ஓர் அதிகாரி, ராமனை அவரது குடும்பத்தோடு ஊட்டிக்கு வரச் சொல்லியிருக்கிறார். ராமன் பஸ் செலவுக்காகப் பிச்சை எடுத்துப் பணம் சேர்த்து வந்து போயிருக்கிறார். அப்படியிருந்தும் தொழிலாளர் விபத்துச் சட்டப்படி 15.9.84 — க்குப் பிறகு இறந்திருந்தால்தான் நஷ்டஈடு தர இயலும் என்று கூறிவிட்டார்கள்ளாம். இது என்ன நியாயம்?

கலெக்டர்: தொழிலாளர் விபத்துச் சட்டம் எப்படியிருந்தாலும் அவருக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஆயிரம் ரூபாய் வழங்கலாம். இதுவரை இது என் கவனத்திற்கு வரவில்லை. உடனடியாக வழங்க ஆவன செய்கிறேன்.

கல்கி: ஜக்கனாரை. இங்கு கடந்த 35 ஆண்டுகளுக்கு முன்பு திட்டப்பட்ட Long Wood Forest Water Scheme இன்னமும் நிறைவேற்றப்படாமல் இருப்பதால் இவ்வூர் மக்கள் மூன்று மைல் தூரம் நடந்து சென்று குடிநீர் எடுத்து வரும் நிலை!

கலெக்டர்: விரைவில் நிறைவேற்றப்பட இருக்கிறது.

கல்கி: ஊட்டிக்கு அருகிலுள்ள பட்பயர் என்னும் கிராமத்தின் சாலை பல வருடங்களாகச் செப்பனிடப்படவில்லை என்று புகார். பட்பயரை ஒட்டியுள்ள பட்பயர் மேட்டுச் சேரிக்குச் செல்லும் பாதை இன்னமும் மண்பாதையாகவே இருப்பதால் மழைக் காலங்களில் வாகனங்கள் செல்ல இயலாத நிலை!

கலெக்டர்; பாதைகளைப் பொறுத்தவரை முன்னுரிமைப்படி ஒவ்வொன்றாகப் பழுது பார்க்கப்பட்டு வருகின்றன.

கல்கி: மேலும் அக்கிராமங்களுக்கான குடிநீரை ஓரளவுக்குத் தந்து கொண்டிருந்த சிறு கிணற்றை மூடிவிட்டு, அதன் அருகிலேயே ஒரு பெரிய கிணறு தோண்டினர். அதில் தண்ணீரே வராமல் போய்விட்டது என்கிறார்களே?

கலெக்டர்: அது சரியானதல்ல. வறட்சி காரணமாகத் தண்ணீர் மட்டம் குறைந்ததே தவிர, தண்ணீரே இல்லாத இடத்தில் கிணறு தோண்டப்படவில்லை.

கல்கி: அங்கே குடியிருப்பவர்களுக்கெல்லாம் அவரவருக்கே வீடுகள் சொந்தமாக்கித் தரப்படும் என்று சொல்லப்பட்டும் தரவில்லையாமே?

கலெக்டர்: அது தொழிலாளர்களுக்கான குடியிருப்பு. அதை எப்படிச் சொந்தமாக்க முடியும்? மேலும் அங்கு ஊட்டி நகராட்சி ஊழியர்கள் மட்டுமே குடியிருக்கவில்லை. ஹிந்துஸ்தான் போட்டோ தொழிற்சாலைத் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். எப்படிச் சொந்தமாக்க முடியும்?

கல்கி: உதகை நகராட்சியில் ஆரம்பப் பள்ளி ஆயாவாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற திருமதி மீனாட்சி என்னும் பெண்

* பேட்டியின் போது உடனிருந்த அலுவலர்களில் ஒரு பகுதியினர்.



மணிக்கு நகராட்சி எந்தவிதமான ஒய்வூதியமும் தரவில்லை என்று புகார்.

கலெக்டர்: விசாரித்து ஆவன செய்கிறேன்.

கல்கி: நடுவட்டத்தைச் சேர்ந்த சி. வேலாயுதம் என்பவர் கிராமக் கர்ணமாக இருந்திருக்கிறார். திடீரென்று தாசில்தாரும் கலெக்டரும் அவரை வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள்! அப்போது அவர் தாம் பணியாற்றிய எட்டு மாத கால ஊதியத்தைக் கேட்டுப் பல முறை விண்ணப்பித்ததன் விளைவாக, ஓராண்டுக்குப் பிறகு வழங்கியிருக்கிறார்கள். இதற்கு இரண்டரை ஆண்டுகளுக்குப் பின்னர், வழங்கிய தொகையைத் திரும்பப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இது குறித்து அவர் சென்னையிலுள்ள இலவசச் சட்ட உதவிக் கழகத்திற்கு எழுதிய போது, அவர்கள் கடந்த 27.3.87 அன்று உங்களுக்கு ஆவன செய்யும்படி பரிந்துரை செய்திருக்கிறார்கள். எனினும் இதுவரை நடவடிக்கை ஏதும் இல்லை!

கலெக்டர்: உடனடியாக விசாரித்து நடவடிக்கை எடுக்கிறேன்.

கல்கி: மசினக்குடியில் சுமார் 650 மாணவ, மாணவியர் பயிலும் நடுநிலைப் பள்ளியில் 350 பேருக்கே கட்டட வசதி உள்ளது. மேலும் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரையுள்ளவர்கள் உட்கார பெஞ்ச் வசதிகூட இல்லை!

கலெக்டர்: பொதுவாகவே இப்படிப்பட்ட பற்றாக்குறை இருப்பது உண்மைதான். அதற்காகப் பெற்றோர் — ஆசிரியர் கழகம் ஆங்காங்கே நிதி வசூலித்து முடிந்த வரை ஆவன செய்து கொண்டுதான் வருகிறது. நிதி வசதி இல்லாததுதான் காரணம்.

• கல்கி: மேல் குன்னூரில் உள்ள கூட்டுறவுப் பண்டக சாலையில் மாதம் ஒன்றுக்கு அரை கிலோ பாமாயில்தான் கொடுக்கிறார்களாம்.

கலெக்டர்: உங்களுக்குப் புகார் எழுதிய சமயம் தட்டுப்பாடு இருந்தது. இப்போது இல்லை.

கல்கி: ஊட்டியிலிருந்து பதினொரு கி.மீ. தொலைவில் உள்ள தாம்பட்டிச் சாலையும் மண் சாலையாகவே இருப்பதால் மழைக் காலத்தில் விவசாயப் பொருள்களை வாகனங்களில் ஏற்றிவர முடிவதில்லை என்கிறார்கள்...

கலெக்டர்: நான் முன்பே சொன்னபடி சாலைகளைப் பொறுத்தவரை முன்னுரிமைப்படி ஆவன செய்து கொண்டுதான் இருக்கிறோம்.

கல்கி: கேத்தி கிராமத்தைச் சேர்ந்த பழைய அருவங்காட்டிலுள்ள கூட்டுறவுப் பண்டக சாலையில் கார்டுதாரர்களுக்கு ரேஷனே கிடைப்பதில்லை. மேலதிகாரிகளுக்குப் புகார் செய்தால் சில நாட்களுக்குச் சரியாக இயங்குகிறது. பிறகு மறுபடியும் பழைய நிலையே நீடிக்கிறது என்கிறார்கள்...

கலெக்டர்: விசாரிக்கிறேன்.

கல்கி: குன்னூரிலிருந்து மூன்று கி. மீ. தூரத்திலுள்ள கரிமொரஹட்டிக்குச் சாலை வசதி இருந்தும் பஸ் வசதி இல்லை என்கிறார்கள்.

கலெக்டர்: பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் ஆவன செய்யப்படும்.

கல்கி: நீலகிரி மாவட்டத்திலுள்ள பலரும், அவர்கள் இதுவரை மாடு மேய்த்து வந்த இடங்களை இப்போது வனத்துறையினர் ஆக்கிரமித்து மரங்களை நட்டு வேலியிட்டு விட்டதால் மாடுகளை மேய்க்க முடியவில்லை என்று புகார் சொல்கிறார்களே?

கலெக்டர்: பலரும் என்று நீங்கள் சொல்வதைவிட நஞ்சநாட்டிலுள்ள திரு. ஜோகி என்பவரின் புகார் என்பது மிகச் சரியாக இருக்குமென்று நினைக்கிறேன். எப்படியிருந்தாலும் இப்போது வனத்துறையினர் நட்டுக் கொண்டு வரும் அந்த மரங்கள் நடப்படுவதன் நோக்கமே அவற்றின் காய்ந்த இலைகள் மாடுகளுக்கு மிகவும் நல்லது என்பதற்காகத்தான். அந்த மரங்களெல்லாம் வளர்ந்ததும் வேலிகள் அகற்றப்படும்; மாடுகள் அந்த இலைகளைச் சாப்பிட அனுமதிக்கப்படும். இது புரியாமல்தான் அவர்கள் புகார் செய்கிறார்கள்.

கல்கி: கோத்தகிரியிலுள்ள ஆர். ராமையா என்பவர் ஓர் இலங்கை அகதி. 77—ல் இந்தியாவுக்கு வந்தவர். வந்தவுடன் நீலகிரியிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தார். 11.11.83 — க்குள் உதகை அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர உத்தரவு வந்தது. அவர் பணியில் சேரச் சென்ற போது, அந்தக் கல்லூரி முதல்வருக்கு அவர் இலங்கையில் படித்த கனிஷ்ட பொதுத் தராதரப் பரீட்சை (G.C.E.) சான்றிதழ், நமது பள்ளியிறுதிச் சான்றிதழுக்குச் சமமானதுதானா என்று சந்தேகம். எனவே, அதுகுறித்துப் பள்ளிக் கல்வி இயக்குனருக்கு எழுதி விளக்கம் கேட்டார். அதற்கு அங்கிருந்து பதிலே வராததால் இதுவரை அவர் வேலையில் சேர முடியாத அவலம்!

கலெக்டர்: உடனடியாகக் கவனிக்கிறேன்.

கல்கி: பெந்தட்டி என்னுமிடத்திலுள்ள அனாதை இல்லச் சிறுவர்களுக்கு நாளொன்றுக்குத் தலா இரண்டு ரூபாய் விதம்தான் சாப்பாட்டுக்கு ஒதுக்கப்படுகிறதாம். இது எப்படி போதும்?

கலெக்டர்: அதனால்தான் நான்கு ரூபாய் ஒதுக்குமாறு அரசுக்கு எழுதியுள்ளோம்.

கல்கி: மேலும் அந்த அனாதைச் சிறுவர்களுக்குச் சமூக சேவை நிறுவனங்கள் வழங்கும் துணிமணி உதவிகள் சரியானபடி போய்ச் சேருவதில்லையோ என்று சந்தேகம்!

கலெக்டர்: கவனிக்கிறேன்.

கல்கி: ஊட்டிக்கான பார்சன் பள்ளத்தாக்குக் குடிநீர்த் திட்டம் கடந்த 69ல் ஆரம்பிக்கப்பட்டு ஐந்து கோடி செலவு செய்த நிலையில் அப்படியே கிடப்பதால் அதுவும் இன்னொரு வீராணம்தானோ என்று சந்தேகப்படுகிறார்கள்!

கலெக்டர்: மலைப் பகுதிகளாக இருப்பதால் சோதனையில் பல சிரமங்கள் உள்ளன. அதனால்தான் தாமதம்.

கல்கி: ஊட்டி ஏரியில் சாக்கடை நீர் கலப்பதால் பக்கத்தில் போனாலே மூக்கை பிடித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஏரியை அழகுபடுத்தும் திட்டம் என்னவானது?

கலெக்டர்: அழகுபடுத்தும் திட்டம் நடந்து கொண்டுதான் இருக்கிறது. சாக்கடை நாற்றம் போகப் பல ஆண்டுகள் ஆகும். காரணம் இத்தனை நாட்களாகப் படிந்த சாக்கடைப் படிகங்களை அத்தனை சுலபத்தில் அகற்றிவிட முடியாது.

கல்கி: நீலகிரி, மலைப்பிரதேசமாக இருப்பதால் இங்கு ஜீப்புகளுக்கு டாக்ஸி பர்மிட் வழங்க வேண்டும் என்கிறார்கள்.

கலெக்டர்: அதை அரசுதான் செய்ய முடியும்.

கல்கி: ஊட்டி அரசு கலைக் கல்லூரியிலுள்ள மாணவ, மாணவியர் பலர் ஒன்று சேர்ந்து யுனி-ஒய் (UNI-Y) என்ற அமைப்பைத் தோற்றுவித்துள்ளனர். அவர்கள் சமூகக் காரியங்களுக்காக உடல் உழைப்பைத் தரத் தயாராய் இருக்கிறார்கள். எனவே, உங்களிடம் வேலை கொடுக்கச் சிபாரிசு செய்யுமாறு கேட்டிருக்கிறார்கள்!

கலெக்டர்: அவர்களின் உழைப்பைப் பயன்படுத்திக் கொள்ளத் தயாராய் இருக்கிறோம்.

கல்கி: ஆனால் ஒன்று. அவர்களிடம் இலவசமாக உழைப்பைப் பெற்றுக் கொண்டு, அதற்காகச் செலவு செய்ததாக யாரும் கணக்கெழுதாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கலெக்டர்: (சிரிக்கிறார்) அப்படி யாரும் செய்ய முடியாது!

கல்கி: ஊட்டி நகரிலுள்ள கட்டணக் கழிப்பிடங்களில் ஏராளமாக வசூல் செய்கிறார்கள். காண்ட்ராக்டர்களை ஏன் கட்டுப்படுத்தக் கூடாது?



"அந்த ஒரு தெருவில் மட்டும் போய்ப் பிச்சை கேட்கமாட்டேங்கறியே, ஏன்?"

"நான் எடுத்த படத்தில் நடிச்ச நடிகை அந்தத் தெருவில்தான் இருக்கா!"

—'கல்பாக்கம் ராஜு'.

கலெக்டர்: தற்போது காண்ட்ராக்டர்களிடம் விடாமல் நகராட்சியே நிர்வகிக்க ஆலோசித்து வருகிறது.

கல்கி: நகராட்சியினர் வீட்டு வரி விதிக்கும் சமயம் லஞ்சம் குறுக்கிடுகிறது. அதுவும் ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற் சாலையில் பணிபுரிபவர்களாக இருந்தால் லஞ்சத்தின் அளவு கூட ஏராளமாகி விடுகிறது என்று புகார்.

கலெக்டர்: இப்படி பொதுப்படையாகச் சொன்னால் எப்படி? குறிப்பிட்டுக் காட்டுங்கள். உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன்.

கல்கி: காடுகள் மிகுந்த ஊட்டியிலுள்ளவர்களுக்கே விறகுப் பஞ்சம். இதிலிருந்தே பொது மக்கள் யாரும் காடுகளை அழிப்பதில்லை என்பதும், பாதுகாக்க வேண்டிய அதிகாரிகளுக்குத் தெரிந்தேதான் காடுகள் அழிக்கப்படுகின்றனவென்றும் புரியவில்லையா என்கிறார்கள் பொது மக்கள்!

கலெக்டர்: கூட்டுறவுத்துறை மூலமாக விறகு வழங்கப்படுவதில் சில நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். எனினும் அதிகாரிகளுக்குத் தெரிந்தேதான் காடுகள் அழிக்கப்படுகின்றன என்பதை நான் ஒருபோதும் ஒப்புக் கொள்ள மாட்டேன்.

கல்கி: எப்படியோ காடுகள் அழிந்து வருகின்றன என்பது உண்மைதானே?

கலெக்டர்: அதற்குப் பொது மக்களின் பூரண ஒத்துழைப்புக் கிடைக்காத வரை அரசு மட்டுமே ஏதும் செய்துவிட முடியாது.

கல்கி: சாதாரணமாக நீலகிரி மாவட்ட மக்கள் அனைவருமே நமது அரசால் புறக்கணிக்கப்படுவதாகத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்!

கலெக்டர்: ஒருபோதும் கிடையாது. அது மிகவும் தவறான எண்ணம். அப்படி யாரும் நினைக்க வேண்டிய அவசியமே இல்லை.

கல்கி: மிக்க நன்றி.

கலெக்டர்: ஒன்றிரண்டு குறைகள் இல்லாமல் இல்லை. அதைச் சுட்டிக் காட்டிய உங்களுக்கு எங்கள் நன்றி. வணக்கம்.

ஜன்னல்

எஸ்.குமார்

தியாகு கண்ணைக் கசக்கிக் கொண்டே ஜன்னல் கதவைத் திறந்தான். இடுக்கில் பையன் முடக்கி விட்டுப் போன காலை தினசரி. கையை நீட்டி எடுத்துக் கொண்டான். புரட்டும் முன் எதேச்சையாக வெளியே பார்த்தான்.

எதிர் வீட்டு வாசலில் ரம்யா கோலங்களுக்காகக் கம்போஸ் செய்து கொண்டிருந்தாள். ரம்யா அதில் அக்கறையானவள். சிறுவர்களாக அவர்கள் பள்ளிக்கூடத்துக்குப் பறந்த நாளிலும் அவள் கோலங்களுக்காக இடும் அச்சுப் புள்ளிகள் மிகவும் அழகாக இருக்கும்.

முன்னால் விழுந்து தொல்லை கொடுத்த பின்னலைப் பின்புறம் தள்ளி விட்டாள். குனிந்த வாக்கில் அவளின் பின்னழகு அவனை அலைக்கழித்தது.

'ச்சீ..... எச்சை!'

'பரவாயில்லை, கர்க்காக் கடி கடிச்சிக் கொடுடி' — மனசில் சின்ன வயசு ரம்யாவின் 'காக்கா கடி' சந்தோஷமாக வலித்தது!

காலம் ரம்யாவைச் செதுக்கியிருக்கிறது. மெலிந்திருக்கிறாள். வளர்ந்திருக்கிறாள் கண்களில் புதிய வெட்கம்.

'ரமி, ஏண்டி என் கிட்ட பேச மாட்டேன்றே?'

'போடா, எனக்கு வெட்கமாயிருக்கு. உன் கிட்டேயெல்லாம் பேசக் கூடாதுன்னு அம்மா சொல்லியிருக்கா!'

க்ளாஸ்மேட் சுப்ரமணிதான் அதைப் பற்றி விவரமாகச் சொன்னான்.

'ச்சே' என்றான்.

மனசுக்குள் ரம்யாவிடம் கை கோத்துக் கொண்டான்.



அதன் பிறகு அவளைச் சந்தித்ததும் பேசியதும் கொஞ்சம்.

அப்பாவிற்கு வேலை மாற்றம். தியாகுவின் குடும்பம் வேற்றூருக்குப் போக நேர்ந்தது.

அவன் கல்லூரிப் படிப்பை முடித்து, எம்ப்ளாய்மெண்ட் நியூஸைப் பார்த்துக் கொண்டிருந்தபோது — அப்பா ரிடையரானார்.

'இனிமே சிடியிலே நம்மால வாடகைக்கு இருக்க முடியாது. கிராமத்துக்குப் போக வேண்டியதுதான்!' என்றார் அப்பா.

அவர் அப்படிச் சொன்னதும் —

கிராமத்தின் மூன்று கண் வாராவதி, ரயில்வே ஸ்டேஷன், ஆலமரம், மதகடி, ரெட்டை மண்டை வாத்தியாரையெல்லாம் முந்திக் கொண்டு ரம்யாவின் நினைவு வந்தது.

போன வருஷம் கூட மெட்ராஸ் வந்திருந்த அவள் அப்பா அவளுக்கு இன்னும் கல்யாணமாகவில்லை என்று அங்கலாய்த்துக் கொண்டது நினைவுக்கு வந்தது.

இந்த வருஷம் கூடி வந்திருந்தால்.....

அழைப்பிதழ் அனுப்பியிருக்க மாட்டாரா?

கிராமத்தில் நுழைந்து வீட்டை ஆக்கிரமித்ததும் அவன் தெரிந்து கொண்ட முதல் விஷயம், ரம்யாவுக்கு இன்னும் கல்யாணமாகவில்லை.

நாகதோஷம்! மாப்பிள்ளைக்கும் இருக்க வேண்டுமாம்.

அவனுக்கு அதில் நம்பிக்கையில்லை. ரம்யாவிடம் சொல்ல வேண்டும்.

தியாகு வாசலில் நின்றான்.

எதிர் வீட்டு ஜன்னல் திறந்திருந்தது.

ஜன்னலோரமாய் உட்கார்ந்திருந்த ரம்யா வீதியை வெறித்துக் கொண்டிருந்தாள். கையில் புத்தகம் இருந்தது. கண்களும் மனசும் அதில் இல்லை.

ரம்யா அழகானவள். அங்கம் அங்கமாக வர்ணிப்பதில் அவள் அழகின் முழுமை பிடிபடாமல் போகும். அது கண்களுக்கும் மனசுக்கும் மட்டுமே எட்டுகின்ற அனுபவம்.

தியாகு அனுபவித்தான்.

தற்செயலாய் அவள் தியாகுவைப் பார்த்தாள். கண்கள் பின் வாங்கின. புத்தகத்தில் ஆழ்ந்தாள்.

மீண்டும் நிமிர்வாள், கனவாய்ப் பார்ப்பாளென்று —

தியாகு காத்திருந்தான்.

குருக்கள் தோட்டத்தில், அவன் காலை பூஜைக்காக பாரிஜாதம் எடுக்கப் போனான்.

எதிரே, ரம்யா வந்து கொண்டிருந்தாள்.

கொஞ்சம் சங்கடப்பட்டு அவனைக் கடந்தாள்.

"ரம்யா!"

நின்றாள்; திரும்பினாள்.

காலைக் குளியல் கூந்தலை ஈரப்படுத்தியிருந்தது. ஜாக்கெட் விளிம்பில் ஈரம் தங்கியிருந்தது. மெல்லிய நூல் புடைவை அடக்க மாட்டாத பெருமையில் காற்றுடன் பேசியது.

"நான் தியாகு வந்திருக்கேன், ரம்யா"

"சந்தோஷம்!"

உச்சரித்த விதத்தில் ஒன்றும் சந்தோஷமில்லை.

'ரம்யா, ஐ லவ் யூ' — சொல்ல முடியவில்லை. உதடுகள் உலர்ந்து போயின.

"வரேன்"

மறுநாள் —


பாரிஜாதத்துக்காக அவன் காத்திருந்தான்.

அவள் அப்பா வந்தார்

இந்த ஒரு வாரத்தில் அவன் ரம்யாவை அடிக்கடி பார்த்தது அவள் வீட்டு ஜன்னலில்தான்!

இப்பொழுதும், புத்தகத்துடன் உட்கார்ந்திருந்தாள்.

அவனும் ஜன்னலருகே உட்கார்ந்து, ரேடியோவைத் திருகினான்; கேட்டான்; அணைத்தான்.



ரம்யா இன்னமும் ஜன்னலிருந்தாள். நிமிர வில்லை; பார்க்கவில்லை.

இந்த வெட்கமெல்லாம் இன்னும் எத்தனை நாள்!

'ரம்யா, ஐ லவ் யூ' என்று நேரில் சொன்னதும் நீ என்ன செய்வாய்? கதிருக்கு மலரும் தாமரையாய் முகம் கொள்ளாமல் ஒரு சந்தோஷம் பூக்கும். முகத்தைப் புதைத்துக் கொள்வாய். என் மார்பில் இடமிருக்கிறது. மிருதுவான உன் கூந்தல் என் விரல் ஸ்பரிசத்தில் வலிக்கிறதென்று சிணுங்கும். உன் சலனமற்ற பெரிய கண்கள் கூட்டை விட்ட குருவியாய்ச் சிறகடிக்கும்.

நினைவாய் மீண்டும் பார்த்தபோது —
அவள் ஜன்னலில் இல்லை.

ஒரு வாரமாய் நெஞ்சில் அந்தத் தணல்.

இமைகள் சரியாய்ப் பொருந்தவில்லை. எப்பொழுதோ சற்று கண்ணயர்ந்த போது கண்களின் மேல் கனவுகள் உட்கார்ந்தன.

இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். அவன் சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தான்.

மாலை. கோபுர வாயிலைத் தாண்டி நடந்தான். மூலவரை வணங்கிவிட்டுப் பிராகாரம் சுற்றினான்.

துர்க்கைக்கு முன்னால் எலுமிச்சை மூடியில் விளக்கு எரிந்தது.

ரம்யா கண்களை மூடி தியானித்துக் கொண்டிருந்தாள்.

தியானத்தைக் கலைக்காமல் காத்திருந்தான். அவள் புறப்பட்ட போது இணையாக நடந்தான்.

"ரம்யா"

"ம்"

"கோவிலுக்கு வந்தியா?"

"இதென்ன கேள்வி?"

சோழிகளைக் கொட்டிய மாதிரி சிரித்தாள். கோவிலுக்கு வெளியே வந்தார்கள்.

"ரம்யா, உனக்கு நாகதோஷமா?"

"ம்"

"எனக்கு இந்த தோஷத்தில எல்லாம் நம்பிக்கை இல்லே"

"............"

"ரம்யா, நான் உன்னைக் காதலிக்கிறேன்"

"ஆனால், நான் உங்களைக் காதலிக்கலே!"

"ரம்யா... யோசிச்சி சொல்லு. நாகதோஷ மாப்பிள்ளைக்காக நீ காத்திருக்க வேண்டாம். தினமும் ஜன்னல்ல நின்னு ஏங்க வேண்டாம்"

"தியாகு, நான் ஜன்னல்ல காத்திருக்கிறது யாரையும் பாக்கிறதுக்கோ தேடறதுக்கோ இல்லே. ஆண்களுக்கு எவ்வளவு என்டர்டெய்மெண்ட்ஸ்! நினைச்ச போது வீட்டை விட்டு வெளியே போகலாம்; சினிமா பார்க்கலாம்; ஊர் சுத்தலாம்; சந்தோஷமாக இருக்கலாம். ஆனால், பெண்களுக்கு.... வீடே ஒரு சிறை. அதனாலதான் நான் ஜன்னல் வழியே வெறிச்சுக்கிட்டிருக்கேன். வெளி உலகத்தோட இயக்கத்தைப் பாக்கறது மனசுக்குச் சந்தோஷமா இருக்கு. மத்தபடி அதுக்கு வேறெந்த காரணமுமில்லே"

மறுநாளும், ஜன்னலருகே ரம்யா இருந்தாள். ஆனால், தியாகுவின் ஜன்னல் மூடிக் கிடந்தது!

அடுத்த இதழ்...

* அமெரிக்காவில் அழகன் முருகன் — கார்த்திகைத் திருநாள் சிறப்புக் கட்டுரை

* குழாய் வழியே குடல் தெரிகிறது! — மெடிகல் ரிப்போர்ட்



வேரில்லாத மரங்கள்

7

பஸ் ஸ்டாண்டில் நின்றிருந்த வசந்தாவுக்கு மிக சமீபத்தில் சரக்கென்று வந்து நின்றது அந்த ஆட்டோ.

"ஆட்டோ வேணாம்பா..." என்று இயந்திரத்தனமாய் பதில் சொல்லி, மறுபடி தெருவில் பார்வையை அவள் அலைய விட்டபோது, வேண்டாம் என்று சொல்லியும்கூட நகராமல் நின்றிருந்த ஆட்டோவிலிருந்து டிரைவர் இறங்கி வசந்தாவை நோக்கி வந்தான்.

"நீங்க மாதவனோட....?"

தன்னையும் மாதவனையும் அறிந்து வைத்திருக்கும் இந்த நபர் யார் என்ற கேள்விக் குறியோடு வசந்தா திரும்பினாள்.

"என் பேர் மாணிக்கம். நான் மாதவனோட சினேகிதன்... அன்னிக்கு பஸ் ஸ்டிரைக் இருந்தப்ப, உங்களையும் அவனையும் ஆபீஸ்ல இறக்கி விட்டேனே நினைப்பிருக்கா?"

"ம்....."

"உங்களப்பத்தி மாதவன் சொல்லியிருக்கான்... உங்க ரெண்டு பேருக்கும் நடுவுல.... அ..... அதுகூட தெரியும்!"

வசந்தா வெட்கத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள்.

"ஆபீஸுக்குத்தானே போறீங்க? வர்றீங்களா, எறக்கி விட்டுடறேன்... இன்னிக்கு நீங்க லேட் போலிருக்கே, மணி ஒம்பதரைக்கு மேல ஆயிடுச்சு!"

"இல்லே... நான் வரலே... நீங்க போங்க..." என்று சமாளிக்கப் பார்த்தவள், திடுமென நினைத்துக் கொண்ட மாதிரி, "வந்து.... உங்களுக்கு மாதவனோட ரூம் எங்கிருக்குனு தெரியுமா? என்னைக் கொஞ்சம் அங்க கொண்டுபோய் விட முடியுமா?" என்று கேட்க, மாணிக்கம் சற்றே திகைப்போடு பார்த்தான்.

"ரூமுக்கா? நீங்களா? எதுக்கு அங்க போகணும்?"

"வந்து...... வந்து....."

"இல்லே தப்பா எடுத்துக்காதீங்கம்மா.... அது ஆம்பிளைங்க மட்டும் இருக்கற லாட்ஜ்.. அங்க உங்களை மாதிரி டீசென்ட்டான லேடீஸ் சாதாரணமா வரமாட்டாங்க.... அதான்... நான் சொல்றது புரியும்னு நினைக்கறேன்..."

அவன் முடிப்பதற்குள், அண்ணா சாலை போகும் பஸ் ஒன்று வேகமாக வந்து சடன் பிரேக் போட்டு நின்றது. காத்திருந்த நபரில் சிலர் முண்டியடித்துக் கொண்டு அதற்குள் திணித்துக் கொண்டதும் அதே அவசரத்துடன் கிளம்பிப் போயிற்று.

"இது உங்க ஆபீஸ் வழியாப் போற பஸ்தானே? ஏன் விட்டுட்டீங்க? மாதவன் கூட லாட்ஜ்ல இருக்க மாட்டானே! ஆபீஸுக்குப் போயிருப்பான்..."

"இல்லே போகலே.... நான் காலேல எட்டு மணிலேந்து இங்கதான் நிக்கறேன்... அவரு நேத்தும் ஆபீஸுக்குப் போகலே. இன்னிக்கும் ஏன் இத்தன நேரம் வரை வரலேனு தெரியலே... அதான் ரூமுக்குப் போய்ப் பார்த்தா...."

மாணிக்கம் ஒரு நிமிஷம் நிதானித்துவிட்டு, பின் சங்கடத்துடன் "வாங்க...." என்றான்.

ஆட்டோவில் ஏறி உட்கார்ந்து இரண்டு நிமிஷங்களுக்குள் லாட்ஜ் வந்து விட்டது.

மாணிக்கத்தைத் தொடர்ந்து மாடிப்படியில் ஏறினவள், ஒரு சில அறைகளிலிருந்து எட்டிப் பார்த்த தலைகளைக் கண்டு பார்வையைத் தழைத்துக் கொண்டாள்.

மாதவனின் அறை திறந்தே இருந்தது.

கட்டிலில் ஓரமாக முத்துவேல் உட்கார்ந்திருக்க, வெறும் லுங்கியோடு குப்புறப்படுத்திருந்த மாதவன் இவர்களைக் கண்டதும் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான்.

"வ.... வசந்தாவா! நீ இங்க.... எப்படி! மாணிக்கம் அழைச்சிட்டு வந்தானு? வா..... வா.... உள்ள வந்துரு.... வா மாணிக்கம்.."

கீழே கிடந்த பெட்டியையும், பேண்ட் சட்டைகளையும் பரபரப்பாக நகர்த்தி ஓரமாகத் தள்ளினான். மேஜை முன் இருந்த நாற்காலியை இழுத்துப் போட்டு, கட்டியிருந்த லுங்கி முனையில் துடைத்து விட்டான்.

"உக்காரு வசந்தா.... மாணிக்கம் நீயும் உக்காரு...."

வசந்தா நாற்காலியில் உட்கார, முத்துவேலும் மாணிக்கமும் மாதவனும் கட்டிலில் நெருக்கிக் கொண்டு உட்கார்ந்தார்கள்.

சனி, ஞாயிறு லீவில் காஞ்சிபுரத்துக்குப் போய், பெற்றவர்களைப் பார்த்து விஷயத்தைச் சொல்லிவிட்டு வருகிறேன் என்று போனவன், திங்கள் அன்றும் வராமல் இன்று செவ்வாய்க் கிழமையும் வராமல் இருக்க, இரவிலிருந்து உட்கார முடியாமல், கவனத்தை வேறு எதிலும் செலுத்த முடியா

மல் வசந்தாவுக்குப் பதற்றமாகவே இருந்தது. அந்தப் பதற்றத்திலேயே, யார் என்ன நினைத்தாலும் பரவாயில்லை என்று லாட்ஜ் ரூமுக்கே போய்ப் பார்த்துவிடத் தீர்மானித்து வந்தவளுக்கு மாதவனைப் பார்த்ததும் ஏமாற்றமாக இருந்தது.

ஒருவேளை உடம்பு கிடம்பு சரியில்லையோ என்று இதுவரை இருந்த பயம் விட்டுப் போய், வெறுமே முத்துவேலுடன் பேசிக் கொண்டு படுத்திருப்பவனைப் பார்த்தபோது சன்னமாய் எரிச்சல்கூட மண்டியது.

மாணிக்கம் முதலில் மௌனத்தைக் கலைத்தான்.

"இவங்க பஸ் ஸ்டாண்டில நின்னுகிட்டிருந்தாங்க.... நாந்தான் அழைச்சிட்டு வந்தேன்.... என்னப்பா, ரெண்டு நாளா ஆபீஸுக்குப் போகலையாமே? என்ன சே....

அவன் முடிப்பதற்குள் காத்திருக்க முடியாத அவசரத்துடன் வசந்தா குறுக்கிட்டாள்.

"நல்லவேளை இவரு வந்தாரு... இல்லேன்னு உங்கள நான் எங்கேன்னு தேடறது? லாட்ஜுல இருக்கீங்கன்னு தெரியுமேஒழிய, நம்பர், கிம்பர் எதுவும் தெரியாது... ஞாயிற்றுக்கிழமையே வந்துடுவேன்னு சொல்லிப் போனவர்கிட்டேயிருந்து எந்தச் சேதியும் இல்லையேன்னு பதறிட்டேன்... ஊர்லேருந்து எப்ப வந்தீங்க மாது?"

மாதவன் சங்கடத்துடன் குரலைத் தழைத்துப் பேசினான்.

"சண்டேயே வந்திட்டேன்.... வசந்தா"

"அப்ப ஏன் ஆபீஸுக்குப் போகலே? எனக்குப் போன் பண்ணக்கூட இல்லியே?"

"அது..... வந்து....."

வசந்தா 'ப்ச்' என்று சலித்துக் கொண்டாள்.

"சொல்லுங்க மாதவன்.... ரெண்டு நாளா உங்களைக் காணோமேனு தவியா தவிச்சுக்கிட்டு வந்திருக்கிறது புரியாம, சரியாப் பேசக் கூட மாட்டேன்னு எப்படி?"

"நம்ம விஷயத்தைப் பத்தி எங்க வீட்ல சொன்னேன். அவங்க..."

"சொல்லிட்டீங்களா? அப்பாடா! எங்க ஒண்ணுமே சொல்லாம வந்திடுவீங்களோனு பயந்திட்டேன்! என்ன சொன்னாங்க உங்கம்மா?"

"ம்? சொன்னாங்க... கம்மாக்கிடடா போக்கத்தவனேன்னு!"

"அப்ப.... அவங்க சம்மதிக்கலையா நம்ம கல்யாணத்துக்கு?"

மாதவன் விரக்தியாய்ச் சிரித்தான்.

"எப்படியாவது பேசி ஜெயிச்சிடலாம்னு தான் போனேன். ஆனா, இந்த மாதிரி ஒரு பொண்ணுகூட பழக்கம்னு நான் ஆரம்பிச்ச உடனேயே அம்மா காதப் பொத்திக்கிட்டாங்க. 'போதும்ப்பா, காதல் கீதல்னு எதையாவது சொல்லி எங்களைப் புண்படுத்திடாதே. இருக்கற ஒரே புள்ளையத் தனியா விட்டுட்டு இருக்கறமேனு ஏற்கெனவே எங்களுக்கு வருத்தமா இருக்கு.... இதுல இந்தக் கண்றாவி வேற வேணும். மெட்ராஸுக்குப் போய் முதல் காரியமா அப்பாவுக்குத் தெரிஞ்ச பெரிய மனுஷரைப் பார்த்து மாத்தலுக்கு ஏற்பாடு செய்யற வழியப் பாரு.... அப்படி மாத்தல் கிடைக்கலேன்னு வேலையவே விட்டுட்டு வந்திடு.... இங்க கால்மேல





(எழுத்தாளர் பத்திரிக்கை ஆசிரியருக்கு எழுதிய கடிதம்)

''நான் அனுப்பிய ஜோக்கைத் திருப்பி அனுப்பி உள்ளீர்கள். இதே ஜோக்கைத் தாங்கள், இரண்டு மாதம் முன்பு, உ.ராஜாஜி எழுதி வெளியிட்டிருக்கிறீர்கள். அப்படியானால், எனக்கொரு நியாயம், உ. ராஜாஜிக்கு ஒரு நியாயமா?''

— ஆர். வசந்தகுமார்.

கால் போட்டு உக்காந்துக்கிட்டு விவசாயத்தக் கவனி... உன்னைப் பிரிஞ்சு எங்களால இருக்க முடியல'னு பெரிசா அழ ஆரம்பிச்சிட்டாங்க.... அப்புறம்தான் மேக்கொண்டு எதையும் பேச மனசில்லாம வந்திட்டேன்... இதப்போயி உன்னண்ட......''

வசந்தா கோபத்துடன் எழுந்து நின்றாள்.

''எப்பிடிச் சொல்றதுன்னு என்ன அர்த்தம்? யோசிச்சிக்கிட்டே படுத்திட்டிருந்தீங்கன்னு மட்டும் பிரச்னை தீர்ந்துடுமா?''

''இல்லே வசந்தா..... வந்து... உங்கிட்ட நம்பிக்கையோட......''

நண்பர்கள் கூட இருப்பதை மறந்து வசந்தா படபடத்தாள்.

''ஆ....மா! பெரிய்ய நம்பிக்கை! நம்ம பழக ஆரம்பிச்ச நாள்லேருந்தே எனக்கு நம்பிக்கை கிடையாது, எல்லாம் சுமுகமா முடியும்னு! எதிர்பார்த்ததுதானே! நாங்கூடத்தான் எங்க அத்தம்மாகிட்ட விஷயத்தச் சொல்லிட்டு, அவங்க புலம்பலை வாங்கிக் கட்டிக்கிட்டிருக்கேன்! எங்க வீட்டுல மட்டும், 'அடியே ராஜாத்தி, மகராசியாப் போயிட்டு வா'னு ஆசீர்வாதம் பண்ணிட்டாங்களா, என்ன!''

மாதவன், முத்துவேல், மாணிக்கம் மூன்று பேருமே நிமிர்ந்தார்கள்.

''உக்காரு வசந்தா... ப்ளீஸ், கோவப்படாதே! உங்க அத்தம்மா என்ன சொன்னாங்க? அண்ணனுக்குத் தெரிஞ்சு போச்சா?''

''அண்ணனுக்கு இன்னும் தெரியாது. அத்தம்மாகிட்ட மட்டும் அன்னிக்கு சர்ச்சுக்குப் போயிட்டு வர்றப்ப மெதுவாச் சொல்லிட்டேன். என்னமோ சாவுச் செய்தியக் கேட்ட மாதிரி 'ஏசுவே'னு பதறிப் போயிட்டாங்க... 'உன்னை வேலைக்கு அனுப்ப வேணாம்னு தாஸ் அப்பவே அடிச்சிக்கிட்டான். நாந்தான் புத்தி கெட்டுப் போய் உனக்கு ஆதரவாப் பேசிட்டேன்! இப்ப தாஸுக்கு விஷயம் தெரிஞ்சா நம்ம ரெண்டு பேரையுமே உண்டு இல்லேனு ஆக்கிடுவானே'னு புலம்ப ஆரம்பிச்சிட்டாங்க! அத்தம்மாவே இந்த ஆர்ப்பாட்டம் செஞ்சாங்கன்னா, அண்ணனைப் பத்திக் கேக்கவே வேணாம்! என் கழுத்த நெரிச்சுப் புதைச்சிட்டுத்தான் மறுவேலை பாப்பாரு!''

''அதுக்காக? சொல்லாம இருக்கறது தப்பில்லையா? என்ன வசந்தா சொல்றே நீ? இது என்ன, எங்கம்மா அப்பாவுக்குத் தெரியாம நான் சிகரெட் புடிக்கற விஷயம்னு நினைச்சியா? உங்க அத்தம்மாவே சொல்லிட மாட்டாங்களா?''

''மாட்டாங்க! அவங்களுக்கு எம்மேல ரொம்பப் பிரியம் உண்டு. ஆனா, அண்ணங்கிட்ட பயமும் உண்டு! 'உங்கிட்ட நான் சொன்ன விஷயத்தை அண்ணங்கிட்ட சொல்லக் கூடாது, சொன்னீங்கன்னா நான் தற்கொலை பண்ணிக்கிடுவேன்'னு பயமுறுத்தி வெச்சிருக்கேன்!''

மேலே என்ன கேட்பது என்று புரியாமல் மாதவன் பேசாமல் இருக்க, மாணிக்கம் எழுந்து நின்று கொட்டாவி விட்டான். பேசாமல் தலையைக் குனிந்து கொண்டு உட்கார்ந்திருந்த மற்ற மூவரையும் பார்த்து, ''என்னப்பா, எல்லாரும் இப்பிடி உக்காந்திருக்கீங்க? எனக்கு வேலை இருக்கு.... காலைலேர்ந்து ஓர் உருப்படியான சவாரிகூட இன்னும் கிடைக்கலே... ஆட்டோ வேற வெளியே நிக்கிது... இப்ப என்ன பண்ணப் போறீங்க?'' என்றவன், வசந்தா பக்கம் திரும்பி, ''நீங்க இப்ப கிளம்புவீங்களாம்மா?'' என்று கேட்டான்.

முத்துவேல் அவசரமாய்க் கையை நீட்டி, ''இருப்பா, ஏன் அவசரப்படறே! இந்த விஷயமா யோசிக்கறத்துக்காக நான் கூடத்தான் லீவு போட்டுட்டேன். இவங்க பிரச்னைக்கு ஏதாவது ஒரு வழி சொல்ல வேணாமா? மாதவனுக்கு நெருக்கமா இருக்கற நாமே உதவாட்டி எப்படி?'' என்று தடுத்தான்.

''வழி என்ன வழி, பெரிசா! ரெண்டு பேர் வீட்டுலயும் கல்யாணத்துக்கு ஒத்துக்கலை! அவங்களாச் செஞ்சு வெக்கலேன்னா, இவங்களே செய்துக்க வேண்டியதுதான்! இதுல என்ன பெரிய பிரச்னை!'' என்று மாணிக்கம் சொன்னபோது, மாதவன் முகத்தில் கலவரம் வெளிச்சம் போட்டது.

''நாங்களேவா? அப்படீன்னா, ஓடிப்போகச் சொல்றியா?''

''அதெல்லாம் ஏம்பா! நீங்க ரெண்டு பேருமே மேஜரானவங்க... படிச்சவங்க, வேலையில இருக்கறவங்க! ஓடிக்கீடி போகாம இங்கயே நல்ல விதமாக் கல்யாணத்தப் பண்ணிக்கிட்டு, வாழ்ந்து காட்டறத விட்டுட்டு, சின்னச்சின்ன பசங்க மாதிரி 'தெய்வீகக் காதல்'னு பேத்திக்கிட்டு, யோசிக்காம ஓடிப்போற பிஸினெஸ் எல்லாம் எதுக்கு? நம்ம மெக்கானிக் ஷெட் சிவாவும், கோகிலாவும் பைத்தியக்காரத்தனமா ஓடிப்போயிட்டு, அதனால எத்தனை கஷ்டங்கள்... மறந்திட்டியா மாதவா?''

சிவா, கோகிலாவை மாணிக்கம் ஞாபக மூட்டியதும், புதுச் சிந்தனையுடன் மாதவன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

நிரந்தர வருமானமோ, அதைத் தேடிக் கொள்ளும் அளவுக்குப் படிப்போ, அனுபவமோ இல்லாத சிவா, கோகிலா போன்றவர்களே உலகத்தை எதிர்த்துக் கஷ்டங்களைத் தோளில் சுமந்து வாழ துணிச்சலோடு காரியத்தில் இறங்க முடியும் என்றால், ஓரளவு நல்ல அந்தஸ்துள்ள எங்களால் முடியாதா என்ற நம்பிக்கை துளிர்விட ஆரம்பிக்க, குழப்பம் குறைந்து வசந்தாவைப்

பார்த்தான்.

"உனக்கு என்ன தோணுது வசந்தா?"

"ப்ச்... நீங்க திருப்பித் திருப்பிப் பேசினதையே பேசிக்கிட்டு இருக்கீங்க மாது... யாரும் சம்மதம் கொடுக்காட்டியும்கூட நான் என் முடிவுல தீர்மானமாத்தான் இருப்பேன்னு உங்ககிட்ட அடிச்சுச் சொல்லிட்டேன். அதை மறந்திட்டு என்ன கேள்வி இது? ம்? இங்க பாருங்க, கடைசித் தரமா சொல்றேன் — நம்ப ஒண்ணு வாழணும்ன்ற நினைப்பு உங்களுக்கு உண்மையாகவே இருந்தா, மேல மேல பேசறத நிறுத்திட்டு உருப்படியா ஏதாவது ஒரு முடிவுக்கு வாங்க!"

அழுத்தமும் தீர்மானமுமாக வசந்தா பேசி நிறுத்த, மாதவன் எழுந்து நின்றான். இப்படியும் அப்படியும் நடந்தான். நகத்தைக் கடித்தான். யோசித்தான். ஒரு முடிவுக்கு வந்துவிட்ட தினுசில் பேசினான்.

"சரி வசந்தா, யாரையும் எதிர்பார்க்காம நாமளே கல்யாணம் பண்ணிக்கறோம். அதுவும் கூடிய சீக்கிரத்துல... போதுமா? எப்போ எப்பிடி கல்யாணம் நடக்கப் போவுதுனு தான்...."

முத்துவேல் கேலியான குரலில், "மறுபடி யோசிக்க ஆரம்பிச்சிடாத மாதவா... பெத்தவங்களை எதுத்துக்கிட்டு கல்யாணம் செஞ்சிகிட்டா, நின்னு நிதானமா மாப்பிள்ளை அழைப்பெல்லாம் வெச்சு பிரமாதமா எதுவும் நடத்த முடியாது! அதனால, ஏதாவது ஒரு கோவில்ல நாலு நண்பர்கள் சாட்சியா வெச்சு தாலியக் கட்டிட வேண்டியதுதான்! திருநீர்மலைல வேணா...." என, அவன் முடிக்கும்முன் வசந்தா குறுக்கிட்டாள்.

"சர்ச்சைக்கூட நாங்க கோவில்னுதான் சொல்லுவோம்.... அப்ப சர்ச்சுல வெச்சிக்கலாமா?"

"சர்ச்சுலயா? அதுல... நான் எப்பிடி..." என மாதவன் தயங்க, வசந்தா வேதனையுடன் புன்னகை செய்தாள். "வேணாம் மாதவன்... கோவிலும் வேணாம், சர்ச்சும் வேணாம்... இந்த விவாதமெல்லாம் வேணாம்னு நாம ஏற்கெனவே தீர்மானிச்சிட்டதை இவங்ககிட்ட சொல்லுங்க... ஸிம்பிளா ரிஜிஸ்டர் மாரேஜ் சீக்கிரமே பண்ணிக்கறதுதான் பெஸ்ட்னு நான் நினைக்கறேன்...

முத்துவேல் லேசாக விஸில் செய்தான்.

"ஸிம்பிளா ரிஜிஸ்டர் மாரேஜா? ரிஜிஸ்டர் பண்றதுகூட நினைச்சா உடனே பண்ற சமாசாரம் இல்ல, தெரியுமா? எங்க ஆபீஸ் ஃப்ரெண்டு ஒருத்தருக்காக முன்ன நான் அலைஞ்சிருக்கேன்! அப்ளிகேஷன் எழுதிக் கொடுத்து, கொஞ்ச நாள் வெயிட் பண்ணினப்புறம்தான் அவங்க கல்யாணத்த பதிவு செய்வாங்க! இத்தனைக்கும் அவங்க ரெண்டு பேருமே ஹிந்து மதம்தான்! உங்கள மாதிரி வேறவேற மதத்தச் சேர்ந்தவங்களா இருந்தா, அப்ளிகேஷன் கொடுத்தப்பறம் ஒரு மாசத்துக்கு மேல வெயிட் பண்ணணுமாம்..."

வசந்தா கண்களை விரித்தாள்.

"ஒரு மாசமா? அதுக்குள்ள எங்கண்ணனுக்குத் தெரிஞ்சு போய், ஏதாவது ஆயிடுச்சுன்னு? அந்த ஆல்பர்ட் வேற தினம் வீட்டுக்கு வர ஆரம்பிச்சிடுச்சு! ஒரு மாசம் வரை எப்படி தாக்குப் பிடிக்கறது?"



"சிஷ்யர்களெல்லாம் தள்ளாடிக்கிட்டே போறாங்களே, ஏன்...?"

"நான்தான் சொன்னேனே.... இந்தச் சாமியார் "தண்ணியிலே மிதக்க" ரொம்ப நல்லா சொல்லிக் கொடுப்பார்னு!"

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா.

மாணிக்கம் தலையைக் கோதியபடி எழுந்து நின்றான்.

"சமாளிச்சுத்தான் ஆகணுங்க... வேற வழி இல்ல... ப்ராக்டிகலா யோசிக்கணும். சட்டப்படி ஒரு மாசம் தேவைனு சொல்லலேன்னாக்கூட, மத்த ஏற்பாடுகள கவனிக்க ஒரு மாச காலம் நிச்சயமா தேவைப்படும்! இப்பவே கல்யாணத்தப் பண்ணிக்கிட்டீங்கனு வெயுங்க, அதுக்கப்புறம் என்ன செய்வீங்க? கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரினு நீ லாட்ஜுலயே தங்கிகிட்டு, அவங்கள அவங்க வீட்டுக்கே அனுப்பிடுவியா? குடும்பம் நடத்தறதுக்கு ஒரு இடம் வேணாமா? சமைச்சுக் கிமைச்சு சாப்பிட நாலு பாத்திரம் பண்டமாவது வேணாமா? உக்கார, படுக்கனு..."

"ஆமா மாது... இவர் சொல்றது பத்தியெல்லாம் நாம யோசிக்கவே இல்லியே! குடிசையா இருந்தாலும், நமக்குனு ஒரு வீடு வேணும்... அத முதல்ல ஏற்பாடு பண்ணிட்டு, அப்புறம் அதுல குடும்பம் நடத்தத் தேவையான சாமான்களைச் சேகரிக்கணும்! எல்லா ஏற்பாடுகளையும் சரியா செஞ்சு வெச்சிக்கிட்டாதான் மாரேஜ் பண்ணிக்கிட்டு வந்த கையோட யார் தயவும் இல்லாம இருக்கலாம்."

பிரச்னை ஒரு வழியாய்த் தீர்ந்து போன மாதிரி தோன்ற, முத்துவேலும் எழுந்து மாணிக்கத்தை ஒட்டி நின்றான்.

"ஸோ — ஒரு முடிவுக்கு வந்திட்டீங்க... கங்க்ராட்ஸ்... இன்னிக்கே போய் ரிஜிஸ்டர் ஆபீஸ்ல ஒரு அப்ளிகேஷன் எழுதிக் கொடுத்திட்டு, மத்த ஏற்பாடுகளைக் கவனியுங்க... எப்பப்ப எங்க உதவி தேவைப்படுதோ தயங்காம கேளுங்க.. அப்புறம்..."

முத்துவேலும் மாணிக்கமும் கிளம்பிப் போன பிறகு, தானும் தயாராகி வசந்தாவோடு ஜோடியாய் லாட்ஜை விட்டு வெளியேறிய நிமிஷத்தில், பெற்றவர்களை மீறிச் செயல்படும் வருத்தத்தைத் தலையில் தட்டி உட்கார வைத்துவிட்டு மாதவனுள் எதிர்காலத்தைப் பற்றின வண்ணக் கனவுகள் மெதுமெதுவாய் விரிய முற்பட்டன.

(தொடரும்)

'கல்கி' - யின் நண்பர்



* ஆர். கே. சுப்பிரமணிய பிள்ளை.

உங்களைப் போன்ற லட்சக்கணக்கான வாசகர்களின் கரங்களை அலங்கரிக்கும் இந்தக் கல்கி பத்திரிகை தோன்ற ஆதி காரணமாக இருந்தவர்களுள் ஒருவரான ஆர். கே. சுப்பிரமணியப் பிள்ளை அண்மையில் காலமானார் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் இங்கு பதிவு செய்கிறோம்.

ஆர். கே. எஸ். என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட அவர், கல்கி அவர்களின் பால்ய சிநேகிதர். மணல்மேடு கிராமத்தில் அய்யாசாமி அய்யர் நடத்திய பாண்டு ரங்கர் பள்ளிக்கூடம் என்ற சவுக்கண்டி பள்ளியில் மூன்று இணை பிரியா நண்பர்கள் படித்தார்கள். ஆர். கே. எஸ்., முத்து கிருஷ்ணன், பின்னால் 'கல்கி' என்ற புனைபெயரில் பெரும் புகழ்பெற்ற கிருஷ்ணமூர்த்தி.

அப்போதே கிருஷ்ணமூர்த்தியின் கதா காலக்ஷேபம் செய்கிற திறனையும் கதை சொல்லும் ஆற்றலையும் பார்த்து மற்ற இருவரும் அவனை ஊக்குவித்தார்கள். அவனை நாடகம் எழுதச் சொல்லி நடித்து அக்கம்பக்க கிராம மக்களை மகிழ்வித்தார்கள்.

அய்யாசாமி செய்த பூஜைகளாலும் கூறிய பக்திக் கதைகளாலும் கிருஷ்ணமூர்த்திக்குத் தெய்வ பக்தி மிகுந்தது. பாரதியின் பாடல்களைப் படிக்க நேர்ந்ததால் தேச பக்தி உண்டாயிற்று. நாயுடு ஜாதியைச் சேர்ந்த ஒருவனையும் பிள்ளைமார் ஜாதியைச் சேர்ந்த ஒருவனையும் நெருங்கிய நண்பர்களாகப் பெற்றதால் ஜாதி வேற்றுமைகளைக் கடந்து நிற்கவும் அதனை எதிர்க்கவும் துணிவு உண்டாயிற்று.

பின்னால் வாழ்க்கையில் மூவரும் மூன்று திசைகளில் பிரிந்து சென்று விட்டார்கள். ஆர். கே. எஸ். கல்லூரிப் படிப்புக்குப் பிறகு விவசாயத்தில் மட்டுமின்றிக் கட்டட காண்ட்ராக்ட் எடுப்பதிலும் ஈடுபட்டுச் செல்வம் ஈட்டி வாழ்க்கையில் உயர்ந்தார். முத்துக்கிருஷ்ணனோ சமுதாயப் பணியாற்ற ஆர்வம் கொண்டு ராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்து துறவியாகவே மாறிவிட்டார். கல்கி தேசப் பணியாற்றக் கருதி சுதந்திர இயக்கத்தில் ஈடுபட்டார். தாம் ஈடுபட்ட பத்திரிகைத் தொழிலையும் அதற்குப் பயன்படுத்தினார்.

இப்படி மூவரும் வெவ்வேறு திசைகளில் சென்றாலும் அவர்களிடையே நிலவிய ஆழ்ந்த நட்பு மாறவேயில்லை. ஒரு கட்டத்தில் பகுத்தறிவுப் போட்டிகள் ஆனந்த விகடனில் வந்து கொண்டிருந்ததன் காரணமாக அதன் ஆசிரியர் கல்கிக்கும் உரிமையாளர் வாசனுக்கும் இடையில் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. பகுத்தறிவுப் போட்டி நடத்திக் கூப்பனுக்குப் பணமும்

வசூலிப்பதை கல்கி விரும்பாததால் ஆசிரியர் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்ள எண்ணினார். ஆனால் வாசனிடம் மூவாயிரம்ரூபாய் கடன் பட்டிருந்தார் கல்கி. அதைத் திருப்பிக் கொடுத்த பிறகுதான் ராஜினாமாக் கடிதத்தைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று கல்கியின் மனச்சாட்சி கூறியது. இதை அறிந்தபோது மூவாயிரம் ரூபாயைத் திரட்டி எடுத்துக்கொண்டு சென்னைக்கு ஓடி வந்தார் ஆர்.கே.எஸ். அந்தப் பணம் அப்போது பயன்படவில்லை என்பது வேறு விஷயம். வாசன், கல்கிக்குத் தாமே ஒரு புதிய பத்திரிகையைப் பிரத்தியேகமாக ஆரம்பித்துத் தருவதாகக் கூறவே, ராஜினாமா செய்யும் எண்ணம் அப்போதைக்குக் கைவிடப்பட்டது. ஆனால் மூவாயிரம் ரூபாய் என்பது அந்த நாளில் மிகப் பெரிய தொகை. ஏனென்று கேட்காமல், திரும்பி வருமா என்று யோசிக்காமல் நண்பருக்குக் கைகொடுக்க ஓடோடிவந்தார் ஆர். கே. எஸ். என்பதே முக்கியம். உழைப்பும் நேர்மையும் அணிகலன்களாகக் கொண்டு வாழ்க்கையில் உயர்ந்த ஆர். கே. எஸ்ஸின் மாறாத அன்பையும் பண்பையும் விளக்கும் ஒரு நிகழ்ச்சி இது.

விகடன் ஆசிரியராக ஓரளவு வசதியான வாழ்க்கை நடத்திய காலகட்டத்தில் கல்கி, மாம்பலத்தில் ஒரு வீடு கட்ட எண்ணினார். ஆசிரியர் பொறுப்பை விட்டுவிடாமல் வீடு கட்டுவதையும் மேற்பார்வை இடுவது நடக்காத காரியம் என்று அவருக்குத் தெரிந்திருந்தது. அப்போதும் நண்பருக்கு உதவச் சென்னை வந்து தங்கினார் ஆர். கே. எஸ். பார்த்துப் பார்த்து வீட்டைக் கட்டி முடித்துத் தந்தார். பின்னால் ராஜாஜியின் இல்லமாக மாறிய அந்த வீடு, ஐம்பதாண்டுகளுக்கு மேலாகியும் இன்னமும் ஒரு மயிரிழை விரிசல் கூடக் காணாமல் தி. நகர் பஸுலுல்லா சாலையில் சரித்திரப் புகழுடன் கம்பீரமாக நிற்கிறது.

தனி நபர் சத்தியாக்கிரஹம் செய்யும் ஆர்வத்தில் விகடன் ஆசிரியர் பதவியைத் துறந்து வந்த கல்கி, மாயூரத்தில்தான் கைதாகி மூன்றாவது சிறைவாசத்தை அனுபவித்தார். வெளியே வந்த பிறகு நண்பர் சதாசிவத்தின் ஒத்துழைப்புடன் கல்கி பத்திரிகையைத் தொடங்கி நடத்த எண்ணினார். அப்போது சதாசிவம் — எம். எஸ். தம்பதி வழங்கிய மூலதனத்துடன் ஆர். கே. எஸ். அன்புடன் அளித்த ஐயாயிரம் ரூபாயும் சேர்ந்தது.

நண்பர் செய்த சிறிதும் பெரிதுமான எத்தனையோ உதவிகளுக்கு உளமார நன்றி செலுத்தும் முகமாக கல்கி ஒரு காரியம் செய்தார். தமது மகளின் திருமணப் பத்திரிகையில் தம்முடனும் சதாசிவத்துடனும் சேர்ந்து அழைப்பவர்களாக வேறு இருவர் பெயர்களைச் சேர்த்துக்' கொண்டார். ஒருவர் ரசிகமணி டி. கே. சி. மற்றொருவர்......

வேறு யார். ஆர். கே. எஸ். தான்!




தரகர்: ''கல்யாணத்திலே 'ஜானவாசமே' வேண்டாமுன்னு பையன் அபிப்பிராயப்படறான்...''

பெண்ணின் அப்பா: ''அப்படியா, சந்தோஷம்.''

தரகர்: ''அதுக்காகும்செலவைப்'பணமா' தன்னிடம் கொடுத்திடணும்னு, பையனோட அ ம் ம ா, அபிப்பிராயப்படறா...''


— ஆர். வசந்தகுமார்.



பண்டித ரமாபாய் ...அவர் கல்கத்தாவுக்குச் சென்றார். அங்கே மகளிரின் பரிதாப நிலையைக் கண்டு கண்ணீர் வடித்தார். எனவே பால்ய விவாகம், கைம்பெண் மறுமணம் முதலியவை நாட்டில் நீக்கப்பட உள்ளத்தைத் தொடுமாறு சொற்பொழிவுகள் செய்தார்...

இந்திய வரலாறு, பத்தாம் வகுப்பு, தமிழ்நாட்டுப்பாடநூல்வெளியீடு: பக்கம் 150. (மறுபதிப்பு 1986) நீக்கப்பட வேண்டியது எது? கைம் பெண் மறுமணமா? இப் பகுதியா? வாக்கிய அமைப்பு, பொருள் கோவை எதையும், யாரும் பார்க்க மாட்டார்களா?

— ஆர்.பி.எஸ். ராகவன்.



ஊனத்தைத் தோற்கடித்தவர்கள்!

பார்த்தவர்களை ஆச்சரியப்பட வைத்தது அந்தக் கூடைப் பந்துப் போட்டி. அதிகப்படியான பிரமிப்புக்குக் காரணம் அதில் பங்கேற்றவர்கள் ஓடி ஆடவில்லை; சக்கர நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே ஆடினார்கள். ஆட்டம் விறுவிறுப்பாய் இருந்தது. ஒவ்வொரு முறையும் பந்து, கூடைக்குள் போடப்பட்டபோது, ரசிகர்கள் பலமாய்க் கைதட்டினார்கள்.

சக்கர நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, அதனையும் நகர்த்தித் தேவையான போது நிறுத்திச் சமாளித்துக் கொண்டு, அதே சமயம் பந்தையும் 'பாஸ்' செய்து ஆடிய போது, அந்த விளையாட்டு வீரர்களுக்குச் சல்யூட் அடிக்கத் தோன்றியது. இவர்களில் சிலர் ஊனமுற்றோருக்கான உலக ஒலிம்பிக்கில் ஆடிப் பரிசு பெற்றிருக்கிறார்களாம். இதேபோல் டேபிள் டென்னிஸ் டீமும் இருக்கிறதாம்.

இதுபோல, கால் ஊனமுற்றவர்கள் சேர்ந்து கூடைப்பந்து மாட்ச் ஆடுவது சென்னையில் இதுவே முதல் தடவை. பங்கேற்ற இரண்டு டீம்களுமே பூனாவைச் சேர்ந்தவை. அனைவரும் முன்னாள் ராணுவ வீரர்கள். போரால் கால்களில் ஊனம் பெற்றவர்கள். ராணுவத்திலிருந்து விலகிய பின் பூனா அருகில் உள்ள பாதுகாப்புத் துறை அலுவலகத்தில் பணிபுரிகிறார்கள். மாலை நேரத்தில் பாஸ்கட்பால் ஆடிப் பயிற்சி பெறுகிறார்கள்.

மோகன் குமார் என்ற ஊனமுற்ற டாக்டரின் உதவியுடன் சென்னை பாடி லயன்ஸ், மற்றும் லயனஸ் கிளப்புகள் ஏற்பாடு செய்திருந்த பந்தயத்தில் பரிசு வழங்க வந்த ஐ. ஜி. தேவாரம் பேசிய போது, "இவர்களைப் பார்த்தபோது உங்களுக்கு ஒருவிதப் பரிதாப உணர்வு ஏற்பட்டிருந்தால் கூட, இவர்கள் ஆட்டத்தைப் பார்த்ததும் அது ஒரு 'அட்மிரேஷனாய்' மாறியிருக்கும். இங்கு ஆடிய இரண்டு டீம்களில் நிஜத்தில் பார்த்தால் யாருமே தோற்கவில்லை; இரண்டுக்குமே வெற்றிதான். இவர்களிடம் தோற்றது, இவர்களுடைய ஊனம்தான்!" என்றார்.

அதுதான் உண்மை!

— எஸ். சந்திரமௌலி

புகைப்படம்: யோகா.

கோகுலம்

டிசம்பர் '87

* கிறிஸ்துமஸ் பரிசு!

— நார்வே நாட்டுக் கதை





* திப்பிலி ராஜாவின் ஒலிவேட்டை!

— சிரிப்புக் கதை



* அகிலன்:

— என் குழந்தைப் பருவம்



16 பக்க வண்ணப் படக் கதை

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — IV
ராஜ்மோகன் காந்தி

17

பதவி துறக்கக் காரணம் என்ன?

இந்துமதக் கோட்பாடுகள் புனரமைப்பு மசோதா நாடாளுமன்றத்தில் விவாதத்தில் இருந்தது. இந்த மசோதா அங்கு சட்டமானாலும் கூட அதற்குத் தாம் அங்கீகாரம் அளிக்க மறுக்கக் கூடும் என்று ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் பிரதமரிடம் சூசகமாகத் தெரிவித்திருந்தார். இப்படிப் பயமுறுத்தினரே தவிர கடைசியில் ஒப்புதல் அளித்து விட்டார் என்பது வேறு விஷயம். ஆனால் அதற்கு முன்பாக ஒரு சலசலப்பு உருவாகக் காரணமாயிருந்தார். ஸி. ஆர். இந்த மசோதாவுக்கு ஆதரவு தந்தார் என்பது மட்டுமல்ல; அதைவிட முக்கியம், அரசியல் சாசனப்படி அமைச்சரவையின் அறிவுரையை ஏற்று ஜனாதிபதி செயல்பட்டே ஆகவேண்டும் என்ற கருத்துடையவராகவும் இருந்தார். இவ்விஷயத்தில் நேருவுடன் அவருக்குக் கருத்து ஒற்றுமை இருந்தது. அரசியல் சாசனம் பகிரங்கமாக, அமைச்சரவையின் கருத்துப்படிதான் ஜனாதிபதி நடந்து கொள்ள வேண்டும் என்று கூறிவிட்டாலும் அந்தக் கருத்து உள்ளடக்கமாக சாசனத்தில் இருப்பதாக அபிப்பிராயப் பட்டார் ஸி. ஆர்.

அறிஞரும் மதிப்புக்குரியவருமான வழக்கறிஞர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரும் அரசாங்கத்தின் தலைமை வழக்கறிஞரும் இவ்விஷயத்தில் கருத்துக்கள் கூறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். அவர்களுடைய குறிப்புக்கள் கிடைக்கப் பெற்றதும், அவற்றையொட்டி ஸி. ஆர்., நேருவுக்கு எழுதிய ஒரு கடிதம், இந்தப் பிரச்னை தொடர்பாக இருவரும் நெருங்கிக் கலந்தாலோசித்திருப்பதைச் சுட்டுகிறது.

அல்லாடியின் சிறப்பான குறிப்புக்களை இத்துடன் திருப்பி அனுப்புகிறேன். இக்குறிப்புக்களை அரசாங்கத் தலைமை வழக்கறிஞரின் குறிப்புக்களுடன் சேர்த்து ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்ற தங்கள் கருத்தை நான் ஆமோதிக்கிறேன்.

"ஜனாதிபதிக்குக் குறிப்புக்களை அனுப்பும்போது ஆறுவது பக்கத்தில் நான் குறியிட்டுள்ள வார்த்தைகளை ஞாபகமாக நீக்கிவிடவும். மேலும் தமது குறிப்புக்களை இணைத்து அனுப்புகையில் அல்லாடி தங்களுக்கு எழுதியுள்ள கடிதத்தின் சில பகுதிகளில் நான் குறியிட்டுள்ளேன். இந்தப் பகுதிகளை ஏதேனும் ஒரு விதத்தில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கவும்."


• அல்லாடி: சிறப்பான குறிப்புக்கள்

இதே காலகட்டத்தில் ஸி. ஆர். தாம் செய்து வந்த பணியில் மனநிம்மதி இழந்து தவித்து வந்தார் என்பதும் அது நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது என்பதும் உண்மை. இதற்கு ஒரு காரணம் அ. இ. காங்கிரஸ் தலைவர் டாண்டனிடம் நேரு நடந்து கொண்ட விதம். பஞ்சாபில் காங்கிரஸ்காரர்கள் நேருவின் அதிருப்தியைச் சம்பாதித்துக் கொண்டனர். அவர்களைச் சரியாக வழிநடத்திக் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளுமாறு செய்ய டாண்டன் தவறிவிட்டார்; நாடாளுமன்ற காங்கிரஸ் கமிட்டியும் தவறிவிட்டது என்பது நேருவின் மனத்தாங்கல். இதனால் நாடாளுமன்ற காங்கிரஸ் கமிட்டியிலிருந்து தாம் ராஜினாமா செய்யப் போவதாக நேரு டாண்டனுக்குத் தெரியப்படுத்தினர். அதன் பிறகு ஸி. ஆருக்கு ஒரு கடிதம் எழுதித் தாம் செய்துள்ள காரியத்தை அதில் குறிப்பிட்டார். டாண்டன் — நேரு ஆகியோருக்கு இடையில் தம்மை அணிசேரா நடுநிலையாளராக ஸி. ஆர். கருதிய போதிலும் நேரு பக்கம் இலேசாகச் சாய்ந்திருந்தார் என்பதும் உண்மையே. அப்படியிருந்தும் தம்மைக் கலந்தாலோசிக்காமலும் தம்மிடம் முன்கூட்டியே தெரிவிக்காமலும் நேரு நடந்து கொண்டது ஸி. ஆருக்கு மனவருத்தத்தை அளித்தது. நேருவுக்கு ஸி. ஆர். எழுதினர்:

நாடாளுமன்ற காங்கிரஸ் கமிட்டியிலிருந்து 'ராஜினாமா செய்ய விரும்புவதாக டாண்டனுக்கு நீங்கள் எழுதியுள்ளது பற்றி

எனக்குத் தகவல் தெரிவிக்கும் உங்கள் கடிதம் கிடைக்கப் பெற்றேன். நீங்கள் பின்பற்றுகிற மார்க்கம் இந்த நாட்டுக்குப் பெரும் துரதிர்ஷ்டமாகும். இதைப் பார்க்கும் போது, என்னைப் பற்றிய ஒரு விஷயத்தை யும் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். அரசாங்கப் பொறுப்பிலி ருந்து என்னை எப்போது விடுவிப்பீர்கள் என்பதை நீங்கள் உடனே எனக்குச் சொல்ல வேண்டும். நான் உபயோகமாக இருந்த காலம் முடிந்து விட்டதாகத் தோன்றுகிறது. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அமைதியாக நான் வெளியேறுவதே நல்லது.

ஸி. ஆரின் ராஜினாமாவை நேரு கோர வில்லை. ஆனால் சீக்கிரமே இன்னொரு மோதல் உருவானது. நேரு மந்திரி சபை யில் அங்கம் வகித்த கித்வாயும் அஜித் பிரசாத் ஜெய்னும் நீண்ட காலமாக டாண்ட னின் எதிரிகள். அவர்கள் காங்கிரஸைத் துறந்து, கிருபளானி ஆரம்பித்திருந்த கிருஷக் மஜ்தூர் பிரஜா கட்சி என்ற புதிய எதிர்க் கட்சியில் சேர்ந்தனர். தமது மந்திரி சபை யில் இருவரும் நீடிக்க வேண்டும் என்று நேரு விரும்பினார். ஆனால் டாண்டன் தீவிர மாக ஆட்சேபித்தார். இதனால் கித்வாயை அனுப்பிவிட்ட நேரு, ஜெய்னை விடமாட் டேன் என்றார், பிடிவாதமாக. உத்தரப் பிரதேச காங்கிரஸ் கட்சி ஜெயினை நீக்கு மாறு நேருவைக் கேட்டுக் கொண்டது. நேரு, கித்வாய், டாண்டன், ஜெயின் ஆகிய நால்வருமே உத்தரப்பிரதேச காங்கிரஸ் காரர்கள்தான். மாகாண காங்கிரஸ் கமிட்டி யின் கோரிக்கையை நேரு ஏற்கவில்லை என்ப தோடு நாடாளுமன்ற காங்கிரஸ் கமிட்டி, காங்கிரஸ் காரியக் கமிட்டி ஆகிய இரு அமைப்புக்களிலிருந்தும் ராஜினாமா செய் தார். தமது ராஜினாமாக் கடிதத்தின் நகலை இணைத்து ஸி. ஆருக்கு ஒரு கடிதம் எழுதி னார்:

"இந்தக் கடிதம் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்காது என்பதோடு, இலேசான அதிர்ச்சியாகவும் இருக்கும். என்னை மன்னி யுங்கள். ஆனால் நான் அவசரப்பட்டு எதை யும் செய்யவில்லை. இந்த விஷயத்தைக் குறித்து நான் யோசித்த அளவுக்கு வேறு எந்தக் காரியம் பற்றியாவது யோசித்திருக் கிறேனா என்பது சந்தேகமே." (6.8.51)

ஆக, ஒரு காரியத்தைச் செய்துவிட்டு — நடந்து முடிந்த விஷயம் பற்றி — ஸி. ஆருக்கு நேரு தகவல் தெரிவிப்பது இது இரண்டா வது தடவை. மேலும் இம்முறை ராஜினாமா செய்வதாக வெறும் அச்சுறுத்தல் அல்ல; முடிந்த முடிவாக ராஜினாமா செய்தாகி விட்டது. டாண்டன் விட்டுக் கொடுக்க வில்லை என்றால் இந்த ராஜினாமாவின் விளை வாகக் காங்கிரஸ் பிளவுபட்டுப் போகும். தயக்கமோ, தடுமாற்றமோ இன்றி ஸி. ஆர். மூன்றேவாக்கியங்களில் தமது பதிலை அமைத் தார்:

"இது எனக்குப் புரியவில்லை. இப்படியெல் லாம் செய்து காங்கிரஸைக் குழப்பி அழிப் பதற்கு முன்னதாக என்னை நீங்கள் விடு வித்துவிட வேண்டும். தயவு செய்து பைத் தியக்காரனாகி விடாதீர்கள்!"



• கிருபளானி: புதிய எதிர்க்கட்சி

கட்சியைக் காப்பாற்ற டாண்டன்தான் விட்டுக்கொடுத்தார் — கண்ணியமான முறை யில் எப்படி விட்டுக் கொடுக்க முடியுமோ அப்படி. காங்கிரஸ் தலைவர் பதவியை ராஜி னாமா செய்தார். நாடெங்கும் காங்கிரஸ் அமைப்புக்கள் நேருவே காங்கிரஸ் தலைவராக வேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றின. நாடாளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர்களும் இதே கோஷத்தை எழுப்பி னார்கள். ஓராண்டுக்கு முன்னதாகத்தான் நேரு, டாண்டனிடம் "நான் பிரதமராக நீடிக்கும் வரை காங்கிரஸ் தலைமை என்ற கூடுதல் பொறுப்பையும் கௌரவத்தையும் ஏற்பது முறையல்ல என்பதில் தீவிர நம் பிக்கை உடையவனாக இருக்கிறேன்" என்று கூறியிருந்தார். (8.8.50) ஆனால் இப்போது நேரு வற்புறுத்தலுக்கு இணங்கத் தயாராக இருந்தார்; காங்கிரஸ் கட்சியும் வற்புறுத்தத் தயாராக இருந்தது! சில மாதங்களில் பொதுத் தேர்தல் வர இருந்தது. நேரு காங்கிரஸ் தலைவராக இருப்பது வோட் டுக்கள் குவிய உதவும். செப்டம்பர் தொடக்கத்தில் நேரு காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காரியக் கமிட்டி யில் சேருமாறு ஸி. ஆரை நேரு கோரிய போது ஸி. ஆர். மறுத்து விட்டார்.

தேர்தல் முடிந்து, வருகிற ஆண்டு ஏப்ரலில் புதிய நாடாளுமன்றம் கூடும் வரை ஸி. ஆர் பதவியில் நீடிக்க வேண்டும் என்று நேரு சொல்லிப் பார்த்தார். ஆனால் ஸி. ஆர். தமது மனச்சாட்சியின் குரல் தம்மை விடைபெறுமாறு வற்புறுத்துவதாகப் பதிலளித்தார். பதவி துறப்பது என்ற அவரது தீர்மானம் பகிரங்கமாக அறிவிக்கப் பட்டது. ஆனால் அதற்காகத் தரப்பட்ட கார ணங்கள் — வயது, களைப்பு — முழு உண்மை களை வெளியிடவில்லை. ஆழ்ந்த யதார்த்தம் அவருடைய சோகமும் மனக்கசப்புமே. இந்தக் காலகட்டத்தில் அவர் லவுண்ட் பேட்டனுக்கு எழுதிய ஒரு கடிதம் இதனை வெட்டவெளிச்சமாக்குகிறது.

(தொடரும்)



கதை கொஞ்சம் 'கூ' வண்டிதான்.

பெரியவர் தம் மகனை சங்கீதத்தில் பெரும் புள்ளியாக்கித் தமது நெடுநாள் கனவான சங்கீத பாரதி குருகுலத்தை அவன் மூலம் நிறுவிவிடலாம் என்று எண்ணும் வேளையில், அந்தச் சங்கீத இளம் மேதை ஒரு விபத்தில் இறந்துபோக, முதல் அதிர்ச்சி.

சத்யநாராயணா தளர்ந்து விடாமல், மூன்று அநாதைச் சிறுவர்களை எடுத்து வளர்த்து, அவர்களைச் சங்கீத வித்வான்களாக்கி, அவர்கள் மூலம் சங்கீத பாரதியை நிறுவ முயற்சி செய்கிறார். அநாதைப் பையன்கள் வளர்ந்து, சங்கீத வித்வான்களானதும் எடுத்து வளர்த்தவரை ஏமாற்றி விட, பெரியவரின் மூத்த மருமகளான சுமலதா, சங்கராபரண மஞ்சுபார்கவி ஸ்டைலில் தம்முடைய குழந்தையைச் சகல வித்தைகளிலும் தேர்ச்சியடையச் செய்து, குடும்பத்தை ஒன்று சேர்த்து, சங்கீத பாரதி நிறுவ உதவி பண்ணுகிறார்.

கே.விஸ்வநாத்திற்கு இந்தப் படத்தில் வேறு யார் மீதும் கண்ணில்லை; சிறுவன் ஷண்முக சீனிவாஸ் மீது மட்டுமே இரண்டு கண்களையும் பதித்திருக்கிறார். தலையில் விஸ்கி பாட்டிலுடன் காலுக்குக் கீழே பித்தளைத் தட்டுடன் ஒரு நடனம், பஞ்சபாண்டவர்களுக்கு உதவும் ஸ்ரீகிருஷ்ணனின் விஷமச் சிரிப்பு, கருணை மழைக் கண்கள் என்று ஷண்முக சீனிவாஸை அமர்க்களப்படுத்தி இருக்கிறார்(ன்).

இந்தப் பக்கம் ராஜசேகர் வருகிறார். அந்தப் பக்கம் சுமலதா நிற்கிறார். தலையை லேசாகச் சொறிந்து கொள்ளுதல். கால் பெருவிரல் கோலம். மெல்ல ஒரு பார்வை. அப்புறம் அந்தப் பூ.

காதலை மிக மென்மையாக விஸ்வநாத் வெளிப்படுத்தியிருக்கும் விதம் பாராட்டப் படவேண்டிய ஒன்று.

சுமலதா பெரிய விழிகளை உருட்டி மான் போல் பார்க்கிறார். மலைமடுவில் காணக் கிடைக்கும் பளிங்கு போன்ற சுனை நீர் என்று அவரைச் சொன்னால், பாய்ந்து வரும் அருவி என்று அருணாவைச் சொல்லலாம். சண்முக சீனிவாஸைப் பார்த்து அவர் கொஞ்சுவதும் மயங்குவதும், கணவன் அபேஸ் செய்ய முயற்சி செய்யும் பர்ஸை ஒரு முறைப்புடன் திரும்ப வாங்கித் தாராளதானம் செய்வதும் உதடுகளிலிருந்து சிரிப்பைச் சிந்த வைக்கும் டைரக்டருக்கு வெற்றி.

பாடல்கள் 'பூரா' சர்க்கரை இனிமை.

கே. விஸ்வநாத் திட்டமிட்டுத் திட்டமிட்டு ஒவ்வொரு காயாக நகர்த்தித் தமது சதுரங்க விளையாட்டைக் காண்பிக்கிறாரா; முதல் பாதியில் வேகம் கொஞ்சம் மட்டுதான். பின்பாதி, சண்முக சீனிவாஸ், அருணா என்று ஜிகு ஜிகு ஜிகு ஜிகு.... நல்ல படம்தான் என்றாலும் சங்கராபரணச் சிலிர்ப்பை ஏற்படுத்தவில்லை என்பதை டைரக்டர் மறுக்க முடியாது.

— ஜெயமன்மதன்

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157.
ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை — 600 034. போன்: 473389.

ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/-; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 280/-; விமானத் தபால் ரூ. 680/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/-; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 340/-.


இப்போது!
கேர்ஃப்ரீ
டியோடரண்ட்
ஸேனிட்டரி நேப்கின்கள்
முழுப் பாதுகாப்புடன் கூட,
வாடை நீக்கிய
புத்துணர்வுக்கு
கேர்ஃப்ரீ டியோடரண்ட் ஸேனிட்டரி
நேப்கின்கள், மாதவிடாயின்
வாடையைக் குறைத்து உதவி,
சுத்தம் கமழும் புத்துணர்வோடு
வைக்கிறது உங்களை.
கேர்ஃப்ரீ டியோடரண்ட் உங்களைப்
பாதுகாப்பதோடு புத்துணர்ச்சி
பொலிவையும் செய்கிறது.
Carefree
Deodorant
Johnson & Johnson
கேர்ஃப்ரீ டியோடரண்ட் ... உங்களுக்கு மிகவும் தேவைப்படும் நேரங்களிலே புத்துணர்வு
சென்னை, டெல்லி நகரங்களில் மட்டுமே கிடைக்கும்.

இனிய
நேரங்கள்
மனதிலே
பதிந்து
இனிப்புடன்
கலந்திட...



நியூட்ரின்
சாக்லேட்
எக்லேர்ஸ்

நியூட்ரின்

இன்சுவை இயற்கையிலேயே!

பாலும், வெண்ணெயும், சாக்லேட்டும்
திரண்டு அளிக்கும் அருஞ்சுவை
பேரின்பம்

நியூட்ரின்

- இந்தியாவில் மிக அதிகமாக
விற்பனையாகும் மிட்டாய்கள்

